
# வாலி வதம்...!



சுரேஷ் குமார்

அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் நமஸ்காரம்..!

இராமாயணத்தில் சர்ச்சைக்குரிய விஷயங்களில் ஒன்று "வாலி வதம்" ஆகும்.

இன்றுவரை, இதைப் பற்றிய விவாதங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால், வால்மீகி இராமாயணத்தை ஆராயப் புகுந்தால், நிறைய விஷயங்கள் காணக்கிடைக்கின்றன.இந்த வால்மீகி ராமாயணத்தின் அடிப்படையிலும், அடியேன் திரட்டிய பல்வேறு தகவல்களையும் கொண்டு வாலிவதம் தொடர்பாக, வழக்கம் போன்ற கற்பனை உரையாடல்களுடன் ஒரு தொடரை எழுத, அஞ்சனை மைந்தன் அருளால், அடியேன் உத்தேசித்திருக்கிறேன்.

முக்கியமான விஷயங்களைப் பற்றி மட்டுமே எழுதி, தொடரை இயன்றவரையில் மிகவும் நீண்டுவிடாமல் பார்த்துக்கொள்கிறேன்.

ஆனாலும், தலைப்பை ஒட்டிய சில அரிய தகவல்களை அளிக்காமல் விட்டுவிட்டால், "வாலி வதம்" தவறாகப் பேசப்படுவது சரி என்றாகிவிடும் என்கிற காரணத்தினால், தவிர்க்க முடியாது பதிவுகளின் எண்ணிக்கை நீளுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அடியேன் இவ்விடத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

எப்பொழுதும் போல, தங்கள் ஒவ்வொருவரின் பேராதரவையும், தொடர் ஊக்கத்தையும் ப்ரார்த்திக்கிறேன்!

......... என்றும் அன்புடன்

சுரேஷ்



## பகுதி -1.

பூர்ண கும்பமேந்தி வாலியை வரவேற்றாள் தாரை. த்ருஷ்டி கழிய மங்கள ஆரத்தியும் சுற்றினாள். வெற்றிக்களிப்பில் வந்த வாலி, தன் மனைவியின் செயலால் இன்னமும் அகமகிழ்ந்து போனான். எத்தனையோ விழிகள் பார்த்திருக்க, அவளை அப்படியே ஆசையோடு ஆலிங்கனம் செய்து கொண்டான்.

நாகரீகம் கருதிய தாரை, வாலியைச் சமாளித்து, மெதுவாக அரண்மனைக்குள் அழைத்துச் சென்றாள். திடகாத்திரமான கணவனின் தேகத்தைத் தன் கண்களாலேயே ஒருமுறை அளந்தாள்..

"என்ன தாரா, எனக்கு ஏதானும் அடிபட்டுருக்கான்னு பாக்கறயா?.."

இடிபோல சிரித்தான் வாலி..

வெட்கத்தோடு தலைகவிழ்ந்தாள் தாரை.

அவளது அழகு மேலும் கூடியதை ரசித்தான் வாலி..

தன் மனைவியின் அழகைப் பற்றிய பெருமிதம் எப்போதுமே வாலிக்கு உண்டு!

அவள் ஒன்றும் சாதாரண அழகி அல்ல!..பாற்கடலைக் கடைந்த பொழுது வந்த பதினான்கு வகையான பொக்கிஷங்களோடு தாரையும் ஒரு அரமகளாக அவதரித்தவள்..வாலியின் மீது தேவர்கள் கொண்ட ப்ரீதியால், தாரையை வாலி தன்னவளாய் ஆக்கிக் கொண்டவன்!

எத்தனையோ பெரிய வீரனாய் இருந்தாலும், தனது மனைவி தாரையின் அழகுக்கு மட்டும் தோற்றுப் போயிருந்தான் வாலி..இப்பொழுது அந்தப் பேரழகியின் வெட்கம், அவனை மயக்கமுறச் செய்தது.. மெல்ல அவளை நெருங்க யத்தனித்த சமயம்...
அறையின் வாசலில், சுக்ரீவனின் குரல் கேட்டது..
"அண்ணா... என்ன காரியம் செஞ்சுட்டு வந்துருக்கேள் நீங்க...
கொஞ்சம் ஜாக்ரதையா இருந்துருக்கக் கூடாதா?.."
வேளைக் கெட்ட வேளையில் தம்பி வந்தது ஒரு கோபம்...
தன் மீது தவறு இருப்பதாகச் சொல்கிறானே என்று இன்னொரு கோபம்..
முகம் சிவந்தான் வாலி..

## பகுதி –2

முகக்குறிப்பை வைத்தே அடுத்தவர் மனதின் எண்ண ஓட்டத்தை அறிவதில் வல்லவனான சுக்ரீவனுக்கு, வாலியைப் புரிந்து கொள்ள முடிந்தது. இருந்தாலும் விஷயத்தின் தீவிரம், அவனை அண்ணனின் முன் நிற்கச் செய்திருந்தது..

"வாலி அண்ணா.. நீங்க துந்துபிய கொன்னேள்...சரிதான்... அவனோட ஸரீரத்த என்ன பண்ணேள்?.."

வாலிக்கு இப்போது சினம் தலைக்கேறியது..

"அறிவில்லாம கேக்கறயே.. செத்துப் போனவனோட ஸரீரத்த வெச்சுண்டு என்ன பண்ணுவா?.. அவன் பேர்ல வந்த ஆத்திரத்தில காலாலயே தூக்கி அடிச்சேன்.."

"அது எங்க போய் விழுந்துதுன்னு தெரியுமா அண்ணா?"

"அது எங்க விழுந்தா எனக்கென்ன?.. இது ஒரு விஷயம்னு கேக்க வந்துட்டயா?.."

"அண்ணா... கொஞ்சம் நான் சொல்றத காதில வாங்கிக்கோங்கோ...
நீங்க காலால தூக்கி அடிச்சுட்டு வந்த அந்த துந்துபியோட ஸரீரம், தபஸ் பண்ணிண்டிருந்த மதங்க முனிவர் ஆசிரமத்துல போய் விழுந்துருக்கு....
அந்த எடமே இரத்த ஆறு ஓடி, அசுத்தமாயிருக்கு.

அதனால முனிவர் ரொம்ப கோபப்பட்டு ஒங்களுக்கு சாபம் கொடுத்துருக்கார்..."

"சாபம்" என்ற வார்த்தையைக் கேட்டதும், தன்னாலே, தாரை மேலிருந்த மயக்கம் சட்டென்று இறங்கி, தன்நிலைக்கு வந்தான் வாலி.
"தம்பி...நீ என்ன சொல்ற?..

அத்தனை யோஜனை தூரம் போயா அவன் ஸரீரம் விழுந்துது?.."

"ஆமாண்ணா ஒங்க பலம் அப்படி! ஆனா.. இப்போ அதுவே ஒங்கள ஒரு இக்கட்டில மாட்டிவிட்டிருக்கு!.."

"சரி, சொல்லு தம்பி.. என்ன சாபம் கொடுத்துருக்கார் முனிவர்?",அச்சத்தோடு வினவினான் வாலி..

இந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த தாரையையும் இப்பொழுது அச்சம் தொற்றிக்கொண்டது. மெதுவாகத் தன் கணவன் அருகில் வந்தவள், அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு, சுக்ரீவன் சொல்லப் போகிற விஷயத்தைக் கேட்கத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள்...

"இந்தத் தகாத காரியத்த செஞ்சவன் யாரானாலும், அவன் இனிமே இந்த எல்லைக்கு வந்தா, அவனோட தலை சுக்கு நூறா வெடிச்சுடும்னு முனிவர் சாபம் கொடுத்துருக்கார்.. இது இப்போதான் நம்மளோட ஒற்றர்கள் மூலமா தெரிஞ்சுது..
நீங்க ஏன் இப்டி பண்ணேள் அண்ணா?.."

ஆதங்கத்தோடு வினவினான் சுக்ரீவன். பதிலெதுவும் பேசாமல் கலங்கிப் போய் உட்கார்ந்தான் வாலி..

"நாம இப்பவே முனிவர்கிட்ட போய் மன்னிப்பு கேக்கலாம்...கௌம்புங்கோ"
ஆறுதலாய் பேசிய தாரையை இடைமறித்தான் சுக்ரீவன்..

"எப்டி அங்கப் போகமுடியும் அண்ணி?.. அந்த எல்லைய மிதிச்சால அண்ணாக்கு ஆபத்தாச்சே..."

தாரையின் கண்கள் கலங்கின..

"அப்போ, இதுக்கு விமோசனமே இல்லயா?.."

"நடந்தது நடந்து போச்சு அண்ணி, இனிமே அண்ணா அந்தப் பக்கமே போகாம இருக்கறதுதான் அவருக்கு நல்லது!.."
சுக்ரீவன் கூற்றில் உண்மை இருப்பதைப் புரிந்து கொண்ட தாரை, இப்போது கணவன்பக்கம் திரும்பினாள்..

"அப்படி என்ன ஒங்களுக்கும் துந்துபிக்கும் ஒரு விரோதம்? அவன கொல பண்ற அளவுக்கு போயிருக்கேள்னா, ஏதோ பெரிய விஷயம் ஒங்களுக்குள்ள இருக்கணும்.. அது என்னனு சொல்லுங்கோ.."
என்னதான் மனைவியின் அழகில் பைத்தியமாகக் கிடந்தாலும், அவள் இப்படித் தனது சொந்த விஷயத்தில், ஒரு எல்லையைத் தாண்டி மூக்கை நுழைப்பது வாலியை எரிச்சலடையவே செய்தது...

## பகுதி –3

என்னதான் தான் பெரிய அழகியாக இருந்தாலும், தன்னைத் தாண்டியும் வாலிக்குப் பெண்களின் தொடர்பு இருப்பதைத் தாரை அறிந்தே இருந்தாள்.வானர சாதியினருக்கு இது சகஜம்தான் என்றாலும், ஏனோ தாரை, வாலியை யாருடனும் பங்குபோட்டுக்கொள்வதை என்றுமே விரும்பியதில்லை.

ஒரு பெண்ணின் காரணமாகத் தங்களுக்குள் எழுந்த போட்டியே, வாலிக்கும் துந்துபிக்கும் இடையே பகை வளர்ந்துள்ளதாக, நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அவள் செய்தியைச் சேகரித்து வைத்திருந்தாள். அதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கே, இப்பொழுது அவள், துந்துபியைக் கொன்றதன் காரணத்தை வாலியிடம் கேட்டாள். அவள் எண்ணத்தை ஊகித்தான் வாலி. அவளுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அவன் மனதில் பட்டது. அதனால், ஒரே வரியில் தாரையின் வாயை அடைத்தான்.

"தாரா.. ஒனக்குத் துளியும் சம்பந்தம் இல்லாத விஷயத்துல நீ தலயிடாதே..அது எனக்குப் பிடிக்காது.."

"இனி இவரிடம் பேசுவதால் இலாபமில்லை!" என்றுணர்ந்தவளின் விழியோரங்களில், கழிவிரக்கத்தால் அவளையும் மீறி நீர் துளிர்த்தது..

வாஸ்தவத்தில், துந்துபியுடனான வாலியின் சண்டை, பெண்ணைக் காரணமாகக் கொண்டு ஏற்படவில்லை! தினவெடுத்த தன் வீரத்தைக் காட்டிக்கொள்ள, எருமை முகம் கொண்ட துந்துபி, மூவுலகங்களிலும் உள்ள ஒவ்வொரு வீரனையும் தன்னோடு போர் புரிய அழைத்துக் கொண்டிருந்தான். முப்பெருந்தெய்வங்களான அரி, அரன், அயனிடமும் கூட, அவன் தனது தோள் வலியைக் காட்ட அழைத்தான்..

ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைக் கைகாட்ட, அவன் கடைசியில் வாலியிடம் வந்து சேர்ந்தான். தன் வாசலில் வந்துநின்று, தன்னிடமே அறைகூவல் விடுகின்ற துந்துபியின் ஆணவம், வாலியைப் பொங்கச் செய்தது!

"என்னிடமேவா?.." என்று அவனுள் எண்ணம் துளித்த அதே நொடியில், அவன் துந்துபியைச் சுழன்றாடிக் கொண்டிருந்தான்! யார் யாரைத் தாக்குகிறார்கள் என்று அறிய முடியாதபடி, அவர்கள் யுத்தத்தில் வேகம் இருந்தது!..

இருவருக்குமே மற்றவர் உயிரைத் தாம் பறித்துவிட வேண்டும் என்ற தாகமும் இருந்தது. நாட்கணக்கில் யுத்தம் நீடித்தது. கொஞ்சம் கொஞ்சமாக நலிவு காண ஆரம்பித்தான் துந்துபி. ஆனால் வாட்டமே அடையவில்லை வீரனான வாலி! துந்திபியின் கொம்புகளை லாவகமாகப் பாய்ந்து பிடித்தவன், அவனை மாவலி சுற்றுவது போல் சுற்றித் தரையில் ஓங்கி அடித்தான்..

அடித்த வேகத்திலேயே துந்துபியின் உயிர் விண்ணோக்கி சென்றது. உடலோ மண் நனைத்திருந்தது! இறந்துவிட்டான் என்பதை அறிந்தும், அடங்காத

ஆக்ரோஷத்துடன், வாலி காலால் உந்தி எறிந்த துந்துபியின் உடல்தான், மதங்க முனிவரின் ஆஸ்ரமத்தில் வந்துவிழுந்திருந்தது. அதுவே முனிவரின் சாபத்திற்கும் வழிவகுத்தது..

"செத்தும் கெடுத்தானோ துந்துபி?.." என்று வாலியையும் இப்போது மனம்நொந்து வருந்தவும் வைத்தது...

## பகுதி –4

வாலியினால் கொல்லப்பட்ட துந்துபியின் மிக நெருங்கிய நண்பன் மாயாவி. அவர்கள் இருவருக்குமிடையே நிலவிய அன்பு, வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டதாய் இருந்தது. துந்துபி இறந்த சேதியைக் கேள்விப்பட்ட மாயாவி சொல்லொணாத துயரடைந்தான். அவனால், நண்பனது மறைவை, அவ்வளவு எளிதாக ஜீரணித்துக்கொள்ளவும் இயலவில்லை! ஏற்றுக்கொள்ளவும் இயலவில்லை!

இத்தனைக்கும் காரணமான வாலியின் மீது அவனது அத்தனை சினமும் திரும்பியது.....

"என் நண்பனின் மரணத்துக்கு அந்த வாலி பதில் சொல்லியே ஆகவேண்டும்!
ஒன்று நான் இருக்க வேண்டும்!
இல்லையேல் அவனிருக்க வேண்டும்!
இருவரில் யார் இருக்கப் போகிறார் என்பதை ஒருகை பார்த்துவிடலாம்" என்று கங்கணம் கட்டிக்கொண்டு, ஒரு அந்திப்பொழுதில் வாலியின் இருப்பிடத்தைத் தேடிவந்து, அவனைப் போருக்கு அழைத்தான்.

வாலியோ மது, மாது என்று போதை தலைக்கேறி மயங்கிக்கிடந்த வேளை அது!..
மாயாவி தன்வாசல் வந்து நிற்பதையும், தன்னைப் போருக்கு அழைப்பதையும் உணராத நிலையிலிருந்த அவனைத் தாரையும், சுக்ரீவனும் சென்று சந்தித்தனர்.
இந்தமாதிரி நேரங்களில், யார் இடையூறாக வந்தாலும், வாலி அவர்களை மன்னித்ததாய் சரித்திரமே இல்லை! ஆனால் இப்பொழுதோ, எதையும் உணரும் நிலையில் அவன் இல்லை!

தன்நினைவை இழந்து பெண்களின் மடியில் வீழ்ந்து கிடந்தவனுக்கு, வந்து நிற்கின்ற தம்பியையும், தாரத்தையும் தெரியவே இல்லை! சுக்ரீவனின் பெரும் போராட்டத்துக்குப் பிறகே, அவனுக்குச் சுயநினைவு வந்தது!

கட்டிய மனைவியிடம் கையும் களவுமாய் பிடிபட்ட அவமானம் ஒருபுறம். அதற்குத் துணைவந்த தம்பியின் மேல்வந்த ஆத்திரம் ஒருபுறம். இரண்டையும் மறைக்க, அந்த அரண்மனையே இடிந்து விழுந்துவிடும் போல், உரத்த கர்ஜனை செய்தான்.நிமிர்ந்து நின்று, தனது பிடரி மயிர் சிலும்ப ஒருமுறை உதறிக்கொண்டான்.
கண்கள் கோவைப் பழமாய்ச் சிவந்திருந்தன. மார்பு புடைத்துக்கொண்டு நின்றது. வாயிலிருக்கின்ற பற்கள் தெரிகின்ற அளவிற்கு விகாராமாய் ஒரு பெருஞ்சிரிப்பு சிரித்தான்.தனது தொடைகளை இரண்டு கைகளாலும் ஆரவாரமாய்த் தட்டினான்.

கால்கள் பூமியில் அழுந்தியிருந்த விதம், அவை எதிரியின் தலைமேல் ஏறி நிற்கின்றனவோ என எண்ணும்படியாய் இருந்தது! ஒரு ஹுங்காரத்தோடு, தலைவாசலை நோக்கிக் கிளம்பினான்...

"அண்ணா... தனியா போக வேணாம்... நானும் வரேன்... இருங்கோ.."

அலட்சியமாய் சுக்ரீவனைத் தனது இடது கரத்தினால் தள்ளிவிட்டவன், மாயாவியைச் சந்திக்கத் தனியே புறப்பட்டான்..

ஆனால் தாரைக்கோ, கணவன் தனியனாய் செல்வதில் சிறிதும் உடன்பாடில்லை..

"தம்பீ!.. அவர் சொன்னா சொல்லட்டும்... நீங்க பின்னாடியே போங்கோ.. அவரத் தனியா விட வேணாம்.. எனக்கென்னவோ ரொம்ப பயமா இருக்கு.."

"அண்ணி.. அப்டியெல்லாம் எங்க அண்ணாவத் தனியா விடுவனா?.. நிச்சயமா நான் தொணைக்குப் போவேன்.. நீங்க நிம்மதியா இருங்கோ.."

சுக்ரீவனின் பதிலில், தாரை சற்று ஆஸ்வாஸம் அடைந்தாள். ஆனால் நிம்மதி இனி வாழ்வில் வெகு காலத்துக்கு இருக்கப் போவதில்லை என்பதை இருவருமே அப்போது அறிந்திருக்கவில்லை!

## பகுதி –5

மாயாவியை ஓடஓட விரட்டி யுத்தம் செய்தான் வாலி.......
சுழன்று சுழன்று தாக்கினாலும் சற்றும் தளராத வாலியின் வலிமைகண்டு மாயாவி அசந்தே போனான்..

ஒருகட்டத்தில், "இனியும் நம்மால் தாங்க இயலாது" என்றெண்ணியவன், எவருமே நெருங்க அஞ்சுகின்ற மிகப் பயங்கரமான ஒரு குகையினுள் தஞ்சம் புகுந்தான்.
ஆனால், அப்பொழுதும் விடாமல் பின்தொடர்ந்த வாலி, குகையினுள் தானும் ப்ரவேசித்தான். உள்ளே நுழைவதற்கு முன், தான் தடுத்தும், தனது நிழலாய் தொடர்ந்து வந்து கொண்டிருந்த சுக்ரீவனைப் பார்த்தான்..

"தம்பீ, இந்தக் குகையிலேயே இவன நிரந்தரமா தூங்கவெச்சுட்டுதான் நான் வருவேன்..
ஒருவேள, என்பிடியிலேந்து தப்பி, இவன் இந்த குகையிலேந்து வெளிய வர முயற்சி செஞ்சாலும் செய்வான்.. அதனால நீ இங்கயே நின்னு காவல்காத்துண்டிரு.."
என்று சுக்ரீவனுக்கு உத்தரவிட்டான்.
"ஆகட்டும்ணா.. நீங்க எதுக்கும் ஜாக்ரதையா இருங்கோ.. ஒங்களுக்கு ஒத்தாசை தேவைப்பட்டுதுன்னா, குரல் கொடுங்கோ.. நான் காத்துண்டு இருப்பேன்.."
சுக்ரீவன் பேசிக்கொண்டிருக்கும் போதே, வாலி குகைக்குள் மறைந்துவிட்டிருந்தான். பகையை முடிப்பதில் அவ்வளவு வேகம்!

என்னதான் வாலிக்கு வேகமிருந்தாலும், மாயாவியும் தன்னைச் சுதாரித்துக்கொண்டு, வாலிக்கு இணையாகப் போர் செய்ததனால், போர் முடிவுக்கு வரவே இல்லை!. நாட்கள் வாரங்களாகவும், வாரங்கள் மாதங்களாகவும், மாதங்கள் வருடங்களாகவும் ஓடிக்கொண்டிருந்தன.

குகையுள் சென்ற வாலியையும் காணவில்லை! மாயாவியையும் காணவில்லை! சுக்ரீவனோ, அண்ணன் சொல்லைத் தட்டாமல் அங்கேயே காவல்காத்த வண்ணமிருந்தான்..

சுமார் இருபத்து எட்டு மாதங்கள் கடந்த நிலையில், ஒருநாள் திடீரென்று மிகப் பெரிய கர்ஜனை ஒன்று, குகையிலிருந்து வந்தது. ஆனால், அது யாருடைய கர்ஜனை என்பதை சுக்ரீவனால் அனுமானிக்க இயலவில்லை!

அதன்பிறகோ, மீண்டும் நிசப்தமே தொடர்ந்தது..
யார் இறந்தார், யார் உயிரோடு இருக்கிறார் என்பதையே அறிய முடியாமல், மிகுந்த குழப்பத்தோடு இருந்தாலும், "அண்ணனின் ஆணை" என்பதனால், சுக்ரீவன் தொடர்ந்து காவலிருந்தான்..

ஒருநாள் விடிகாலை. தனது கிரணங்களைப் பரப்பிக்கொண்டு உதயமாகிக்கொண்டிருந்த கதிரவன் வானத்தை இரத்தச் சிவப்பாக்கி இருந்தான்! அதே நேரம், குகையின் வாயிலும் சிவப்பு வர்ணத்தைப் பூசிக்கொண்டது. ஒருவேளை வானத்துச் சிவப்புதான் பூமியில் ப்ரதிபலிக்கிறதோ என்று மயங்கிய சுக்ரீவன், சற்று உற்றுநோக்கினான்..

குகையிலிருந்து இரத்த ஆறு பெருக்கெடுத்து வந்து கொண்டிருந்தது. சட்டென்று சுக்ரீவனைக் கலக்கம் தொற்றிக்கொண்டது..

"ஒரு வேளை, என் அண்ணாதான் செத்துப்போயிட்டாரோ?..
உயிரோட இருந்திருந்தா, இத்தன நேரத்துக்கு வெற்றிக் களிப்பில பெரிய கூச்சல் போட்டுண்டு வந்துருப்பாரே!. அவர் குரலயே காணோமே!
அப்போ, அந்த மாயாவிதான் உயிரோட இருக்கான் போலஇருக்கு..
வெளியிலே வந்தா, வாலியோட சகோதரன்னு என்னயும் கொன்னுடுவான்..
அவன வெளியே வரவிடவே கூடாது.. எங்க அண்ணா செத்துப்போன இந்த குகையிலேயேகிடந்து அவனும் செத்துப்போகட்டும்!"

துக்கத்தினால் கண்களில் அருவியாய் நீர் வழிந்தாலும், சமயோசிதமாகச் செயல்பட்டான் சுக்ரீவன். அருகிலிருந்த பெரிய பெரிய பாறைகளைத் தனிஒருவனாகவே உருட்டிக்கொண்டு வந்தவன், குகைவாயிலை நன்றாக அடைத்துவைத்தான். தன்னுடைய அண்ணி தாரையிடம் எப்படி விஷயத்தைப் பகிரப்போகிறோம் என்ற கலக்கம் சூழ, அரண்மனையை நோக்கித் தாளாத துக்கத்தோடு பயணித்தான்...

## பகுதி –6

சுக்ரீவன் வந்துகொண்டிருப்பதை ஒற்றர்கள் மூலம் அவன் வந்து சேர்வதற்கு முன்னமே அறிந்தாள் தாரை..

"என்னவரும் உடன் வருகிறாரா?" என்ற அவளின் கேள்விக்கு, "இல்லை!" என்று அவர்கள் பதிலளித்தது அவளைக் கொஞ்சம் யோசிக்க வைத்தது..

"ஏன் அவர் வரல? அவருக்கு என்ன ஆச்சு?"
...தனக்குள் ஓராயிரம் முறை இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டாள் தாரை..

ஸ்வபாவமாகவே சற்று புத்தி கூர்மையுள்ளவள் ஆதலால், "எதுவோ சரியில்லை" என்பது அவளுக்குப் புரிந்தது..
கூடவே, எதிர்காலத்தை உணரும் ஆற்றலும் அவளுக்கு இருந்தது! அந்த உள்ளுணர்வு, அவளுக்கு, "வாலிக்கு எதுவும் அசம்பாவிதம் நேரவில்லை" என்று உணர்த்தியது..

"சரி.. சுக்ரீவன் வரும்வரை பொறுத்திருப்போம்" என்று தீர்மானித்தவள் அரண்மனை வாசலிலேயே பழியாய்க் கிடந்தாள்...

தலைவாசலிலேயே தாரையைப் பார்த்த சுக்ரீவனுக்கு அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை..

"அ....ண்....ணீ....." என்று பெருங்குரலெடுத்துக் கதறிக்கொண்டே வந்தவன், அவள் கழலடியில் மயங்கி விழுந்தான்..

அவனது குரல் அவளை நிலைகுலைய வைத்தது. இருந்தாலும், தன்னைச் சமாளித்துக்கொண்டவள், சுக்ரீவனுக்கு முதலில் மூர்ச்சைத் தெளிவித்தாள். பார்க்கவே பரிதாபமாக இருந்த அவனது கோலம், தாரைக்கு அவன்மேல் இரக்கத்தை ஏற்படுத்தியது..
"தம்பீ.... ஏன் இப்டி எளச்சு போயிருக்கேள்?.. ஒங்கள பாத்தா ரொம்ப சோர்வா இருக்கறமாதிரி தெரியறதே.. சரியான சாப்பாடு, தூக்கம் எதுவும் இல்லாம கஷ்டப்பட்டேளா என்ன?..
மொதல்ல உள்ளவந்து கொஞ்சம் ஒங்கள ஆசுவாசப் படுத்திக்கோங்கோ... அப்றமா எல்லாக் கதையும் பேசிக்கலாம்.."

தாரையின் அனுசரணையான பேச்சு, சுக்ரீவனுக்கு மேலும் துக்கத்தையே கொடுத்தது..
"இவ்ளோ நல்ல ஆத்மாவ தெய்வம் சோதிச்சுடுத்தே..."
என்று எண்ணியவனின் கண்களில் கண்ணீர் தாரைதாரையாக வழிந்தது..
பெரும் ப்ரயத்தனப்பட்டுத் தன்னைச் சுதாரித்துக்கொண்டவன், மெல்ல வாய்திறந்தான்...
"அ....ண்....ணீ.....

அண்ணா நம்ம எல்லாரயும் விட்டுட்டுப் போயிட்டார் அண்ணீ...."

உடைந்துபோய் அழுதவனைத் தேற்றக்கூடத் தோன்றாமல், சிலையாய்ச் சமைந்தாள் தாரை!..

"இல்லை! இல்லை.. இது நடந்துருக்காது..." என்று அவள் உள்ளுணர்வு திரும்பத் திரும்பச் சொன்னாலும், சுக்ரீவனின் துக்கமும், தோற்றமும் செய்தியை மாற்றிச் சொன்னது..
ஆனாலும் தாரைக்கு, சுக்ரீவனைப் போல அழுகையும் வரவில்லை! துக்கமும் ஏற்படவில்லை! நிலைகுலையாமல் இருந்தவள், சுக்ரீவனிடம் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் தெரிந்துகொண்டாள். கடைசியாக அவன் முகத்தை நேருக்கு நேர் பார்த்துக் கேட்டாள்.

"தம்பீ.. செத்துப்போனது அந்த மாயாவியா கூட இருந்திருக்கலாமே.. நீங்க அவசரப்பட்டுட்டேளோன்னு தோணறது..
தீர்மானமா ஒருவிஷயம் தெரியாம இருக்கச்சே, ஒங்க துக்கம் அவசியம் இல்லைன்னு நான் நெனக்கறேன்..
ஒங்க அண்ணாக்கு நிச்சயமா ஒன்னும் ஆயிருக்காதுன்னு என் உள்ளுணர்வு சொல்றது..
எதுக்கும் நாம கொஞ்ச காலம் காத்திருக்கலாம்..."

தாரையின் நம்பிக்கை, சுக்ரீவனுக்கு அதிஆச்சர்யமாக இருந்தது! அவள்பேச்சோ, அருமருந்தாக இருந்தது!

"சரி அண்ணீ. ஒங்க விருப்பம்போலவே காத்திருக்கலாம்..." என்று சம்மதித்தான்..
ஆனால் காலம் காத்திருக்காமல் ஓடிக்கொண்டே இருந்தது. சுக்ரீவன் திரும்பி வந்து பலமாதங்கள் ஆகியும் வாலி வந்தானில்லை! அரசன் இல்லாமல் வானர ராஜ்யம் இஷ்டம்போல இயங்குவதைக் கண்ட அமைச்சர்கள் சுக்ரீவனை அண்டினர்.

"இதுக்குமேலவா ஒங்க அண்ணா வரப்போறார்?.. இன்னும் எத்தன காலத்துக்குதான் அரசன் இல்லாம இந்த வானர ராஜ்யம் இருக்கும்?..
ப்ரஜை எல்லாம் இஷ்டம்போல செயல்படறதா பாத்தா ரொம்பக் கவலயா இருக்கு.. நீங்க இந்த ராஜ்யபாரத்த ஏத்துண்டு, எல்லாரயும் வழிநடத்தணும்!.."

ஒரேயடியாய் அவர்கள் பேச்சை மறுத்துவிட்டான் சுக்ரீவன்..

"இந்த வானர ராஜ்யத்த ஆளவேண்டியது, எங்க அண்ணாக்கு அப்பறம், வாலி அண்ணாவோட பிள்ள அங்கதன்தான்!
எனக்கும் இந்த ராஜ்யத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்ல.."

ஆனால் அமைச்சர்கள் சுக்ரீவனை விடுவதாக இல்லை!

"இளவரசே! அங்கதன் சின்ன பாலகன்! அவன்தலையில ராஜ்ய பாரத்த ஏத்தினா அவன் தாங்குவானா?..
சரியான வயசு வந்ததும், அவன்கிட்ட பொறுப்ப ஒப்படச்சுட்டு நீங்க ஒதுங்கிக்கோங்கோ.. ஆனா, அதுவரைக்கும் இந்த வானர ராஜ்யம் பாழாகாம பாதுகாக்க வேண்டியது ஒங்க கடமை இல்லயா?.."
யாருடைய பேச்சும் சுக்ரீவனை அசைக்காததனால், அமைச்சர்கள் அனைவரும் ஒன்றுகூடி தாரைமுன் சென்று நின்றார்கள்...

## பகுதி –7

அமைச்சர்களின் கவலையில் இருக்கும் நியாயத்தை, தாரை நன்றாகவே உணர்ந்து கொண்டாள்..
சகோதரனின் பிரிவிலிருந்து இன்னமும் வெளிவரமுடியாமல் தவித்துக் கொண்டிருந்த சுக்ரீவனைச் சந்தித்தாள் தாரை..
"தம்பீ... ஒங்க அண்ணா மேல நீங்க வெச்சுருக்க பாசம் எனக்கு புரியறது.. அதுக்காக, நீங்க நடக்கவேண்டிய காரியங்கள கவனிக்காம இருந்தா எப்படி?.."

எதைப் பற்றித் தாரை பேசுகிறாள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் அவளை ஏறிட்டான் சுக்ரீவன்..
"அண்ணீ... நீங்க என்ன சொல்றேள்?..கொஞ்சம் புரியறாப்ல சொல்லுங்கோ.."

"புரியும்படியாவே சொல்றேன் தம்பி.. ஒங்க அண்ணா வரவரைக்கும் நீங்க இந்த ராஜ்ய பாரத்த ஏத்துக்கோங்கோ..
ஒரு கட்டுக்கோப்பு இல்லாம போச்சுன்னா, அப்பறம் சரிபண்ணறது ரொம்ப கஷ்டம் இல்லயா?.."
தாரையின் கேள்வியிலிருந்த நியாயத்தை உணர்ந்தாலும், சுக்ரீவனுக்கு அதில் உடன்பாடில்லாமல் இருந்தது..

"அண்ணீ... அங்கதன் ராஜ்ய பாரத்த ஏத்துக்கட்டும்.
நாமெல்லாரும் அவனுக்கு ஒத்தாசையா இருப்போம்.."

வேகமாக மறுத்தாள் தாரை.

"அது சரிவராது தம்பீ. ஒங்க அண்ணாவோட நிர்வாகமும் தெறமையும் ஒங்களுக்கு நன்னாவே தெரியும்!..
அங்கதன் சின்னக் கொழந்த.. அவனுக்கு அவ்ளோ சாமர்த்யமெல்லாம் போறாது..
அதனால, நீங்கதான் இப்போ இந்த ராஜ்யத்த கட்டிக் காத்தாகணும்..

நாளைக்கே ஒங்க அண்ணா வந்தார்னாகூட, நீங்க பொறுப்பா ராஜ்யத்த கவனிச்சண்டதுக்கு சந்தோஷம்தான் படுவார்!
அதுவே, நீங்க ராஜ்யம் எப்படியோ போட்டும்னு விட்டுட்டா, ஒங்க அண்ணா வருத்தப்பட மாட்டாரா?..கொஞ்சம் யோசியுங்கோ..

அவர் திரும்பி வந்தவுடனே, அவர்கிட்ட ராஜ்யபாரத்த கொடுத்துட்டு, நீங்க நிம்மதியா இருங்கோ..நான் வேண்டாம்னு சொல்லல..
ஆனா.. இப்போ ஒங்களுக்கும் கடமை இருக்குங்கறத புரிஞ்சுக்கோங்கோ.."
தாரையின் பேச்சிலும் நியாயம் இருப்பதாகப்பட்டது சுக்ரீவனுக்கு..
அதேசமயம், இன்னமும் வாலி திரும்பிவருவதைக் குறித்து, அவள் வைத்திருந்த நம்பிக்கை எவ்வளவு தூரத்துக்குப் பலிக்கும் என்ற சிந்தனையும் அவனுள் எழாமல் இல்லை!
"சரி... கொஞ்ச நாளைக்கு ராஜ்யத்த நிர்வாகம் பண்ணிட்டு, அப்பறம் அங்கதனுக்குப் பட்டம் கட்டிடலாம்" என்று எண்ணிக்கொண்டு, அரைகுறையாய் தனது சம்மதத்தைத் தாரையிடம் தெரிவித்தான்..
அதிகக் கொண்டாட்டங்கள் ஏதும் இல்லாமல், சுக்ரீவன் அரசனாய் முடிசூடிக் கொண்டான். இத்தனை நாளாய் கவனிப்பதற்கு ஆளில்லாமல் இருந்ததால், தடம் மாறிப் போயிருந்தவற்றை எல்லாம், மிகவும் ப்ரயத்தனப்பட்டு சரி செய்தான். வாலியினுடைய அமைச்சர்களது ஆலோசனையை ஏற்று, நாட்டில் நிறைய சீர்திருத்தங்களையும் கொண்டுவந்தான்.ஒருவழியாக நேர்வழியில் வானர ராஜ்யம் செயல்படத்துவங்கியது. அன்று காலையில் கண்விழித்தத் தாரைக்கு, அவளது இடதுகண் துடித்தது.
அதே நேரம், சுக்ரீவனுக்கும் இடது கண் துடித்தது.இருவர் மனதுமே சஞ்சலம் அடைந்தது!..
"என்(ன) அதிர்ஷ்டம் என்னைத்தேடி வரப்போகிறதோ?.." என்று தாரை மயங்கி நின்றாள்..
"எந்த ஆபத்து என்னைச் சூழப்போகிறதோ?.." என்று சுக்ரீவன் கலங்கி நின்றான்...

## பகுதி –8

தாரையும் சுக்ரீவனும் சிந்தனை வயப்பட்டவராய் இருந்த அதே நேரத்தில், அரண்மனையின் தலைவாயிலில், பெரும் கர்ஜனை முழங்க வந்து நின்றான் வாலி!
அவனைச் சற்றும் எதிர்பார்க்காத வானரர்கள், வாலியின் ஆவிதான் வந்திருக்கிறதோ என்ற அச்சத்தில் அங்குமிங்கும் தலைதெறிக்க ஓடினர்.

தன்னவன் நிச்சயம் வருவான் என்ற நம்பிக்கையுடன் தாரை இத்தனை நாட்களையும் கடத்தி வந்திருந்தாலும், இன்றவன் வருகையில், அவள் இதயம் சற்று நின்று துடித்தது! முன்னவனின் வருகை நிஜம்தானோ என்று பின்னவன் பேராச்சர்யமும் பேருவகையும் ஒருசேர அடைந்தான்! விழிகளில் வெள்ளமாய் நீர்பெருக இருவரும் தத்தமது அறைகளிலிருந்து வேகமாக வாசல் நோக்கி ஓடிவந்தனர்..

மூன்று வருடங்களுக்கு முன்னர், மாயாவியின் மேல் கோபம் கொண்டு எத்தனை லக்ஷணங்களுடன் அரண்மனையை விட்டு வெளியேறினானோ, அந்த லக்ஷணங்களில் ஒன்றுகூட சற்றும் குறையாமல், சுக்ரீவன் மீது ஏறிட்டுக்கொண்ட கடுஞ்சினத்துடன், இப்போது வந்திருந்தான் வாலி. போதாதற்கு, தன்னை அரசன் என்று பிரகடனப்படுத்துகின்ற விதமாய் சுக்ரீவன் அணிந்திருந்த மணிமுடி வேறு, அவனது கோபத்தை இரட்டிப்பாக்கியது. சுக்ரீவனுக்கும் முன்னால் தன்னை நோக்கி ஓடிவந்த தாரையை, அவன் கண்டுகொள்ளவே இல்லை!

அவனது எண்ணம் முழுவதும் சுக்ரீவனே ஆக்ரமித்திருந்தான்!

இருகைகளையும் அகலவிரித்து, "அ…ண்…ணா…" என்று கதறிக்கொண்டே வந்த சுக்ரீவன், வாலியை இறுகத் தழுவ முயன்றான்.
அவனை நெட்டித் தள்ளினான் வாலி!
என்ன நடக்கிறது என்று எவரும் உணருமுன்னரே, பாய்ந்து சென்று, சுக்ரீவனின் மணிமுடியைப் பிய்த்து எறிந்தான்..

"அரசனாக ஆசைப்பட்டு, அண்ணனான என்னக் கொல்லப் பாத்தாயோடா? க்ராதகனே…."

நெருப்பை உமிழ்ந்தவன், சுக்ரீவனின் முகத்தில் தன் முஷ்டியால் ஓங்கிக் குத்தினான்.

வாலியின் வலிமைமுன் சுக்ரீவன் துவண்டான்..
ஆனாலும் சுதாரித்துக்கொண்டு,
"அ..ண்..ணா… நீங்க என்ன தப்பா புரிஞ்சுண்டிருக்கேள்..
நான் அப்படிப்பட்டவன் இல்ல அண்ணா.. என்ன நம்புங்கோ…"

வாயிலிருந்து வழிகின்ற இரத்தத்தினூடே, சுக்ரீவனின் வார்த்தைகள் வந்து விழுந்தன! மேலே சுக்ரீவனைப் பேசவிடாமல், மீண்டும்மீண்டும் அவனைத் தாக்கினான் வாலி..
ஆனால், சுக்ரீவனும் விடுவதாய் இல்லை!
தன்னை எப்படியேனும் வாலி உணர வேண்டும் என்பதில் அதிதீவிரமாய் இருந்தான்..

"அ..ண்…ணா… நீங்க என்ன கொல பண்ணாக்கூட பரவாயில்ல.. ஆனா என்னத் தப்பா புரிஞ்சுக்காதீங்கோ..

நீங்க சொன்னபடியேதான் குகை வாசல்ல அன்ன ஆஹாரம் இல்லாம மாசக்கணக்கில நான் காவல் காத்துண்டிருந்தேன்..

ஒருநாள் குகைக்குள்ளேந்து இரத்தம் பெருக்கெடுத்து வந்தது.. மாயாவியக் கொன்னுட்டு நீங்க வருவேள்னு ரொம்ப எதிர்பாத்துண்டு அங்கேயே நின்னுண்டு இருந்தேன். ஆனா ரொம்ப நேரம் அங்க நிசப்தமாவே இருந்தது..
ஒடனே மாயாவிதான் ஓங்கள கொன்னுட்டு, தன்ன சுதாரிச்சுண்டு வெளிய வரான்னு நெனச்சேன்.. அவன் வெளியில வந்தா, என்னோட உயிருக்கு ஆபத்துன்னு நெனச்சு கல்ல வெச்சு குகையோட வாசல அடைச்சேன். இதான் நடந்ததுண்ணா! என்ன நம்புங்கோ.."

எக்காளமாய்ச் சிரித்தான் வாலி..
"ஒன்னோட கத எல்லாம் நம்பற அளவுக்கு எனக்கு மூள மழுங்கிப் போச்சுன்னு நெனக்கறயா? அடேய் பாவி…ஒன்னஎல்லாம் உயிரோடயே விட்டு வெக்கக் கூடாதுடா.. ஒன்ன மாதிரி பச்ச த்ரோகியதான்டா மொதல்ல கொல்லணும்.."

திரும்பவும் சுக்ரீவனை த்வம்சம் செய்ய ஆரம்பித்தான் வாலி. இடைமறித்து ஏதோ பேசவந்த தாரையையும், நெட்டித்தள்ளியதில் அவள் சுருண்டுபோய் மூலையில் விழுந்தாள்..

அடங்காத தீபோலும் கொழுந்து விட்டெறிகின்ற வாலியின் கோபத்தைக் கண்டு அமைச்சர்களும் அச்சத்தினால் வாய்மூடி மௌனமாயினர். அதனால் சுக்ரீவனின் நிலைமை மேலும் பரிதாபகரமானது. வாலியின் தொடர் தாக்குதலால், சுக்ரீவன் தளர்ந்து கொண்டே வந்தான். இன்னும் சற்றுப்போனால், சுக்ரீவன் இறந்தே போய்விடுவான் என்ற பீதியில், சகோதரர்களின் குறுக்கே புகுந்தாள், சுக்ரீவனின் மனைவி ருமை...

## பகுதி –9

ருமையைச் சற்றும் எதிர்பார்க்காத வாலி, சற்றே சுக்ரீவன் மீதான தனது தாக்குதலை நிறுத்தினான். இதுதான் சமயமென்று ருமை, அவன் கால்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்..

"வாலி அண்ணா... அவர விட்டுடுங்கோ.. அவர் ஒரு பாவமும் பண்ணல.. எல்லாரும் வற்புறுத்திதான் அவர சிம்மாசனத்துல ஒக்கார வெச்சா...ஒங்க ராஜ்யத்த ஒங்களுக்கே கொடுக்க அவர் தயாராதான் இருக்கார்.. வேணும்னா அவரயே கேட்டுப்பாருங்கோ.."

இதற்குள் ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்ட சுக்ரீவனும் வாலியின் கால்களில் வந்து விழுந்தான்...

"அண்ணா... எனக்கு இந்த ராஜாங்கமே வேணாம்ணா.. நீங்களே ராஜாவா இருங்கோ... நான் எப்பவும்போல ஒங்க சேவகனா ஒங்க காலடியிலயே இருக்கத்தான் ஆசப்படறேன் அண்ணா.. என்ன நம்புங்கோ.."

சுக்ரீவனின் பிடியிலிருந்து தன் கால்களை விடுவித்துக்கொண்டவன், எதிர்பாராதவிதமாக, அவனை பலமாக எட்டி உதைத்தான்.நிலைகுலைந்து போய் ஒருமூலையில் விழுந்தான் சுக்ரீவன்.கதறிக்கொண்டு அவனை நோக்கி ஓடிய ருமையை, வாலி தாவிப் பற்றினான்..

"இனி நீ என்னவள் ருமா... அவன மறந்துடு.. அவன எப்டியும் நான் கொன்னுடுவேன்.. அந்த த்ரோகிய நான் மன்னிக்கற மாதிரியே இல்ல..."

வாலியின் பேச்சில் அதிர்ந்தே போனாள் ருமை! சுற்றியிருந்தவர்கள் திகைத்துப்போய் நின்றார்கள். வாலியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் திமிறிய ருமையை, அவன்பிடி மேலும் இறுக்கியது. வாலியின் கவனம் திசை மாறியதைப் பார்த்த சுக்ரீவன் தப்பித்து ஓட ஆரம்பித்தான்.ருமையை விட்டுவிட்டு, இப்பொழுது சுக்ரீவனைத் துரத்த ஆரம்பித்தான் வாலி.உயிர்பயத்தில்

ஓடிய சுக்ரீவனின் வேகம் அதிகமிருந்ததால், வாலியால் அவனை எளிதில் பிடிக்க இயலவில்லை.காடுமேடுகளில் எல்லாம் சுக்ரீவனைத் துரத்திக்கொண்டு ஓடினான் வாலி..

"ஏ சுக்ரீவா... இந்த ஒலகத்தோட எந்த மூலைக்கு நீ ஓடினாலும், ஒன்ன கொல்லாம விடமாட்டேண்டா.."
வாலியின் இந்த வார்த்தைகள் அவனுள் இன்னமும் பீதியை உண்டாக்கியது. தன்னை எப்படியேனும் வாலியிடமிருந்துக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தவனுக்குச் சட்டென்று மதங்க முனிவரின் சாபம் நினைவில் வந்தது. தலைதெறிக்க அவ்விடம்நோக்கி ஓடினான். என்னதான் ஆத்திரம் கண்ணையும் மறைத்து, அறிவையும் இழக்க வைத்தாலும், சுக்ரீவன் மதங்க முனிவரின் ஆசிரம எல்லையுள் ப்ரவேசித்ததும், வாலி சட்டென்று நின்றான்.

"ஏ தொடைநடுங்கி... இந்த எடத்துக்கு வந்தா, நான் வரமாட்டேன்னு தெரிஞ்சுண்டு இங்கவந்து ஒளிஞ்சுக்கறயா?.. தூ.... வெக்கமா இல்ல ஒனக்கு?...
நீயெல்லாம் ஒரு ஆண்மகனா டா?..."

காறித்துப்பியவனைப் பார்த்து இப்பொழுதும் கையெடுத்துக் கும்பிட்டான் சுக்ரீவன்..
"அண்ணா... ஒங்களோட பலம் எனக்கு இல்லண்ணா... என்னால இதுக்கு மேல ஒங்ககிட்ட அடிவாங்க முடியாது.
வேறவழியில்லாமதான், என்ன காப்பாத்திக்கறதுக்காக இங்க வந்தேன்..
நீங்க கொஞ்சம் நிதானமா யோசிச்சுப் பாத்தா, என்மேல எந்தத் தப்பும் இல்லன்னு புரிஞ்சுப்பேள்.

என்மேல இருக்கற கோவத்துல, ருமைய பழிவாங்காதீங்கோண்ணா... அவ பாவம்! அவள ஒன்னும் செய்யாதீங்கோ.. அவள விட்டுடுங்கோ...

பெரிய மனசு பண்ணி, அவளயும் இங்க அனுப்பிச்சுடுங்கோண்ணா..
நாங்க எப்டியோ வாழ்ந்துக்கறோம்.. நீங்க இருக்கற பக்கமே வரல..."

சுக்ரீவன் கண்களில் வழிந்த கண்ணீரைக்கண்டும், வாலி மனது மாறவில்லை! எகத்தாளமாகவும், அகங்காரமாகவும் சிரித்தான் வாலி...
"அடேய் அற்பப் பதரே... ஒன்கிட்ட ருமைய அனுப்பி வெக்கறதுக்கு நான் என்ன பைத்தியமாடா?
அவ இனிமே என் பொண்டாட்டி டா...
நீ இங்கயே மழையிலயும் வெயிலிலயும் திரிஞ்சுண்டு, ஒன்காலத்த ஓட்டுடா..
ருமை என்னோட இருந்து எல்லா சுகத்தையும் அனுபவிக்கட்டும்!..

அப்பறம்...ஒன்னே ஒன்னு, தீர்மானமா தெரிஞ்சுக்கோ டா...

என்னிக்கு இந்த எல்லைய விட்டு நீ வெளிய வரயோ, அன்னிக்குதான் ஒனக்கு வாழ்க்கையோட கடைசிநாள்...என்னிக்கு இருந்தாலும் ஒனக்கு எமன் நான்தான்டா!.."

நெருப்பை வாரி இறைத்துவிட்டுச் செல்லும் தனது சகோதரனை, விழிகளில் பெருகும் நீர்மறைக்கப் பார்த்துக்கொண்டு நின்றான் சுக்ரீவன்....

## பகுதி –10

இவ்வளவு பரந்த பூமியில் இருப்பதற்கு இடமில்லாது போனபோது, ரிஷ்ய முக பர்வதம் மட்டும் இருகரம் நீட்டி சுக்ரீவனை அணைத்தது. இப்படி அனாதையாய் தான் இருக்க நேரிடும் என்பதைக் கனவில்கூட நினைத்துப் பார்க்காத சுக்ரீவனின் விழிகள், தன்னிரக்கத்தால் சதா வற்றாத அருவிபோலும் வழிந்தன.

"என் மனைவி ருமா என்ன ஆனாளோ?.. சகோதரனின் மனைவியாச்சேன்னுகூட பாக்காம, வாலி அவளுக்கு என்ன தீம செஞ்சானோ?
ஐயோ. நான் இப்படிக் கட்டிய மனைவியக்கூடக் காப்பாத்த முடியாதபடி வக்கில்லாதவனா ஆயிட்டேனே!.." என்று அவன் மனது அரற்றியவண்ணம் இருந்தது. எத்தனையோ எண்ணங்களால் அவன் உள்ளம் அலைக்கழிக்கப்பட்டுத் தடுமாறித் தத்தளித்துக் கொண்டிருந்தது..

"ருமாவாவது பெண், வாலி அவள அடக்கி வெச்சுருப்பான்...

ஆனா, என்மேல ரொம்ப அபிமானமும் மரியாதையும் வெச்சுருந்த என்னோட அமைச்சர்களுக்கும், நண்பர்களுக்கும் கூடவா என் நெனப்பு வராம போயிடுத்து?.. ஒருத்தர்கூட வந்து இன்னும் என்ன எட்டிப்பாக்கலயே. இப்டி யாருமில்லாத அனாதையாவேதான் என்னோட மீதி வாழ்நாள் போகப் போறதா?..

இந்த சுக்ரீவன் அவ்ளோ பாவம் பண்ணியிருக்கேனா?.."

தனக்குள்ளேயே எழுப்பிக் கொண்ட தொடர் வினாக்களினால் உண்டான கழிவிரக்கத்தால், அவனது கண்ணீரின் ஈரம் காயாமலேயே இருந்தது. ஊண் உறக்கமின்றி மயங்கிக் கிடந்தவனின் செவிகளில் திடீரென்று சில பரிச்சயமான குரல்கள் விழுந்தன. அனிச்சையாகத் தன்னை ஒரு மரத்தின் அடர்ந்த இலைகளுக்கு இடையே ஒளித்துக் கொண்டவன், உற்று நோக்கினான். இப்பொழுது குரல்கள் மிகவும் நெருங்கி வந்தன. சுக்ரீவனின் சுயபச்சாதாபத்தை முடிவுக்குக் கொண்டுவருவதென அந்த ஆண்டவனும் ஸங்கல்பித்தான் போலும்!
ஆம்... அங்கே, சுக்ரீவனின் பெருமதிப்புக்கும் ப்ரீதிக்கும் பாத்திரமாயிருந்த அவனின் ப்ரதான அமைச்சனாகிய அனுமன், இன்னும் சில நேர்மையான குணங்களொடு கூடியவர்களையும் தன்னோடு அழைத்துக்கொண்டு வந்துகொண்டிருந்தான். அனுமனின் கண்கள், தன்னைத் தேடுவதை உணர்ந்த சுக்ரீவன், மெல்ல, தன்னை மறைவிடத்திலிருந்து வெளிப்படுத்திக் கொண்டான். எப்பொழுதுமே துக்கத்தில் இருக்கும்போது, உற்றவர்களைக் கண்டால் துக்கம் இரட்டிப்பாகிவிடும் என்பதை

உறுதி செய்வது போல, இப்பொழுது சுக்ரீவன் தனக்கு ஆத்மார்த்தமானவர்களை எல்லாம் பார்த்ததும், வாய்விட்டழுது தனது சோகத்தைப் பகிர்ந்து கொண்டான். அறிவிற் சிறந்த அனுமனே, சுக்ரீவனை முதலில் தேற்றினான்..

"இளவரசே! காலம் இப்படியே போகாது.. ஒங்களுக்கும் ஒருநாள் விடியும்.. அதுவரைக்கும் மனச தளரவிடாதீங்கோ.இனிமே ஆகவேண்டியதப் பத்திமட்டும் யோசிப்போம். நடந்து போனத நெனச்சுண்டே இருந்தா நம்ம உறுதி குலைஞ்சுபோயிடும்! நம்பிக்கைதான் வாழ்க்கை!
நல்லதே நடக்கும்னு நெனச்சுக்கோங்கோ... அதுவே நிச்சயமா ஒருநாள் பலிக்கும்!.."

சொல்லின் செல்வன் உதிர்த்த வார்த்தை முத்துக்கள், சுக்ரீவனை ஆஸ்வாசப் படுத்தின. கூட இருந்தவர்களும், அவரவர் பங்குக்கு அளித்த தைரியமும், நம்பிக்கையும், அவனை சகஜ நிலைக்கு அழைத்து வந்தது. பெரிய மாற்றங்கள் எதுவுமில்லாமல், காலம் தன்வழியில், ஓடிக்கொண்டே இருந்தது. தன்னம்பிக்கை குறையும் போதெல்லாம், மாருதி கூறுகின்ற மந்திர வார்த்தைகளே, சுக்ரீவனுக்கு அருமருந்தாகியது.
ஒரு விடியற்காலை நேரம்..
ஏனோ, அன்று உதித்த சூரியன், கிரணங்களைப் பரப்பி, தனக்கு ஆசி வழங்குவதாய் சுக்ரீவன் மனதில் தோன்றியது...
அவனை அறியாமல், உள்ளத்தில் இத்தனை நாளும் இருந்த கலக்கம் காணாமல் போயிருந்தது. ஏதோ பெருநன்மை விளையப்போவதாக, அவனது உள்ளுணர்வு உணர்த்தியது..
"என்னவாய் இருக்கும்?..எனக்கென்ன நன்மை நடந்துவிடப்போகிறது?.." என்று சிந்தனைவயப்பட்டவனின் வலது கண் படபடவென்றுத் துடித்தது..
வறண்ட பாலைவனம் போன்ற சுக்ரீவனின் வாழ்வில், ஒரு காளமேகம் வந்துப் பொழியப் போவதற்கான கட்டியம் கூறுவதாய் அந்த சகுனம் அமைந்தது...

## பகுதி –11

**என்றும் இல்லாத அதிசயமாய், அன்று காற்றில் ஒரு குளிர்ச்சி கலந்திருந்தது..**
**வெம்மையில்லாத வானிலை, மனதுக்கு இதமாக அமைந்திருந்தது.**
ஜனநடமாட்டமற்ற ப்ரதேசம் என்றாலும், சுக்ரீவன் எப்பொழுதும் எச்சரிக்கையுடனே இருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான்..
வாலி உள்ளே நுழைய முடியாத பொழுதும், அவனது ஆட்கள் ஒன்றுகூடி தன்னைத் தாக்கலாம் என்ற எண்ணம் அவனை சதாகாலமும் ஸர்வ ஜாக்ரதையாக இருக்க வைத்தது. அவன் வழக்கமாக அமர்ந்து கொள்ளும் மறைவிடம், நான்குபுறமும் அவன் எல்லாவற்றையும் காணுவதற்கு அனுகூலமாகவும், அதேசமயம் அடுத்தவர் கண்களுக்கு அவன் தென்படாதபடியுமான வசதியையும் கொண்டிருந்தது. இன்றும் அங்கே வந்து அமர்ந்து கொண்டவன், சூழலை வெகுவாக ரசிக்க ஆரம்பித்தான். சில்லென்ற காற்றுக்கு அசைந்த மரங்கள், யாரையோ ஆசையோடு வரவேற்பதைப் போல அவனுக்குத் தோன்றியது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் காற்றில் கலந்திருந்த நீர்ச் சிதறல்களும் மனதில் புதுவிதமான உற்சாகத்தை உண்டாக்கின.

நேற்றுவரையில் விகசிக்காத பூஞ்செடிகள், திடீரென்று இன்று பூக்காடாய் புஷ்பித்திருந்ததை, அதிக ஆச்சர்யத்தோடு அவன் நோக்கினான். பார்க்கின்ற இடமெல்லாம் ரம்மியமாக அவன் கண்களுக்குக் காட்சியளித்தன. ஏதோ மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை அவனால் உணர முடிந்ததே தவிர, அதன் காரணத்தை அவனால் அறிந்து கொள்ளமுடியவில்லை!..

சட்டென்று அவனுக்குத் தான் ருமையோடு, இதுமாதிரியான பொழுதுகளில் இன்பமாய் இருந்ததெல்லாம் நினைவில் வந்தது. அவனை அறியாமல் விழிகளில் நீர் திரையிட்டது. அந்த நீர்த்திரை முற்றிலும் நீங்குமுன்னே, தூரத்தில் ஏதோ ஒன்று அசைந்து வருவதுபோன்று அவன் கண்களுக்குத் தெரிந்தது. கண்களை நன்றாகக் கசக்கிக் கொண்டு விழிகள் விரியப் பார்த்தவன்,

வில்லும், அம்பும் நடந்து வருவது போன்ற காட்சியைக் கண்டான்!. அவ்வளவுதான்! அவன் அறியாமலேயே ஒரு பய உணர்வு அவனை ஆட்கொண்டது!

"வில்லையும் அம்பையும் ஏந்திவரும் வீரர்கள் அவன் மனதில் நுழைவதற்கு முன்னமே, அச்சம் அவனுள் நுழைந்து, அவனை முழுதுமாய் ஆட்டி வைத்தது..

சட்டென்று தானிருக்கும் இடத்திலிருந்து குதித்து, தன்னை முழுவதும் மறைத்துக் கொள்வதற்கு ஏதுவான இடத்தை நோக்கி மூச்சிரைக்க ஓடினான். சுக்ரீவனின் அந்த பதற்றத்தோடு கூடிய வேகம், அனுமனுக்கு "ஏதோ சரியில்லை" என்பதைச் சொன்னது..

சுக்ரீவனை ஆஸ்வாஸப்படுத்தியவன், காரணத்தை வினவினான். தான் தொலைவில் கண்ட காட்சியை அனுமனிடம் உரைத்தவன், என்னஏது என்ற விபரம் அறிந்து வருமாறு அவனைப் பணிக்கவும் செய்தான். சுக்ரீவனின் கட்டளை ஏற்ற அனுமன், ஒரு உயர்வான இடத்திலிருந்து, மெதுவாக நோட்டமிட்டான். அங்க அடையாளங்கள் தெளிவாகத் தெரியாத போதும், இரு வீரர்கள் வந்து கொண்டிருப்பதை அவனால் காணமுடிந்தது.

"சரி..நேரில் சென்று விசாரிப்போம்.." என்று நினைத்தவன், அழகான ஒரு பிரம்மசாரியின் வடிவத்தை எடுத்துக்கொண்டு அவர்களை நோக்கி நடந்தான்...

அநேகமாக அவர்களைச் சமீபித்து விட்டிருந்த சமயம். அண்ணலும் நோக்கினான்... அனுமனும் நோக்கினான்...

## பகுதி -12

கண்ட அந்த க்ஷணத்திலேயே, அந்தக் கோசலை மைந்தன், அனுமனின் விழிகளில் நுழைந்து உயிரையே தீண்டி நின்றான்! அனுமனுக்கு ஒருமுறை உடல் விதிர்த்து அடங்கியது. பரவசத்தின் பளுவால் கண்கள் கசிந்தன..

வந்த இருவருமே அழகில் சிறந்தவர்களானாலும், முன்னவனான அக்கரியவனின் எழிலை விஞ்சும் ஒருவன், இந்த ப்ரபஞ்சத்திலேயே இல்லை என்பது அனுமனுக்கு நிதர்சனமாகத் தெரிந்தது!..

"பகைவனோ?.." என்று அஞ்சிய சுக்ரீவனின் அமைச்சனான அனுமன்,
"பரமனோ இவன்!?" என்றெண்ணி இராமனை வியந்தான்..

சற்றுநேரம் பேசவும் மெய்மறந்து அவனை பாதாதிகேசம் அனுபவித்தான்..

கமலமோ என மயங்க வைக்கும் கழலிணைகள்..

அந்த கமலத்தின் ஒவ்வொரு இதழுமே விரல்களாய் மாறிய விந்தை!

"என்னைக் கட்டிக்கொண்டால் உனக்கு மோக்ஷம் நிச்சயம்" என்று சொல்வதுபோல் விளங்கும் உறுதிவாய்ந்த இருமுழங்கால்கள்..

"உன்னைச் சேயாய்த் தாங்குவதற்கே எனது இந்தப் பஞ்சுப்பொதிகள்!.." என்பது போன்ற இரண்டு கோமளமான தொடைகள்..

அன்று பிரம்மன் தோன்றிய உந்திக்கமலம்... இன்னமும் பொலிவு குறையாமல் இருக்கின்ற எழில்...

பிராட்டி வசதியாய் அமர்வதற்கென்றே பரந்திருக்கும் மார்புப் பிரதேசம்..

"சம்சார சாகரத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் உன்னை மீட்டெடுக்கவே இவை எனக்கு.." என்ற ரகசியத்தை மறைத்துச் சொல்லும் வலிமை வாய்ந்த தோள்இணைகளும், தொடைவரையில் நீண்ட இரு கரங்களும்...

"அருள் கொடுத்தே சிவந்ததோ?.." என மயங்க வைங்கும் உள்ளங்கைத் தாமரைகள்..
அண்டபகிரண்டத்தையும் ஆரவிழுங்கிய கவின் கழுத்து...
அதற்கு மேல் "சூரியகுலத்தின் சந்த்ரோதயம் இதுவோ?.." என மலைக்க வைக்கும் வதன கமலம்..
இதழ் பிரித்து இவன் பேசும் அழகைப் பார்த்தே, கமலம் தன் இதழை விரிக்கக் கற்றுக்கொண்டதோ?.." என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கும் செவ்விதழ்களோடு கூடிய பவளவாய்.
கூரிய அழகான நாசி. அதற்கு மேல்.... அதற்கு மேல்....அதற்கு மேல் அனுமனால் தரித்து நிற்க முடியவில்லை!...

ஆம்...கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்ட அப் பெரியவாய கண்கள்...
அனுமனைப் பேதமை செய்தன!..

கருணை, கடலெனப் பெருகும் அந்த கண் இணைகளின் சுழலில் அனுமன் சிக்கிக்கொண்டான்!.. தன்னைச் சுதாரித்துக் கொள்ளவே, அவனுக்குச் சற்றுநேரம் பிடித்தது! கண் இணைகளின் தூண்டிலிலிருந்து தன்னை மெல்லமெல்ல விடுவித்துக் கொண்டவன், அவனை முழுவதுமாய் அனுபவிக்க முடிவு செய்து, தனது பார்வையை இன்னும் சற்று மேலே செலுத்தினான்...

நறுந்திலகம் விளங்கும் எழில் நெற்றியும், திரித்து முடியப்பட்ட கழல் கற்றையோடு கூடிய சிரமும் "நாதன் நானே!" என்று திண்மையாய்க் கூறுவதை எண்ணி எண்ணி வியந்து நின்றான்! மொத்தத்தில் அவன் நீலமேனி, அனுமனது நெஞ்சை நிறைகொண்டது!..

"என் அமுதினைக் கண்ட கண்கள், இனி மற்றொன்றினைக் காணாவே!..."

என்று முக்கரணங்களாலும் அனுமன் இராமனை அனுபவிக்க,
தன்னைத் தான் உணருமுன்னே, அவனது கரங்கள் இராமனை நோக்கிக் குவிந்தன..
அதேசமயம், தனக்கே உரிய புத்தி கூர்மையால், இத்தனை எழிலையும், கம்பீரத்தையும் தாண்டி, அவன் ஏதோ ஆழ் மன வருத்தத்தினால் அல்லலுறுகிறான் என்பதையும் அனுமன் ஊகித்தான். பலவிதமான காரணங்களினால், தான் அவன்பால் ஈர்க்கப்படுவதை உணர்ந்தவன், மெல்ல வாய் திறந்தான்..

"திவ்ய தேஜஸுடன் காணப்படுகின்ற தாம் இருவரும் யாரென அடியேன் அறியலாமோ?.."

விநயமே வடிவாக நின்ற அனுமன், இப்பொழுது இராமன் மனதில் நுழைந்து இடம்பிடித்தான்....

## பகுதி –13

" இவன் சாதாரணமானவன் அல்ல! இவன் முகத்தில் காணப்படுகின்ற பொலிவும், கண்களின் தீக்ஷண்யமும், இவனை அறிவார்ந்தவனாகக் காட்டுகிறது!
இவனது விநயமோ, இவனை மிகவும் மேலானவனாகப் பறைசாற்றுகிறது!.."
என்றெண்ணிய இராமன், தன் எண்ணத்தை இலக்ஷ்மணனிடமும் பகிர்ந்து கொண்டான். தமயனின் வார்த்தைகளில் இருந்த நிஜம், தம்பியையும் அனுமன்பால் ஈர்த்தது..
"அந்தணரே! முதலில் தாங்கள் யார் என்று நாங்கள் அறிந்து கொள்ளலாமா?.."
என்ற இலக்ஷ்மணனின் கேள்விக்கு அனுமன் அழகாகப் பதிலிறுத்தான்..

"பெருந்தகையோரே! அடியேன் வாயுபுத்திரனாக, அஞ்சனையின் திருவயிற்றில் தோன்றியவன்.. அடியேனை அனுமன் என்பார்கள்..

இந்த ரிஷ்யமுக பர்வதத்தில் வாழ்கின்ற சூரியபுத்ரனான சுக்ரீவனுக்கு, அடியேன் ஏவல்களைச் செய்பவன். தாங்கள் இருவரும் வந்து கொண்டிருப்பதைக் கண்ட எனது தலைவன், தாம் இருவரும் யாரென அறிந்துவரும்படி பணித்தார்..

அவரின் ஆணையை ஏற்று அடியேன் விபரம் அறியவே இங்குவந்தேன்.."

அளந்து பேசுகின்ற அனுமனின் ஆற்றல் கண்டு வியந்தான் காகுத்தன்!

மெல்லத் திருவாய் மலர்ந்தான் தசரத தனயன்...

"அந்தணரே... தமது தலைவனான சுக்ரீவனைக் காணவே நாங்கள் இருவரும் இங்கு வந்துள்ளோம். தம்மால், அந்த சுக்ரீவனிடத்தில் எங்களை அழைத்துச் செல்ல இயலுமோ?.."
இராமனின் பேச்சினால் அகமகிழ்ந்த அனுமன், மேற்கொண்டு சுக்ரீவனைப் பற்றிய விவரங்களையும் சொல்லலானான்...

"வீரமே வடிவெடுத்து வந்தவரே! தமது வரவு நல்வரவாகட்டும்!

அடியேனது தலைவன் சுக்ரீவன், தனது சகோதரனான வாலியின் மீதுள்ள பயத்தினால், பலகாலமாக இந்தக் குன்றில் மறைந்து வாழ்ந்து வருகிறார்..

எத்தனையோ வருடங்களாகத் துன்பக் கனலிலேயே துவண்டுபோய் கிடக்கின்ற அவருக்குத் தமது வருகை வசந்தத்தை வழங்குமென்று அடியேன் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். இருந்தாலும் அடியேனது தலைவனிடம் தம்மை இன்னார் என்று சொல்வதற்கு அடியேனுக்குத் தமது அறிமுகம் தேவைப்படுகிறதே..
தம்மை யாரென அடியேன் அறியலாமோ?.."

அசந்தே போனான் இராமன்!

"இந்த அந்தணர்தாம் எவ்வளவு அழகாகப் பேசுகிறார்!..
இது இவருக்கு யாரளித்த வரமோ!.." இராமன் மலைத்து நின்று கொண்டிருந்த போதே, இலக்ஷ்மணன் ஆதியோடு அந்தமாய் தமது விருத்தாந்தங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் அனுமனுக்கு உரைத்தான்..

சீதையை மீட்கும் விஷயத்தில்,
கபந்தன், சபரி இருவரும் காட்டிய வழியில், தற்போது சுக்ரீவனைத் தேடிக்கொண்டு தாம் வந்த விஷயத்தையும் சொல்லி முடித்தான்..

இராமனைச் சூரியகுல அரசனான தசரத சக்ரவர்த்தியின் புதல்வனாக அறிந்து கொண்ட அனுமன், மிகவும் மகிழ்ந்தவனாய், இராமனின் பாதங்களில் சட்டென்று விழுந்து வணங்கினான்..
பதறி விலகினான் ஸ்ரீராமன்!...

"என்ன காரியம் செய்தீர்!.. வேத சாஸ்திரங்கள் அறிந்த ஒரு அந்தணர், எனது கால்களில் விழலாமோ?..
இது தமது தர்மத்துக்குப் புறம்பானது என்பதை எப்படி மறந்தீர்?.."

இராமனின் கேள்வி அனுமனை நெகிழச் செய்தது...

இருகரங்களையும் குவித்து இராமனை வணங்கினான்...
"ஐயனே! அடியேனை மன்னித்தருள்வீர்!..
ப்ரம்மச்சாரி உருவம் எடுத்துத் தம்மைக் காண வந்த அடியேனும் உண்மையில் ஒரு வானரனே!
அடியேனது நிஜமான உருவத்தை இப்பொழுதே தாம் காண்பீராக!.."

பார்த்துக்கொண்டே இருக்கும்பொழுதே, இராமலக்ஷ்மணர்கள் வியந்து போகும்வண்ணம் அனுமன் தன் பேருருவுடன் அவர்கள் முன் நின்றான்!

வேதமே வடிவெடுத்து வந்ததோ என எண்ணும்படியான பொலிவோடு காட்சியளித்த அனுமனின் முகத்தைப் பார்த்து, காகுத்தன் வியந்தே போனான்!

"வெறும் அறிவிற் சிறந்தவனாய் மட்டுமில்லாது, வீரமும் உடையவன் இவன்" என்பதைத் தங்கமாய் தகதகக்கின்ற மேருமலை போன்ற அவன் புஜங்களைப் பார்த்தே இராமன் புரிந்துகொண்டான்!

இராமனின் மகிழ்ச்சி அவன் வார்த்தைகளில் வெளிவந்தது...

"இலக்ஷ்மணா.. ஒன்னு கவனிச்சயா?.. இன்னிக்கு நாம புறப்படச்சே எல்லாமே நல்ல சகுனமாவே இருந்தது!.. அதுதான், நமக்கு இந்த அனுமன் கெடச்சுருக்கான்னு நெனைக்கறேன்...இனி நம்மளோட கஷ்டமெல்லாம் ரொம்ப சீக்கரம் காணாம போயிடும்னு தோணறது..
இவன மாதிரி ஒரு பெரிய வீரன், சுக்ரீவன்கிட்ட ஏவல் செய்யறான்னா, அப்ப அந்த சுக்ரீவன் எப்பேர்ப்பட்டவனா இருக்கணும்... நாம சரியான எடத்துக்குத்தான் வந்திருக்கோம்னு நெனைக்கறேன்..."

"அண்ணா... நீங்க சரியாதான் சொல்றேள்.. எனக்கும் இந்த அனுமன ரொம்ப பிடிச்சுருக்கு.. இவனோட தலைவன் சுக்ரீவனையும் சந்திச்சோம்னா, நமக்கு இன்னும் அனுகூலமா இருக்கும்.."

சகோதரர்களின் உரையாடலைக் கேட்ட அனுமன், இருவரையும் அடிபணிந்தான்..

"வீரர்களே.. தாம் இருவரும் இதோ இந்த மரநிழலிலேயே சற்றுநேரம் ஆஸ்வாசமாய் அமருங்கள். அடியேன் என்னுடைய தலைவனான சுக்ரீவனிடம், தம்மைப் பற்றிய சேதிகளை எல்லாம் சொல்லி அவரை இங்கே அழைத்து வருகிறேன்.."

இராமனின் இசைவைப் பெற்றுக்கொண்ட அனுமன், காற்றினும் கடிதாய் சுக்ரீவனின் இருப்பிடம் நோக்கி விரைந்தான்...

இன்னமும் பயரேகைகள் முகத்தில் தென்பட ஒளிந்துகொண்டிருந்தான் சுக்ரீவன்..

"இளவரசே!.. நமக்கு விடிவுகாலம் பொறந்துடுத்து!.. சீக்ரமா நீங்க கிஷ்கிந்தையோட சிம்மாசனத்தில ஒக்காரப் போறேள்.. ஒங்க சகோதரர் வாலியோட அட்டகாசம் எல்லாத்தயும் அடக்கறதுக்கு அந்த தெய்வமே நேரில வந்துருக்கோன்னு தோணறது..

வந்துருக்கவா ரெண்டு பேரும் சகோதரர்களாம்.. இராம இலக்ஷ்மணான்னு பேரு..

அயோத்தி சக்ரவர்த்தி தசரதரோட புத்ரர்களாம்!...
ரெண்டு பேரும் ரொம்ப தெய்வாம்சம் பொருந்தினவாளா இருக்கா..அதோட இல்லாம ரொம்ப பலசாலியாவும் தெரியறா..

மூத்தவன் இராமன் தாடகைய வதம் செஞ்சவராம்!..
அவர்தான் அன்னிக்கு ஜனஸ்தானத்தில தனியா நின்னு அரக்கர் கூட்டம் மொத்தத்தையும் அழிச்சவராம்!...

கடைசியா கபந்தனை மேல் லோகத்துக்கு அனுப்பி வெச்சதும் அவர்தானாம்!

இராமனோட மனைவி சீதைய கொஞ்ச நாளைக்கு முன்னாடி இராவணன் கடத்திண்டு போனதால, அவள மீட்கறதுக்கான முயற்சியில இப்போ ப்ராதாக்கள் ரெண்டு பேரும் எறங்கியிருக்கா. இது நடுவுல, ஒங்களோட நல்லகாலம், ஒங்களத் தேடிண்டு இங்க வந்துருக்கா. இது தெய்வமா ஒங்களுக்குக் கொடுத்திருக்கற சந்தர்ப்பம்.. இவாளோட சஹாயம் இருந்தா ஒங்க ப்ராதாவ நீங்க சுலபமா ஜெயிக்கலாம்..
அதனால என்பேச்ச கேட்டு, இப்பவே அவாள சந்திக்க வாங்கோ.."

அனுமன் சொல்லச் சொல்ல சுக்ரீவன் முகத்தில், வெகு காலத்திற்குப் பிறகு மலர்ச்சியின் கீற்று தோன்றியது...

## பகுதி –14

அனுமனின் வார்த்தைகள், இத்தனைக் காலமும் துன்பக்கனலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த சுக்ரீவனின் செவிகளில் தேனைப் பாய்ச்சின.......

ஜலசமுத்திரத்தில் சிக்கித் தவிப்பவனுக்கு, ஒரு சிறு மரத்துடுப்பு கிடைத்தாலும் போதும் என்றிருக்க, ஒரு மரக்கலமே கிடைக்கப் பெற்றால், அவனது மகிழ்ச்சிக்கும் மனநிம்மதிக்கும் கேட்கவா வேண்டும்?..

இப்போது அந்த நிலையில்தான் இருந்தான் சுக்ரீவன்! அமுதமயமான வார்த்தைகளால் தன்னை மீட்ட அனுமனை, ஆரத் தழுவினான்...

"ஹே... வாயுபுத்ரா!.. ஒன்னோட தொண எனக்கு இருக்கச்சே, எனக்கு ஏது கொறை?.."

உணர்ச்சி மேலீட்டால் அவனது விழிகளில் நீர்வழிந்தது..

சம்சார தாபத்தில் சிக்கித் தவிப்பவனை தனது உபதேசத்தாலும், வழிகாட்டுதலாலும் மீட்டெடுக்கின்ற ஆன்மீக குருவாகவே, இப்போது அனுமன், சுக்ரீவனின் கண்களுக்குத் தெரிந்தான்..

இலக்கு தெரிந்தாகிவிட்டது. இனி... இணங்கினால் மட்டும் போதுமே! காரியம் தன்னடையே ஜயமாகிவிடுமே..

அறிவுகூர்மையுடைய சுக்ரீவன், தன்னை இராமனிடம் ஒப்படைத்துக்கொள்ள, அனுமனின் துணையோடு, புறப்பட்டான்...
நரனாய் வந்த நாரணனும், வானரமாய் நின்ற வெஞ்சுடரோனின் வாரிசும் ஒருவரை ஒருவர் சந்தித்த அந்த அழகிய தருணத்தில், ஸ்ரீராமனைப் பார்த்த சுக்ரீவன், அப்படியே ஸ்தம்பித்து நின்றான்!..

"இந்த அனுமனை மிகவும் புத்தி கூர்மை உடையவன் என்று நினைத்தேனே...

ஆனால், இவனுக்குத் தான் பார்த்ததை முழுவதுமாய் சொல்லக்கூடத் தெரியலையே..

வானத்துச் சந்திரனே வதன சந்திரனாய் ஒளிரும் ஒளிவண்ணனை.......
மேகத்து நீலமே மேனியின் வண்ணமாய் கொண்ட மேன்மையானவனை........
தாபத்தைத் தீர்க்கும் விழி இணைகள் விளங்கும் விண்ணோர் நாயகனை.......
பாபத்தை அழித்துப் பரிசுத்தமாக்கும், பரம்பொருளானவனை...

....ஏதோ சாதாரண மனிதனாய் சித்தரித்தானே!...சற்று நான் ஏமாந்தேனே...!
அடடா...."

என்று மயங்கி, அந்த மரகதமலையிடம் தன்மனதை அப்படியே பறிகொடுத்தான்...
சிறு சுழலில் அகப்பட்டவன், தொடர்ந்து வருகின்ற நீரின் சுழற்சியில் மூழ்கியே போய்விடுவதைப் போல,சுக்ரீவனைப் பார்த்து இராமன் தனது செவ்விதழ்கள் விரித்துச் சிந்திய புன்னகையில், சுக்ரீவன் அமிழ்ந்து அடையாளமின்றிப் போனான்...

தன்னிலை இழந்து கொண்டிருப்பவனைத் தாங்கிப் பிடிக்கும் தயாள குணமுடைய இராமன், சுக்ரீவனின் நிலையை உணர்ந்தவனாய், தனது செந்தாமரைப் போன்ற திருக்கரங்களை அகல விரித்து, கமலக் கண் இணைகளைச் சுக்ரீவனுக்குத்

தூதாகவும் அனுப்பினான்.கடல் நாடி நதி ஐக்யமாவது போல். காகுத்தனின் விரிந்த கரங்களுக்கிடையில், தன்னை ஒப்படைத்தான் சுக்ரீவன்! ஓடி வந்து தன்னுள் அடைக்கலமானவனை,
"வாடிநீ இனி இருக்க வேண்டியதில்லை" என்னும் உறுதி வெளிப்பட, இதமாய் அணைத்தான் இரகுவீரன்..

## பகுதி -15

இராமன் தழுவிய அந்த க்ஷணமே, சுக்ரீவனை இதுநாளும் வாட்டிக்கொண்டிருந்த பலவிதமான தாபங்களும் அவனிடமிருந்து சொல்லிக் கொள்ளாமலேயே விடைபெற்றன. அவனறியாமலேயே, மனத்தில் ஒரு அமைதி நிரம்பி வழிவதை அனுபவ பூர்வமாக அவனால் உணரமுடிந்தது! ஒரு ஆசானாய் அனுமன் காட்டிய வழியில் நடந்து வந்த ஒரே காரணத்தினால், சுக்ரீவனுக்கு "இராம ஆலிங்கனம்" சாத்தியமாயிற்று! அதன் எதிரொலியாய், அவன் தனது அத்தனைத் துன்பங்களிலிருந்தும் மீள்வதும், இனி சத்தியமாயிற்று! சற்று நேரம்வரையில் சுக்ரீவனைத் தனது அணைப்பினால் ஆஸ்வாஸப்படுத்திய இராமன், மெல்லத் தன்கரங்களை விலக்கிக்கொண்டான். இப்போது, இராமனின் விழித்தாமரைகள் இரண்டும் சுக்ரீவனை இதமாய் ஒற்றியெடுத்தன......

தேகம் ஒரு கணம் சுக்ரீவனுக்குச் சிலிர்த்து அடங்கியது. தன்னைச் சுதாரித்துக் கொண்டவன், மெதுவாக வாய்திறந்தான்...

"கோமானே!.. இந்த எளியோனின் வணக்கங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்..........

தம்மைக் காணும் முன்பே, பல விதமான நற்சகுனங்களும், தமது நல்வரவை உறுதி செய்தன. இதோ... இந்தக் கணத்தில் உம்மைக் கண்ட போதிலே, அடியேனது சௌபாக்கியங்கள் அடியேனுக்கு மீண்டும் வசப்படும் என்பதும் தெளிவாகிறது..

தேடிவந்து வரம் கொடுக்கும் தெய்வமாகத் தம்மை உணர்கிறேன்..
ஓடிவந்து உதவத் துடிக்கும் உறவாக உம்மைக் காண்கிறேன்..
நாடி வந்து நன்மை செய்யும் நாதனாகவே உம்மை அறிகிறேன்..
கோடி ஜன்ம புண்ய பலனைத் தமது உருவமிதில் பார்க்கிறேன்..
இனி இந்த ஏழைக்கு இயலாததுதான் ஏது?.."

சுக்ரீவனின் வார்த்தைகளில் ஆனந்தம் அடைந்தான் இராமன்..

"தோழனே! உனது பணிவான பேச்சு, என்னைப் பனியாக உருகவைக்கிறது!
உனது இனிமையான ஸ்வபாவம், உனக்கு ஏதேனும் நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் ஏற்படுத்துகிறது..
உனது இருப்பிடத்தை எனக்குக் காட்டித் தந்தவள் சபரி மாதா..
அவரது வார்த்தையை அடியொற்றிப் பயணித்து உன்னையும் கண்டுவிட்டேன்..

இனி நான் அனுபவிக்கின்ற துன்பத்திற்கான விடிவும் உனது சகாயத்தால் கைகூடி வரும் என்று நம்புகிறேன்..
உனது அமைச்சன் அனுமனின் வாயிலாக, நீயும் இன்னலுக்கு ஆட்பட்டிருக்கிறாய் என்பதை அறிந்தேன்..
உனது விவரங்களைத் தெளிவாகக் கூறினால், நாம் மேற்கொண்டு செய்ய வேண்டியவைகளை ஆராயலாம்.."
இராமனின் அனுசரணையான பேச்சு, சுக்ரீவனை மேலும் சகஜ நிலைக்கு அழைத்து வந்தது..

"ஹே நாதா... இந்த சுக்ரீவனின் பரிதாபமான கதையை தமக்கு ஆதியோடு அந்தமாய்ச் சொல்கிறேன்..தாம் அவற்றைச் செவிமடுத்து, அடியேனுக்குண்டான நன்மையைச் செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.."

வானர அரசனாக இருந்தும், சுக்ரீவனிடத்தில் காணப்பட்ட பவ்யம், இராமனை வசீகரித்தது...

"ஆகட்டும் சுக்ரீவா..உனது கதையை அறிய ஆவலாகவே உள்ளேன்...விவரமாகச் சொல்வாய்.."

இதற்குள் அஞ்சனை மைந்தன் அனுமன் குறுக்கிட்டான்..

"வானர ராஜனே!..இவாளப் பாத்தா ரொம்ப களைச்சுபோய் வந்திருக்கா மாதிரி தெரியறது.. நம்ம எடத்துக்குக் கூட்டிண்டுபோய், கொஞ்சம் தங்கள ஆஸ்வாஸப் படுத்திக்கும்படி பண்ணலாம். அப்பறம் நிதானமா பேசலாமே..."

சுக்ரீவனுக்கும் அதுவே சரியென்று பட்டது. வானர ராஜனையும், அனுமனையும் பின்தொடர்ந்த ராமலக்ஷ்மணர்கள், சுக்ரீவன் வசிக்கின்ற அந்த அழகிய நந்தவனத்தை வந்தடைந்தனர். விதவிதமான பூக்களும், வானுயர்ந்த விருக்ஷங்களுமாய் அந்தச் சோலை, அழகொடு மிளிர்ந்தது. அழகிய பெரிய தடாகமும், அதில் ஆரவாரம் செய்கின்ற பறவைகளும், கண்களைக் கவர்ந்தன. சிலுசிலுவென்று வீசுகின்ற காற்றில் பூக்களின் சுகந்தம் சேர்ந்திருந்தது. உண்ணத்தகுந்த கனிகளையும், காய்களையும் ஏந்திய மரங்களும், செடிகளும், கொடிகளும் அபரிமிதமாய் இருந்தன. இவற்றின் இடையே, அன்றலர்ந்த மலர்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட அழகிய புஷ்ப மேடைகளும் நிறைந்திருந்தன..

தசரத புத்திரர்களுக்குத் தகுந்த ஆசனம் அளித்து அமரச் செய்த அனுமன் உண்ணக் கனிகளையும், கிழங்குகளையும், பழரசங்களையும் கொண்டுவந்து அடுக்கினான்.
பொதுவாக விருந்தாளிகளை உபசரிப்பதை பெண்கள் ஆவலோடு செய்வது வழக்கமாக இருக்க, அனுமன் அளித்த விருந்து, இராமனுக்கு வித்யாசமாகப் பட்டது.
மெதுவாக சுக்ரீவனைப் பார்த்தவன், விழிகளில் நீர்கசிய அந்த வினாவைத் தொடுத்தான்...
"நண்பனே... நீயும் என்னைப் போல், உனது துணையைப் பிரிந்திருக்கிறாயோ?..."

## பகுதி –16

ஒரு ஆண்மகன்....... அதிலும் ஒரு கூட்டத்தின் தலைமகன்!..........
வீரத்திலும் தீரத்திலும் சற்றும் குறைவில்லாத திருமகன்!...

இத்தனைத் தகுதிகள் இருந்தும், சுக்ரீவனின் கண்களில், இராமன் எழுப்பிய வினா, அனிச்சையாய் நீரை வரவழைத்தது!..ருமையின் ஞாபகம், ஒரு நொடியில் அவனுள் மாற்றத்தைக் கொண்டுவந்திருந்தது.., தனது கேள்விக்குச் சுக்ரீவன் நேரடியாக விடையளிக்காத போதும், தலைகவிழ்ந்து, அவன் உடல் குலுங்குவதிலிருந்து அவனது துக்கத்தை இராமனால் உணரமுடிந்தது.......

"பிரிவு ஆண்மகனையும் பாதிக்கும்!" என்பதை இராமன் அறியாதவனா என்ன?..........

ஒரு ஆணின் கண்ணீர் விமரிசனங்களுக்கு ஆட்படுவது வழக்கம்தான்!

ஆனால், அவற்றையெல்லாம் தாண்டி, அவனது சோகங்களுக்கும் ஒரு வடிகால் தேவைப்படுகிறதே..........

எப்பொழுதுமே கலங்காமல் இருப்பதென்பது அவனுக்கும் சாத்யம் அல்லவே...

இராமன் சுக்ரீவனை முழுதாகப் புரிந்துகொண்டான்! வார்த்தைகளுக்கும் அப்பாற்பட்டதான சோகத்தை சுக்ரீவன் அனுபவிப்பதை அவனால் அனுமானிக்க முடிந்தது. இங்கிதமும் சமயோசிதமும் இருகண்களாகக் கொண்ட அனுமன் இப்பொழுது பேசினான்..

"ஹே ப்ரபு....... அடியேனுடைய அரசனின் கதையை அடியேன் மூலமாகத் தாம் அறிந்து கொள்ளுங்கள். கூட இருந்து பார்த்தவன் என்ற முறையில், அடியேனால் அந்த வரலாற்றைத் தமக்கு விரிவாகச் சொல்ல இயலும்.."
என்று வினயத்தோடு விண்ணப்பித்தான்..

"ஆகட்டும் அனுமனே!.. நீயே உன்னுடைய அரசனது விருந்தாந்தத்தை எடுத்துச் சொல்!.."

இராமனின் சம்மதத்தின் பேரில் அனுமன் ஆரம்பித்தான்..

"ஐயனே! குற்றமற்ற கயிலாயபதியின் அனுக்ரஹத்தோடு இந்திரனின் புத்ரனாகத் தோன்றியவன் வாலி.
அவனுடைய இளவலாக, சூரியபுத்ரனாகத் தோன்றியவர் அடியேனுடைய அரசனான சுக்ரீவன்..
ஆனால் இருவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் ஆவர்!
அதனால், ஒற்றுமையோடு கிஷ்கிந்தையைப் பரிபாலனம் செய்து வந்தார்கள்.......

பராக்ரமத்தில், வாலி சுக்ரீவர் இருவருமே ஒருவருக்கொருவர் சளைத்தவர் அல்லர்………

இருந்தாலும் தனது தந்தையான இந்திரனிடமிருந்து பெற்ற காஞ்சன மாலையின் பிரபாவத்தினால், வாலி சுக்ரீவனைக் காட்டிலும் சக்தி வாய்ந்தவனாகத் திகழ்ந்தான்!

அதுவுமன்றி தேவர்களிடமிருந்து பெற்ற வரத்தினால், தன்னோடு யார் போரிட்டாலும், அவர்கள் பலத்தில் பாதிபலம் தன்னை வந்தடையும்படியான அபூர்வமான வரத்தையும் வாலி வாய்க்கப் பெற்றிருந்தான்…….

அசகாயமாய் எதையும் செய்யக்கூடிய வல்லமைப் பெற்றவனான அவன் பாற்கடலைக் கடைகின்ற பொழுது தேவர்களுக்கு உதவியாக இருந்தான்.

அதனால் மகிழ்வடைந்த அந்த விண்ணவர்களின் பரிசாகத் "தாரை" என்கிற அரமகளைத் தனது மனைவியாக அடைந்தான்.

வெற்றித் திருமகனாய் ஒளிர்ந்த அவனது வலிமைகளைப் பட்டியலிடும் அளவிற்கு, வார்த்தைகளுக்கும் வீரியம் கிடையாது!.

காற்றின் வேகத்தைக் காட்டிலும் அதிக வேகமுடையவன் அவன்!
கடல்கள் அனைத்தையும் அனாயாசமாகத் தாண்டும் வல்லமை உடையவன் அவன்!
தீரத்தில் திருமாலுக்கு நிகரானவன்!
திக்கெட்டிலும் தனக்குவமை இல்லாதவன்!
கோள்களும் இவனுக்கு அஞ்சும்!
கோமகன் அவன் பாரம் தாங்காது பூமியும் கெஞ்சும்!
அவன் கர்ஜிக்கும் இடத்தில் சிம்மங்கள் பூனையாகும்!
கொடுக்கும் மழைமேகங்கள் இடிக்காது பொழிந்து போகும்!

தனது அங்கத்தில் ஒருஉறுப்பான வாலில், தசமுகனான இராவணனைப் பிணைத்தவன் அவன்! அப்படிப் பிணைத்தவனைத் தன்பிள்ளை அங்கதனின் தொட்டிலில், பொம்மையாக இணைத்தவனும் அவன்!

அவனது வீரம் எங்களுக்கெல்லாம் அரணாக விளங்கியது! மற்றவர்களுக்கு அதுவே அச்சுறுத்தலாகவும் அமைந்தது!

அவன் ஒருசமயம் தன்னுடன் போருக்கு வந்த துந்துபி என்ற அசுரனை அனாயாசமாகக் கொன்று, அவனது சரீரத்தைத் தன் கால்களால் உந்தி, இதோ இந்தப் ப்ரதேசத்தில் வந்துவிழும்படி செய்தான். அப்போது இங்கே மதங்க முனிவரின் ஆசிரமம் இருந்தது..
தனது இடத்தை மாசுபடுத்தியவன் மீது கோபம் கொண்ட முனிவர், "இந்தக் காரியத்தைச் செய்தவன் இந்தப் பிரதேசத்தில் நுழைவானாயின், தலைவெடித்து

இறப்பான்" என்று சாபமிட்டார். அந்த சாபம், அடியேனது அரசனுக்கு வரமாக அமைந்ததாலேயே, இன்றுவரையில் அவர் இங்கே வாழ்ந்து வருகிறார்.."

இத்தனையும் செவிமடுத்த இராமன் இப்போது இடைமறித்தான்..

"அனுமனே!.. துந்துபியைக் கொன்ற பிறகு என்னவாயிற்று?..
சுக்ரீவன் இந்த இடத்தில் வந்து வாழும்படியாய் நடந்த நிகழ்வு என்ன?..
அதையும் விவரமாகக் கூறுவாய்.."

## பகுதி –17

" அவஸ்யம் சொல்கிறேன் ஐயனே......
முழு விவரங்களையும் கூறினால், தமக்கும் அடியேனது அரசனது அவலநிலை நன்கு விளங்கும்.."
என்ற அனுமன் மேற்கொண்டு இராமனிடம் விவரங்களைத் தொடர்ந்தான்..

"ப்ரபோ!.. அந்த துந்துபிக்கு மாயாவி என்ற ஒரு நெருங்கிய நண்பன் இருந்தான். இருவரும் நகமும் சதையும் போல எப்பொழுதும் இருப்பார்கள்.

வாலி, துந்துபியைக் கொன்றான் என்று அறிந்ததும் அந்த மாயாவி கொதித்துப் போனான். தனது நண்பனது மரணத்துக்குப் பழிவாங்கியே தீருவேன் என்ற சபதத்துடன், ஒருநாள் வாலியின் வாசலில் வந்து நின்று அவனைப் போருக்கு அழைத்தான்..வலிய வந்து தன்னை அழைத்த அசுரனைக்கண்டு, வாலியின் கோபம் தலைக்கேறியது.

காடு மேடெல்லாம் அவனை ஓடஓடத் துரத்திச் சண்டையிட்டான் வாலி......
அவர்களது சண்டை, நாட்கள் மாதங்கள் என நீண்டன..... ஆயினும் முடிவுக்கு வரவில்லை.

இந்த நிலையில் சோர்வடைந்த மாயாவி, தன்னைக் காத்துக்கொள்ள ஒரு மலைக்குகையுள் நுழைந்தான். வாலியோ அவனை விடுவதாக இல்லை! அவன் பின்னால் தானும் குகையுள் நுழைந்தான்.

உள்ளே செல்வதற்கு முன், தன்னை இத்தனை நாளாய்ப் பரிதவிப்போடு பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்த தனது இளவலான எங்கள் அரசன் சுக்ரீவனைப் பார்த்து, "தம்பி! இந்தக் குகை வாசல்ல நீ காவலிரு! அசுரனை எப்டியாவது நான் முடிச்சுட்டுத்தான் வருவேன். ஒருவேள என்ன மீறி அவன் இந்த குகையவிட்டு வெளிலவர முயற்சிக்கலாம். அப்போ நீதான் அவன் தப்பாதபடி பாத்துக்கணும்" என்று கட்டளையிட்டுவிட்டு, தான் அந்த அசுரனோடு சண்டையிடச் சென்றுவிட்டான்.
அடியேனது அரசன் சுக்ரீவன் தனது சகோதரனது உத்தரவை, தெய்வ உத்தரவாக எண்ணி, அன்ன ஆகாரம் இல்லாமல், மாதக் கணக்கில் குகை வாசலிலேயே காவல் இருந்தார்......

அப்பொழுது ஒருநாள் குகையிலிருந்து செங்குருதி கொப்பளித்து வந்தது.......
இறந்தது யாரென்று தெரியாமல், சுக்ரீவன் தனது சகோதரனை பலமுறை அழைத்துப் பார்த்தார். பதில்வராமல் போகவே பயந்து போனவர், வாலி இறந்து விட்டான் என்று நினைத்துவிட்டார். உள்ளேயிருந்து அசுரன் வெளியே வந்தால், தன்னையும் கொன்றுவிடுவான் என்றெண்ணி, பெரிய பாறாங்கல்லால் குகை வாசலை அடைத்துவிட்டார். வருத்தத்தோடு கிஷ்கிந்தை திரும்பியவர், "வாலி இறந்தான்" என்று அனைவரிடமும் கூறிவிட்டார்..

அரசன் இல்லாமல் கிஷ்கிந்தை மாதக்கணக்கில் இருந்தது. அந்த சமயம் அமைச்சர்கள் எல்லாரும் ஒன்று கூடி, சுக்ரீவனை அரசப்பதவியை ஏற்கச் சொல்லி வற்புறுத்தினார்கள். ஆனால் அடியேனது அரசன் அதற்கு இசையவில்லை. அவர், வாலியின் மைந்தன் அங்கதனுக்குப் பட்டம் சூட்டும்படி கூறிவிட்டார்.

இந்த விஷயம் வாலியின் மனைவி தாரைக்கு எட்டியதும், அவள் சுக்ரீவனை அழைத்தாள். அங்கதன் சிறுபாலன் ஆனபடியால், அவனுக்கு உரியவயது வரும்வரையில் சுக்ரீவனை ராஜ்ய பரிபாலனம் செய்யும்படிச் சொன்னாள். வேறு வழியின்றி சுக்ரீவன் இணங்கும்படி ஆயிற்று.

சுக்ரீவன் அரசப் பதவியை ஏற்ற சில மாதங்களில், யாருமே எதிர்பாராத வகையில், ஒருநாள் வாலி உயிரோடு வந்தான்.
அரசனாகத் தனது இளவலைப் பார்த்தவனுக்கு இரத்தம் கொதித்தது. திட்டமிட்டு, வேண்டுமென்றே சுக்ரீவன் தனக்கு அநீதி இழைத்துவிட்டான் என்றுத் திடமாக நம்பினான்.சுக்ரீவன் உண்மையைச் சொல்லி எவ்வளவோ மன்றாடியும், அவரது பேச்சை அவன் கேட்பதாக இல்லை! சுக்ரீவன் சார்பில் பேசவந்த தாரையையும் அவன் உதாசீனப்படுத்தினான்!

கோபத்தில் அறிவை இழந்திருந்த அவனை நெருங்கவே, அமைச்சர்கள் அஞ்சினர். மிதமிஞ்சிய ஆத்திரத்தோடு, கூடப்பிறந்தவன் என்றும் பாராது, சுக்ரீவனை, வாலி பந்தாடினான். இந்தப் பரந்த பூமியின் இண்டு இடுக்கெல்லாம், தன்னுடைய சகோதரனை ஓடஓடத் துரத்தினான். ஒருகட்டத்தில் பலமிழந்துக் குற்றுயிராகிப் போன சுக்ரீவனுக்கு, மதங்க முனிவரின் சாபம் நினைவு வந்தது.

இங்கு வந்தால், வாலியால் தன்னை ஒன்றும் செய்யமுடியாது என்பதை உணர்ந்தவர், ஓடிவந்து இங்கே ஒளிந்து கொண்டார். சுக்ரீவனின் மனைவி ருமையையும், வாலி பலவந்தப்படுத்தித் தன்னவளாய் ஆக்கிக் கொண்டான்! இப்படி கட்டிய மனைவியையும், ஒட்டு உறவுகளையும் பிரிந்து, பலகாலமாய் அடியேனது அரசன் துன்பத்தை மட்டுமே அனுபவித்து வருகிறார்.
அவருக்கு விமோசனம் உம்மால் நிகழ வேண்டும் ப்ரபோ!.."

கண்ணீரோடும் கவலையோடும் சொல்லி முடித்தான் அனுமன்..சுக்ரீவனது விருத்தாந்தம் இராமனைக் கலங்க வைத்தது..

வெவ்வேறு தாய்க்குப் பிறந்திருந்த தன்னுடைய சகோதரர்களை எண்ணி, ஒருகணம் இராமனின் மனது நெகிழ்ச்சியால் விம்மியது!

உலகிலுள்ள அத்தனைச் சகோதரர்களும், தன் சகோதரர்கள் போலத்தான் இருப்பார்கள் என்று இத்தனை நாளாய் நினைத்திருந்தவனுக்குச் சுக்ரீவனின் சகோதரனான வாலி, பெரும் வியப்பையும், அதிர்ச்சியையும் ஒருசேர உண்டாக்கினான்!..

## பகுதி –18

அனுமனின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த இராமனுக்கு, வாலி "வல்லான்" என்பதைவிட, அவன் "பொல்லான்" என்பது பட்டவர்த்தனமாகப் புரிந்துபோனது. யாரும் அருகிலில்லாத நேரத்தில் கபடமாய்த் தன் மனைவியைக் கவர்ந்து சென்ற இராவணனைக் காட்டிலும், எல்லோரையும் வைத்துக்கொண்டே, சுக்ரீவனின் மனைவியாகிய ருமையைத் தன்னவளாய் ஆக்கிக்கொண்ட வாலியின் அழிச்சாட்டியம், அவனுள் சினத்தை மூட்டியது!

ஒருகணமும் தாமதிக்காமல், உடனே திருவாய் மலர்ந்தான் ரகுவீரன்........

"ஹே..வானர ராஜனே!......
ஈரேழு லோகங்களில் யார் வாலியின் உயிரைக் காப்பதற்குத் துணை வந்தாலும் சரி...... நான் அவரோடு சேர்த்து வாலியையும் அழிப்பேன்.......
இழந்துபோன உனது செல்வங்கள் அனைத்தையும் மீண்டும் நீ அடையும்படி செய்வேன்! இது சத்தியம்!...
எனக்கு இப்பொழுதே அந்த வாலி இருக்குமிடத்தைக் காட்டுவாயாக!...

இராமனின் இந்தச் சொற்கள், இத்தனைக் காலமும் சோகக் கடலுள் ஆழ்ந்திருந்த சுக்ரீவனைப் பெயர்த்தெடுத்து, அப்படியே மகிழ்ச்சி அலை மோதும் மகாசமுத்திரத்தில் நீந்த வைத்தது. ஆனாலும், அவனுக்குள் ஐயம் தலைதூக்கியது.....

"இவனால் உண்மையில் இது ஆகுமா?......."

சஞ்சல புத்தியால் ஆட்படுகின்ற ஜீவன், தெய்வம் நேரில் வந்து வரம் கொடுக்க முனையும்போதும், ஆராயவே செய்கிறது!......

சுக்ரீவனும் அதற்குத் தான் விலக்கல்ல என்று நிரூபித்தான்......

"ஹே..இராமா..... கொஞ்சம் எனது அமைச்சர்களுடன் இதுவிஷயமாய் ஆலோசித்து, மீண்டும் உன்னிடம் வருகிறேன்.."

ஏதும் அறியாதவனாய்த் தன்னைக் காட்டிக் கொண்டான் இராமன்!

வானர சபை கூடியது. சுக்ரீவனின் முகத்தைப் பார்த்தே, அவனுக்குள்ளிருந்த ஐயத்தை அனுமன் ஊகித்தான்..

"வானர ராஜனே! தாம் யாரோட வலிமையச் சந்தேகப்படறேளோ, அவர் உண்மையில யார்னு நீங்க புரிஞ்சுக்கலேன்னு நெனைக்கறேன்....

நாம நினைக்கற மாதிரி, இவர் சாதாரண மனுஷன் இல்ல! இவர சாக்ஷாத் அந்த மாதவனாவே நான் பாக்கறேன்.....

"எத வெச்சு சொல்ற?"ன்னு நீங்க கேக்கலாம்.......

ஆனா, "இத வெச்சுதான் சொல்றேன்" னு சொல்ல முடியாதபடி இவரோட பிரபாவம், கடல் மாதிரி இருக்கு!

அன்னிக்கு ஜனஸ்தானத்தில தனிமனுஷனா அசுரக் கூட்டத்த நாசம் செஞ்சவருக்கு, ஒங்க அண்ணன முடிக்க எவ்ளோ நாழி ஆயிடும்?

இவரோட அபயக்கரங்களில தெரியற சங்குசக்கர ரேகைகள வெச்சே, இவர அந்தப் பாற்கடல் வாசன்னு ஒங்களால புரிஞ்சுக்க முடியலயா?......

இதுவரைக்கும் நம்மளோட மனசு அடையாத சமாதானம், இன்னிக்கு இவரப் பாத்த மாத்திரத்தில, நமக்குக் கெடச்சுருக்கறத ஒங்களால மறுக்க முடியுமா?.......

ஆனாலும், ஆராய சொல்றது நம்ம புத்தி!

அதுக்கும் நான் வெச்சுருக்கேன் ஒரு யுக்தி......

ஒங்க விருப்பம் போலவே, இவரோட சக்தியை நாம சோதிச்சுப் பாத்துடுவோம்..
அப்பறமாவாது நீங்க இவர நம்புவேளா?.."

சுக்ரீவன் மட்டுமல்ல.. வாலியின் மீதிருந்த அளவுகடந்த அச்சத்தினால், அனுமனின் இந்த உபாயத்தை, மற்ற வானரர்களும் கரகோஷம் செய்து வரவேற்றனர்......

"நல்ல வார்த்தயா சொன்ன வாயுபுத்ரா!
ஒன்ன மாதிரி "மதி மந்திரி" என் பக்கத்துல இருக்கச்சே எனக்கு என்ன கொறச்சல்?.."

அனுமனைக் கொண்டாடிய சுக்ரீவன், நேராக இராமனிடம் வந்தான்..

"ஹே ரகுவீரா... என்னப் பாத்து பரிதாபப்பட்டு நீ வாலிய கொல்றதா சபதம் செஞ்ச மாதிரி தெரியறது.....

ஆனா, அவனோட பலத்த நேரில நெறய பாத்தவன் நான். அதனால, ஒன்னோட பலத்தயும் நான் நேரில ஒருமுறை பாத்தா, ஒன்னால வாலிய வதம் செய்ய முடியுமான்னு தெரிஞ்சுப்பேன்.. இதுல ஒனக்கு எந்த வருத்தமும் இல்லயே?"..

"என்ன செய்யணும்னு சொல் சுக்ரீவா..."

தன்னை நிரூபிக்கத் தெய்வம் தயாரானது! வானரப்படை சூழ சுக்ரீவன் அருகிலிருந்த ஒரு பெரிய காட்டிற்கு இராமனை அழைத்துச் சென்றான். செல்கின்ற பாதையில் இடையூறாய், குருதி வற்றிக் கிடந்த ஒரு எலும்புக் குவியல் மலைபோல் உயர்ந்திருப்பதைக் கண்ட இராமன், "இது என்ன?" என்று பார்வையாலேயே சுக்ரீவனை வினவினான்......

"ஹே ரகுவீரா!. இதுதான் வாலியால விசிறியடிக்கப்பட்டத் துந்துபியோட எலும்புக்கூடு.. அவன் உயிர்தான் வானுலகத்துக்குப் போச்சு!. அவனோட ஒடம்பான மாமிச மலை வெகுகாலமா துர்நாற்றத்தப் பரப்பிண்டு இங்கதான் கெடக்கறது!.. குருதி வத்திப்போன இந்த எலும்புக் குவியல அப்புறப்படுத்தற சக்தி எங்க யாருக்கும் இல்ல!"

...சுக்ரீவன் பதிலுரைத்ததும், இராமன் தனது இளவலை நோக்கினான்.......

அண்ணனை அறியாதவனா இலக்ஷ்மணன்?......

பூபாரம் சுமக்கின்ற ஆதிசேஷனுக்கு இதுவெல்லாம் ஒரு வியாபாரமா என்ன!

தனது இடதுகால் பெருவிரலால் உந்தித் தள்ளினான் உதிரம் வற்றிய அந்தப் பெருமலையை......

அந்த எலும்புக்கூடு, யமனுலகம் வரை பயணித்து, "இந்தக் கூடு தாங்கிய உயிர், இப்போது செய்வதென்ன?" என்று ஒரு பார்வை பார்த்துவிட்டுவந்து மீண்டும் தரையில் விழுந்து பொடிந்து போனது!..

இந்த மாதிரியான அசகாய செயலை இதுவரையில் பார்த்திராத வானரர் கூட்டம், இலக்ஷ்மணனின் இந்த தீரத்தைக் கைதட்டி ஆரவாரித்தது......

சுக்ரீவன் முகத்தில் இப்போது கொஞ்சம் தெளிவு பிறந்திருந்தது. இருந்தாலும்... "இதுபோதாது" என்றெண்ணியவன், நெடிதுயர்ந்த மரங்கள் சூழ்ந்த அந்த வனத்தில் இராமனோடு நுழைந்தான்......

"விண்ணையும் தாண்டியதோ?" என்று எண்ணும்படியாய் நெடிதுயர்ந்த மராமரங்கள் ஏழு அங்கே ஒரேவரிசையில் இருந்தன. அவற்றின் கம்பீரம், சொற்களுக்குள் அடங்குவதாய்த் தோன்றவில்லை. அந்த மராமரங்கள், தமது உச்சியை பூவுலகம் காணமுடியாதபடி வளர்ந்திருந்தன.அவற்றின் அடியைப் பாதாளலோகங்கள்

இன்னமும் தேடிக்கொண்டிருந்தன. அவற்றின் கிளைகள் விஷ்ணுலோகம், ஸத்யலோகம், ஸிவலோகம், தேவலோகம் என்று நாற்புறங்களிலும் வியாபித்திருந்தன. அந்த மரங்களில் தேவலோகத்துப் பறவைகள் தமது கூடுகளை அமைத்துக் கொண்டிருந்தன. அந்த மரங்களின் கனிவகைகளின் ருசியை தேவமாதர்கள் பெரிதும் விரும்பி உண்டனர். அந்த மரங்களின் உரசலில், வெண்மதியும் கொஞ்சம் களங்கம் அடைந்திருந்தது!

அந்த மராமரங்கள் தொலைவில் நின்று பார்ப்பதற்கும், அச்சம் தருபவையாக இருந்தன. மொத்தத்தில், வாலியின் மனதில் சுக்ரீவன் மேலிருந்த பகைபோல அந்த மராமரங்கள் எல்லாதிக்குகளிலும் கிளை, வேர், நுனி என்று பரவிக்கிடந்தன.

## பகுதி –19

மலைத்துப் போய் அந்த மராமரங்களை வியந்து நோக்கிக் கொண்டிருந்த இராமலக்ஷ்மணர்களைப் பார்த்து சுக்ரீவன் பேசினான்.....
"ஹே ராமசந்திரா..... இதோ ஒங்க எதிரத் தெரியற இந்த ஏழு மராமரங்கள்ல ஏதாவது ஒரு மரத்தை ஒங்களோட பாணம் தொளச்சுதுன்னா, ஒங்க பராக்ரமத்த நான் புரிஞ்சுப்பேன்..ஒங்களால அது முடியுமான்னு...."

சுக்ரீவனை முடிக்க விடாமல், அவனைப் பார்த்து மெலிதாய் புன்னகைத்தான் இராமன். வலிமை மிகுந்த கரங்களால் தனது கோதண்டத்தை எடுத்து நிறுத்தி, அதில் நாண் ஏற்றினான். பலம்கொண்டமட்டிலும், தனது செவிவரையில் நாணை இழுத்து மூவேழ் உலகமும் நடுங்கும்வண்ணம் சப்தம் செய்தான்.

"ஊழிக்காலம் வந்ததோ?" என்று உலகின் அத்தனை உயிரும் ஒரே சமயத்தில் நினைத்துக் கலங்கும்படி எழுந்த அந்த பெருஞ்சப்தத்திற்கு, கொஞ்சமும் அச்சமின்றி நின்றது, இராமனது இளவலான இலக்ஷ்மணன் ஒருவன் மட்டுமே!

"இந்த சப்தமே எதிரில் நிற்பவர் உயிரைப் போக்கவல்லதாக இருக்கும்போது, அம்பைத் தொடுக்க வேண்டிய அவசியம்தான் என்ன?.."
என்று அனுமன் நினைத்த அதேகணத்தில் இராமன் வில்லிலிருந்து வேகமாகப் புறப்பட்ட அம்பானது, ஏழு மராமரங்களையும் ஒன்றன்பின் ஒன்றாகத் துளைத்துச் சென்றது. அத்தோடு நில்லாமல், அதன் தொடர்ச்சியாய் பாதாளஉலகம் ஏழையும் துளையிட்டுப் பின்னர் மீண்டு(ம்) இராமனிடம் வந்து சேர்ந்தது.

வெறும் ஏழு மரங்களை மட்டும் துளையிடாமல், ஏழு கீழ் லோகங்களையும் இராமனின் பாணம் துளைக்கக் கிளம்பிய அந்த நொடியில்,
"தமக்கும் இன்னல் நேருமோ?.." என்று ஏழுகடல்களும் அஞ்சின! ஏழு மலைகளும் நடுங்கின! கதிரவனின் ஏழுகுதிரைகளும் மிரண்டன! மேல் ஏழு லோகங்களும் பதைபதைத்தன..!
ஏழு கன்னியரும்,(ஸப்த கன்னியர்) ஏழு முனிவர்களும் (ஸப்த ரிஷிகள்) அந்தக் கருணையின் மறு உருவான காகுத்தனையே, தமக்கு அபயம் தரப் பிரார்த்தித்தனர்.....!

மொத்தத்தில், இந்த ப்ரபஞ்சத்தில் காணப்படுகின்ற அத்தனை ஏழுகளும், "நம்மையும் இராமபாணம் தீண்டிவிடுமோ?" என்ற எண்ணத்தில் விதிர்விதிர்த்தன!
நாணேற்றும்போது உண்டான சப்தத்தினால் நடுக்கம் கண்டு, தனது வானரப் படைகளுடன் ஓடி ஒளிந்திருந்த சுக்ரீவன், இப்போது சுதாரித்து வந்து, இராமனின் திருவடிகளில் விழுந்தான்......

"ஹே ப்ரபோ! நீங்க யாருன்னு புரிஞ்சுக்காம ஒங்கள இந்த மூடன் சோதன பண்ணத் துணிஞ்சுட்டேன்......

இந்த முழு ப்ரபஞ்சத்தயும் கட்டிக் காக்கற தெய்வமான திருமால் நீங்கன்னு இப்போ புரிஞ்சுண்டுட்டேன்...அடியேனோட முன்னோர்கள் செஞ்ச தபஸோட பயன்தான், அடியேன் ஒங்கள சந்திக்கற வாய்ப்பு அமைஞ்சது! இந்தக் கீழ்மகன் அறியாம செஞ்ச தவற மன்னிச்சு நீங்க அடியேனை ரக்ஷணம் பண்ணணும்னு ஒங்களப் பிரார்த்திச்சுக்கறேன்........"
இன்னமும் முழுதாக அச்சம் விலகாமல் திக்கித் திணறிப் பேசிய சுக்ரீவனை, இராமன் மெல்ல அணைத்துக் கொண்டான்.....

"சுக்ரீவா... பயப்படாம இரு.. இன்னிலேந்து, நீ எதுக்குமே கவலப்படாத...... ஒன்னோட தொணயா இனிமே நான் எப்பவுமே இருப்பேன்......
ஒனக்கு யாரெல்லாம் விரோதமோ, அவாள்ளாம் இனிமே எனக்கும் விரோதம்தான்.
ஒனக்கு யாரெல்லாம் தோழாளோ, அவாள்ளாம் இனிமே எனக்கும் தோழர்கள்தான்!

உன்னோட பகையான வாலிய முடிச்சு, ஒன்ன மறுபடியும் கிஷ்கிந்தையோட சிம்மாசனத்தில ருமையோட ஒக்காற வெப்பேன்..இது நான் ஒனக்குத் தர சத்தியம்.......

இதோ தெரியற இந்த சூரியனச் சாட்சியா வெச்சுண்டு, நாம ரெண்டு பேரும் நண்பர்களா பிரதிக்ஞை பண்ணிக்கலாம்! சுகமோ, துக்கமோ, எதுவா இருந்தாலும், இனி நாம ஒன்னாவே அனுபவிப்போம்..."

இராமனின் வார்த்தைகள் வெறும் மேலெழுந்தவாரியான ஆறுதல் வார்த்தைகளாக இல்லாமல், ஆழத்தோடு வந்ததை உணர்ந்த சுக்ரீவனின் விழிகளிலிருந்து நெகிழ்ச்சியால், கண்ணீர் தாரைதாரையாக வழிந்தது......

தெய்வம் அனுக்ரஹத்தை வர்ஷிக்க ஆரம்பித்துவிட்டால், அதை அணைபோட்டுத் தடுக்க யாரால் இயலும்! இராமனின் அனுக்ரஹ மழையில் சுக்ரீவன் தனது தாபம்தீர நனைந்தான்.......

"சரி.. இப்போ சொல் சுக்ரீவா... வாலிய சந்திக்கப் புறப்படுவோமா?.."
இராமன் பரபரத்தான்......

"ப்ரபோ.. அதுக்கு முன்னாடி அடியேன் ஒங்களுக்கு ஒரு பொருள காட்டறேன்.. அது ஒங்களச் சேந்ததான்னு பாத்துச் சொல்லுங்கோ.."

சுக்ரீவன் எதைப் பற்றிப் பேசுகிறான் என்பதைப் புரிந்து கொண்ட அனுமன், இத்தனை நாளும் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்த "அதை"க் கொண்டுவந்து சுக்ரீவனிடம் கொடுத்தான். இராமன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அந்தத் துணிமூட்டையை அவிழ்த்தான் சுக்ரீவன். அதிலிருந்த பலவிதமான அணிகலன்களையும் ஒருசேரப் பார்த்த அண்ணல், அப்படியே மூர்ச்சையானான்! சமயோசிதமாக இயங்கிய இளவலால் மெல்ல மெல்ல இராமன் மீண்டும் சுயநினைவுக்கு வந்துகொண்டிருந்தான். இராமன் முழுவதுமாய் சுதாரிப்பதற்குள், இலக்ஷ்மணன் மெல்ல சுக்ரீவனிடம் பேச்சுக் கொடுத்தான்.

"ஹே வானர ராஜனே!.. இந்த விலை ஒசந்த நகையெல்லாம் ஒனக்கு எப்டி கெடச்சது?.. இதெல்லாம் யாரோடது?.. இதப் பாத்து அண்ணா ஏன் மயக்கமாயிட்டார்?.. எனக்கு ஒன்னுமே புரியலயே.."

சுக்ரீவன் ஒருசில மாதங்களுக்கு முன்னர் நிகழ்ந்த அந்த நிகழ்வை இலக்ஷ்மணனோடு பகிர்ந்து கொண்டான்.

"அனுஜரே!.. ஓரிரண்டு மாசத்துக்கு முன்னாடி ஒருநாள் நாங்க எல்லாரும் எங்க வசிப்பிடத்துக்குப் பக்கத்தில இருக்கற தடாகத்துல, வெயிலோட உஷ்ணத்திலேந்து தப்பிக்கறதுக்காக எறங்கி நீராடிண்டிருந்தோம்..

அப்போ ஆகாச மார்கமா, இராவணன் தன்னோட புஷ்பக விமானத்துல இந்த வழியா போனான்..

அந்த விமானத்தில ஒரு பெண் தலைவிரி கோலமா, பெரிய குரலெடுத்து "என்ன காப்பாத்த இங்க யாருமே இல்லையா?" ன்னு கதறினது காதில விழுந்தது. இராவணனோட ஸ்வபாவம் தெரிஞ்ச நாங்கள்ளாம், "நமக்கேன் வம்பு?.."ன்னு பேசாம இருந்துட்டோம். ஆனா, கீழ நாங்கள்ளாம் இருக்கறத பாத்த அந்தப் பெண், என்ன நெனச்சாளோ தெரியல. தன்னோட நகையெல்லாத்தயும் மூட்டகட்டி, எங்ககிட்ட அழுதுண்டே தூக்கி எறிஞ்சா! அத தேடிண்டு யாராவது வரலாம்கிற யோசனையில, இத்தன நாளா, நாங்க அத பத்திரப்படுத்தி வெச்சிருந்தோம். இப்போ நீங்க சொல்றத வெச்சுப் பாக்கும்போது, அந்தப் பெண்தான் சீதாமாதாவோன்னு தோணறது.."

கண்முன் திறந்து கிடந்த அந்த நகை மூட்டையை உற்றுப்பார்த்தான் இலக்ஷ்மணன். அவற்றில் இருந்த அத்தனை நகைகளில் ஒன்றைக்கூட அவனால் அடையாளம் காணமுடியவில்லை. ஆனால், அவற்றிடையே மின்னிய அந்த ஒருஜோடி " மிஞ்சி " மட்டும் அவனுக்குத் தம்மைக் காட்டிக்கொடுத்தன!
தமயனின் சோகத்துக்கான காரணம் இலக்ஷ்மணனுக்கு இப்போது பிடிபட்டது!

## பகுதி –20

சற்றுச் சுவாதீனத்திற்கு வந்த இராமன், ஒவ்வொரு நகையாகக் கையிலெடுத்து, அவை தன்னவளின் நகைகள்தானா என்று உன்னிப்பாக ஆராயலானான், விழிகள் முழுவதும் நீர் திரையிட்டுக் காட்சியை அப்படியே மறைத்தது!
"இலக்ஷ்மணா.... நீயே பாத்துச் சொல்லு.. என்னால முடியல... இந்த நகையெல்லாம் சீதாவோடதுதானே?.."
துக்கம் தொண்டையை அடைக்க வினவினான் இராமன்.

"அ....ண்....ணா.... என்னயா கேக்கறேள்? எனக்கு என்ன தெரியும்ணா? சீதா மாதாவோட " மிஞ்சி "ய மட்டும்தான் நான் பாத்துருக்கேன்... மத்த நகையெல்லாம் நான் பாத்ததே இல்லையேண்ணா...."

ஒன்றும் புரியாமல் இளவலை ஏறிட்டான் இராமன். இதற்குள் சுக்ரீவன் குறுக்கிட்டான்..

"அனுஜரே.. ஒங்களால சீதாமாதாவோட ஒருநகையக் கூடவா அடையாளம் காட்ட முடியல?.."

"இல்லை" என்று பரிதாபமாகத் தலைஅசைத்தான் இலக்ஷ்மணன்......

"நான் என்னோட சீதா மாதாவ என்னிக்குமே ஏறெடுத்தும் பாத்ததே இல்ல சுக்ரீவா!......
தெனம் காத்தால எழுந்து ராமண்ணாவையும் சீதாமாதாவையும் நமஸ்காரம் பண்ணச்சே, சீதாமாதாவோட இந்த "மிஞ்சி"ய மட்டும் பாத்துருக்கேன்.அதனால, இது சீதாமாதாவோடதுதான்னு என்னால உறுதியாச் சொல்லமுடியும்..
வேற எதப்பத்தியும் எனக்குத் தெரியலயே.."

ஸ்தம்பித்தான் சுக்ரீவன்! ஏனோ அவன் மனம், ஒருகணம் வாலியோடு இளவலை ஒப்பிட்டு மீண்டது! அவனது ஆதங்கம் பெருமூச்சாய் வெளிப்பட்டது.

"இந்த இலக்ஷ்மணன் மாதிரி ஒரு ப்ராதா கெடைக்க இந்த இராமன்தான் ரொம்பவும் கொடுத்துவெச்சுருக்கான்!.."

சுக்ரீவனது சிந்தனையின் ஓட்டத்தை புரிந்து கொண்ட அனுமன், ஆறுதலாய் அவனது கரங்களைப் பற்றிக்கொண்டான். ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்ட இராமன், மீண்டும் நகைகளைப் பார்வையிட்டான். அத்தனையும் சீதையுடைய நகைகள்தான்! சந்தேகமே இல்லை! மரவுரி தரித்துக் காட்டிற்கு இராமனோடு வந்தபோதும், சீதை தனது **மங்கல அணிகலன்கள் சிலவற்றைக் களையாமல் வந்திருந்தாள்**
அத்தோடு சித்திரகூடத்தில் அத்ரி மஹரிஷியின் ஆச்ரமத்துக்கு சென்றிருந்தபோது, அவரது பத்னியான அனசூயாதேவி, சீதைக்கு விதவிதமான அலங்கார அணிகளைத் தனது அன்புப் பரிசாகத் தந்திருந்தார்.

அவ்வாறு அனசூயாதேவி அளித்திருந்த நகைகள் அனைத்தும் சீதையைப் பெரிதும் கவர்ந்திருந்தன.
உண்மையைச் சொல்லப்போனால் சீதை, தனது தந்தை ஜனகமகாராஜா, சீதனமாகத் தந்த நகைகளைவிட, அனசூயாதேவி அளித்தநகைகளையே அடிக்கடி உபயோகித்தாள். அவையெல்லாம் இன்று இராமன் பார்க்க, அந்த மூட்டையில் சிதறிக்கிடந்தன. ஒவ்வொரு நகையும் இராமனுக்கு ஒருகதை சொன்னது!
தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல், உடைந்துபோய் அழுதான் ஸ்ரீராமன்!

வாய்விட்டு அரற்றினான்; "ஹா சீதே!. ஒன்னோட புன்னகைய அந்த இராவணன் அபஹரிச்சதுனால வந்த வருத்தத்துல, இந்த பொன்நகை எல்லாம் வேணாம்னு தூக்கி எறிஞ்சயா?..

நீ எறிஞ்சுட்டுப் போன இந்த நகைஎல்லாம் பாக்கப்பாக்க, எனக்கு இதைஎல்லாம் நீ அணிஞ்சுண்டு சந்தோஷமா திரிஞ்ச அந்த நாளெல்லாம் நெனைவுக்கு வரதே......
நான் என்ன பண்ணுவேன்?..

ஐயோ சீதே.....நீ கதறி அழுதுண்டு போனயாமே!..
"என்னை காப்பாத்த யாருமில்லையா?"ன்னு கேட்டயாமே...
கடைசியில ஒன்ன காப்பாத்தாமதானே நான் விட்டுட்டேன்!.
என்ன நம்பிதானே காட்டுக்கு வந்த..
அப்டிப்பட்ட ஒன்ன, நான் தோத்துட்டு நிக்கறேனே..."

மார்பில் அறைந்துகொண்டு, ஆர்த்தி மேலிட அழுதான்...

அவனது துக்கத்தைச் சகிக்கமுடியாமல் ஓடிவந்த இலக்ஷ்மணன், அவனை அணைத்து ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லவும், மெல்லமெல்லத் தெளிந்தான் இராமன்.......

"சுக்ரீவா, இந்த நகை எல்லாம் என்னோட சீதையோடதுதான்! நீ சொல்றத வெச்சு பாக்கச்சே, இராவணன்தான் சீதயக் கடத்திண்டு போயிருக்கான்னு இப்போ தெளிவாயிடுத்து..
நீதான் எனக்கு அவள மீட்கறதுக்கு ஸஹாயம் பண்ணனும்! பண்ணுவயா?..."
கண்களில் நீர்மல்க வினவினான் ரகுநந்தன்..

"உத்தரவிடுங்கோ ப்ரபு... ஒங்க ஆணைக்காகத்தான் காத்திருக்கேன். இப்பவே சீதையத் தேடிப் போவோமா? "

ஆனால், அத்தனை வருத்தத்திலும் இராமன் அவசரப்படவில்லை! தன்னைக் காட்டிலும் வெகுகாலமாய் துக்கத்திலேயே மூழ்கிக் கிடக்கும் சுக்ரீவனின் நிலையே ராமனின் கருத்தில் நின்றது! அதையும்தாண்டி, தனது துன்பத்தையும்

ஒதுக்கிவைத்துவிட்டு, "சீதையை உடனே தேடுவோம்" என்ற சுக்ரீவனின் வார்த்தைகள் அவனது மனத்தை மொத்தமாய் வென்றது!

இத்தனையும் ஊகித்த வாயுபுத்ரனான அனுமன் "இதுதான் தகுந்த சமயம்" என்று மெல்ல வாய்திறந்தான்......

## பகுதி –21

"வானர ராஜனுக்கும், தசரத நந்தனுக்கும் அடியேன் ஒரு விஷயம் சொல்ல ஆசப்படறேன்... சொல்லலாமா?..

அனுமதி கோரினான் அனுமன்.....

"என்னோட மதிமந்திரியே நீதானே வாயுபுத்ரா! நீ என்ன நெனக்கறயோ, அத தாராளமா சொல்லு. அறிவுபூர்வமா நீ ஆராய்ஞ்சு சொல்ற ஒவ்வொரு விஷயமும், எல்லாருக்கும் நல்லதுதான் செய்யறது. அதனால ஒன்மனசுல படறத தயங்காம சொல்லு.."

சுக்ரீவன் சம்மதிக்கவும், அனுமன் தொடர்ந்தான்.

"எனக்கென்னவோ, வாலி விஷயத்த மொதல்ல முடிச்சுட்டா நல்லதுன்னு தோணறது. சுக்ரீவன் கிஷ்கிந்தைக்கு ராஜாவா ஆனாதான், வானரப்படை மொத்தமும் நம்மளோட வசமாகும். இப்போ இருக்கற இவ்ளோ கொறச்சலான வானரப்படைய வெச்சுண்டு நம்மால எதுவும் செய்யமுடியாது. சீதாமாதா விஷயத்தில, மொதல் காரியமா, இராவணன் சீதாமாதாவ எங்க ஒளிச்சு வெச்சுருக்கான்னு நாம கண்டுபிடிச்சாகணும்.......

அந்த இராவணன் நம்ம சீதாமாதாவ மலையில ஒளிச்சு வெச்சுருக்கானோ, மனையில மறச்சு வெச்சுருக்கானோ....அத நாம தெரிஞ்சுண்டாகணும். அதுக்கு நம்ம வானரப்படைய ஒரே சமயத்தில நாலாபக்கமும் அனுப்பணும்..... இப்போ நம்ம கிட்ட இருக்கற இந்தச் சின்ன வானரப்படை, அந்தப் பெரிய காரியத்துக்குப் போறாது.சுக்ரீவன் கிஷ்கிந்தையோட ராஜாவாகட்டும்..... அப்பறமா சீதாமாதாவ தேடறதுக்கான முயற்சியில எறங்கலாம். ஆள் பலம் இல்லாம, இந்தக் காரியத்த செய்யறது அசாத்யம்.."
நறுக்குத் தெறித்தாற் போன்ற அனுமனின் பேச்சு, அத்தனைப் பேருக்கும் சரியென்று பட்டது..
சுக்ரீவா... ஒன்னோட அமைச்சனான இந்த வாயுபுத்ரன் ரொம்பச் சரியா சொல்றான்.. அவன் சொன்னபடியே, நாம மொதல்ல வாலி விஷயத்த முடிப்போம்.. நீ பொறப்படு.."
இராமனின் ஆணையை ஏற்று சுக்ரீவன் கிளம்பவும், அவனுடைய மிக முக்கிய மந்திரிகளான அனுமன், நளன், நீலன், தாரன் ஆகிய நால்வரும் அவனைப் பின்தொடர்ந்தனர்...

காடுகளையும், மலைகளையும் கடந்து, பொன்மயமாக சுவர்க்கலோகம் போல ஜ்வலிக்கின்ற வாலி வாழுகின்ற இடத்தை அனைவரும் அடைந்தார்கள். சுக்ரீவனின் குழுவும், இராம லக்ஷ்மணர்களும் ஒரு மறைவிடத்தில் அமர்ந்துகொண்டு, மேற்கொண்டு செய்ய வேண்டியவைகளை அலசி ஆராய்ந்தார்கள். வெகுநேர வாத ப்ரதிவாதங்களுக்குப் பின்னர், இராமன் ஒருமுடிவுக்கு வந்தான்..

"சுக்ரீவா... நீ நேரே ஒன்னோட சகோதரன் வாலியோட அரண்மனை வாசலுக்குப் போய், அவன வலிய சண்டைக்குக் கூப்பிடு.....

ஆக்ரோஷத்தோடு அவன் வெளியில வருவான்..ஒன்னோட யுத்தம் பண்ண ஆரம்பிப்பான்.. நீயும் அவன எதிர்த்துச் சண்ட போடு.. அந்த நேரம், நான் மறஞ்சிருந்து, அவன் மேல என்னோட பாணத்தை செலுத்தி அவன முடிச்சுடறேன்.."

இராமனின் வார்த்தை, இத்தனைக் காலமாய்த் துன்பத்தில் துவண்டு போயிருந்த சுக்ரீவனின் செவிகளில் தேனாய்ப் பாய்ந்தது. இப்பொழுது அவனுக்கு இராமன் மேல் எள்ளளவும் சந்தேகமில்லை!

"இவன் என்னை மீட்ப்பான்!" என்ற எண்ணம், அவன் மனதில் ஆழப்பதிந்திருந்தது..

அதனால், இராமன் கூறிய சொற்கள், அவனை ஆரவாரம் செய்ய வைத்தது! சுக்ரீவனின் பலத்த ஆரவாரமானது, அவர்கள் மறைந்திருந்த மலையின் நாற்புறங்களிலும் சென்று எதிரொலித்தது....      அந்த எதிரொலியில்....

அந்த மலையிலிருந்த மரங்களில் வாழும் பட்சிகள் எல்லாம் பயந்துபோய், நான்கு திசைகளிலும் பறந்தன. அந்த மலையின் குகைவாசலில் உல்லாசமாய்த் தமது பெட்டையுடன் விளையாடிக் கொண்டிருந்த சிங்கங்கள், தமது இயல்பையும் மீறி, குகைக்குள் ஓடி ஒளிந்தன. மலைச்சாரல்களில் திரிந்து கொண்டிருந்த யானைக் கூட்டங்களோ, தம்மைக் காத்துக்கொள்ளும் எண்ணத்தில் மறைவிடம் தேடின..

பாயும் புலிகள் எல்லாம் பதுங்கிக் கொண்டன. படமெடுக்கும் பாம்புகளும் பொந்தில் ஒடுங்கின. மொத்தத்தில், "வாலியை எதிர்க்க சுக்ரீவன் முழுவதுமாய்த் தயாராகிவிட்டான்" என்பதை அவனது அளப்பரிய ஆரவாரமே காட்டிக்கொடுத்தது......

## பகுதி –22

புயல் ஒன்று புறப்பட்டதைப் போலப் புறப்பட்டான் சுக்ரீவன். பலமாகத் தனது கால்களை அழுத்தி, அவன் குதித்துக் கிளம்பிய வேகத்தில், அவன் நின்றிருந்த பூமி பெரும்பள்ளமாகியது. மண் சரிந்த அந்த வேகத்தில், அருகில் வெகுஉயரமாக நின்றிருந்த மரங்கள் எல்லாம், இடம் பெயர்ந்துவந்து, அந்தப் பள்ளத்திலேயே விழுந்தன. இந்த நிகழ்வு, இத்தனை நாளும் தலைக்கனத்தோடு திரிந்து கொண்டிருந்த வாலி, வீழுகின்ற காலம் சமீபித்துவிட்டதைச் சூசகமாக

உணர்த்துவதுபோலத் தோன்றியது. பெரிய கர்ஜனையோடு, வாலியின் அரண்மனை வாயிலில் சுக்ரீவன் வந்திறங்கினான். சினமேறிய அவன் முகம், அக்னிப் பந்தாய் தோற்றமளித்தது. சுக்ரீவனின் இந்தக் கோலத்தைக் கண்டவர்கள் எல்லாம் அச்சத்தினால் தலைதெறிக்க ஓடினர். வாயிற்காப்பாளர்கள், தமது ஆயுளைக் காத்துக்கொள்ள, "தப்பித்தோம், பிழைத்தோம்.." என்று தலைமறைவாயினர்.

யாருமில்லாமல், அரண்மனை வாசல் வெறிச்சோடியது..

எட்டடுக்கு தாண்டி, உள்ளே பஞ்சணையில் மது, மாது புடைசூழ படுத்துக்கிடந்த வாலியின் மயக்கம் ஒரே கணத்தில் தெளிந்துவிடுமாறு சுக்ரீவன் பெருங்குரல் எழுப்பினான்...

"அடேய் வாலி! ஒன்னோட எமன் வந்துருக்கேன்டா.. ஒன்ன பரலோகத்துக்கு அனுப்பி வெக்கறதுக்காகவே, இன்னிக்கு இங்க வந்துருக்கேன்டா.. தைரியம் இருந்தா என்னோட வந்து மோது...பாக்கலாம்..."

எத்தனையோ காலங்களுக்குப் பிறகு, இன்று சுக்ரீவன், தனது இடம் தேடிவந்து குரல் எழுப்பியதில், வாலியின் மயக்கம் சட்டென்று வடிந்து கொடுத்தது. சினமும், சிரிப்பும் ஒன்றாய் வந்தது அவனுக்கு.. தனது இன்பத்துக்கு இடைஞ்சலாய், வேளை கெட்ட வேளையில், வந்து நின்றானே என்ற சினம் ஒருபுறம்..

தனது வலிமை தெரியாமல், தானே வலிய வந்து நின்ற அவனது அறிவீனத்தை எண்ணிச் சிரிப்பு மறுபுறம். தன்னைச் சுற்றிலும் இருந்த வானர நங்கைகளை ஒரு உதறலில் உதறியவன், ஒரே தாவலில் வாசல் வந்து நின்றான். எதிரில் நின்றவன் எதிரியாகவே தெரிந்தான்...

"யாருக்கு யார் எமன்னு பாக்கலாம்டா... எவ்ளோ தைரியம் இருந்தா ஓடி ஒளிஞ்சுண்டிருந்த ஒரு கோழை, இன்னிக்கு என் முன்னாடி வந்து நிப்ப?........
யார் கொடுத்த தைரியம்டா இது?.."
சுக்ரீவனை நோக்கிக் கர்ஜித்தவன், அவன் மீது வேகமாகப் பாய்ந்தான்.......

ஆக்ரோஷம் இரண்டு பக்கமும் இருந்தது..

இரண்டு சிங்கங்கள் மோதிக்கொண்டன..

இரண்டு மலைகள் மோதிக்கொண்டன..

இரண்டு தீப்பிழம்புகள் உரசிக்கொண்டன..

பேரிடிகள் பூமியில் தொடர்ச்சியாக விழுவதைப் போன்ற சப்தம், அந்தப் பிரதேசத்தையே நிறைத்தது. சுக்ரீவனை மட்டுமே இதுவரை பார்த்திருந்த இராமனுக்கு, வாலியின் உருவமும், வீரமும் ப்ரமிப்பைத் தந்தன..

அருகிலிருந்த இலக்ஷ்மணனிடம் மெல்லக் கூறினான்.....

"தம்பி! இந்திரனோட வஜ்ராயுதமே, இந்த வாலியா வந்தா மாதிரி இருக்கே.. இந்த ப்ரபஞ்சத்திலயே, இவனுக்குச் சமமா வீரத்தில யாரும் இருக்கமுடியாதுன்னு தோணறது. தன்னோட பலம் தெரிஞ்சுதான், சுக்ரீவன் இத்தன நாளும் பேசாம இருந்திருக்கான்னு நெனைக்கறேன். எனக்கென்னவோ சுக்ரீவன பாத்தா பாவமாதான் இருக்கு.."

"ராமண்ணா... நீங்க சொல்றத என்னால ஒத்துக்க முடியல. சொந்த அண்ணன்னு கூடப்பாக்காம, அவன கொல்லத் துடிக்கற இந்த சுக்ரீவன, எவ்ளோ தூரத்துக்கு நம்பலாம்னு நான் யோசிக்கறேன்.."
இலக்ஷ்மணன் தன் எண்ணத்தைப் பகிர்ந்தான்.....

"இலக்ஷ்மணா! ஆயிரம் இருந்தாலும் விலங்குகள்கிட்ட மனிதனுக்கிருக்கற குணநலனெல்லாம் இருக்குமா என்ன? மனுஷாளோட நீதிநெறியெல்லாம், இங்க எதிர்பாக்கலமா?.. ஒருதாய் வயித்துப் பிள்ளையா இருந்தாலும், சுக்ரீவன வாலி, பந்தாடியிருக்கான்!.. அதுக்காக சுக்ரீவனும், அவன பழிவாங்கத் துடிக்கிறான்! எல்லாரும் நம்ம பரதனப் போல இருந்துட்டா, அண்ணன்தம்பி சண்டையே இந்த லோகத்துலயே வராதே.."
இராமன் கூறிய ந்யாயம், இலக்ஷ்மணனைச் சிந்திக்க வைத்தது..

இப்படி இருவரும் தமக்குள் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், வாலியின் கை ஓங்கிக் கொண்டே போனது.. சுக்ரீவனின் நிலை க்ஷீணித்துக்கொண்டே வந்தது. என்னதான் பலசாலியாக சுக்ரீவன் இருந்தாலும், வாலி என்னும் சுழற்காற்றின் முன், அவன் சிறு தூசியாகத்தான் மாறிப்போனான்......

## பகுதி –23

வாலியின் பலமான தாக்குதலில் ஒவ்வொரு முறை நிலைகுலையும் போதும், சுக்ரீவனுக்கு இராமன் மீது கோபம் கோபமாய் வந்தது....

"நீ போ.....நான் பாத்துக்கறேன்னு சொன்னானே......
எல்லாம் வெறும் வாய்வார்த்தைதான் போல இருக்கு! இவனப் போய் நம்பினேனே! இவனால முடியாதுன்னா எதுக்கு ஒத்துக்கணும்? இவன்தானே வலியவந்து ஒதவி பண்றேன்னு சொன்னான். இப்போ வாலியப் பாத்தவுடனே பயந்துட்டான் போல இருக்கு. இவன் பேச்ச நம்பி வந்ததுக்கு, நான் நல்ல பாடம் கத்துண்டேன்.."

தனக்குச் சாதகமாய் அமையாதபோது மனம் சிலநேரங்களில் தெய்வத்தை நிந்திக்கவும் தயங்குவதில்லை! சுக்ரீவனும் அதைத்தான் செய்தான்! ஆனால், ஒரு பெரிய பாதகத்தைத் தடுப்பதற்கு, ஒரு சிறிய துன்பத்தைத் தந்து, அனர்த்தம் நேராமல் காக்கவே தெய்வம் முனைகிறது என்பது பெரும்பாலும் சிற்றறிவுக்குப்

பிடிபடுவதில்லை! வாலி சுழற்றி எறிந்ததில், குற்றுயிரும் குலையுயிருமாய், மறைவிடத்திலிருந்த இராமனின் திருவடிகளிலேயே வந்துவிழுந்தான் சுக்ரீவன்...... ஈனஸ்வரத்தில் முனகினான்......

"ராமா...ஒன்னப் போய் நம்பினேனே! ஒன்னோட வார்த்தைய போய் பெரிசா எடுத்துண்டேனே! எனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்.."

ஆற்றாமையோடு அரற்றியவனை ஆதரத்தோடு நோக்கினான் அண்ணல்......

"சுக்ரீவா... ஒன்னோட வருத்தம் எனக்குப் புரியறது! ஆனா... நான் தயங்கினதுக்கும் ஒரு காரணம் இருக்கு.."

காலடியில், கண்களில் நீர்பெருகக் கிடந்தவனை வாஞ்சையோடு வாரியெடுத்து நிறுத்தினான் ஸ்ரீராமன்!

"நீங்க அண்ணா தம்பி ரெண்டு பேரும் பாக்கறதுக்கு ஒரேமாதிரியா இருக்கறதாலே, என்னால எதுவும் செய்ய முடியல சுக்ரீவா, நான் எய்யப் போற அம்புனால, வாலிக்குப் பதிலா ஒனக்கு ஏதாது ஆச்சுன்னா, என்ன பண்றது?
உங்க ரெண்டு பேருக்கும் உள்ளத்தில இல்லாத ஒத்துமை, உருவத்தில ஏராளமா இருக்கு. அதுவும் நீங்க ரெண்டு பேரும் சுத்திச்சுத்திச் சண்ட போடச்சே, ஒங்களத் தனித்தனியா அடையாளம் காணறது ரொம்பவே கஷ்டமா இருக்கு. அதுனால, நீ இதோ தெரியற இந்தக் கொன்றை மரத்தோட பூக்கள ஒரு மாலையாக்கி, ஒன்னோட கழுத்துல போட்டுண்டு போ! அப்போ, ச்ரமம் இல்லாம நான் வாலிய முடிச்சுடுவேன்.."

சற்று மனம் சமாதானம் அடைந்தான் சுக்ரீவன்.......

"இறந்தே போயிருப்பான் சுக்ரீவன்! எனது எதிரி ஒரேயடியாய் ஒழிந்தான்!.." என்ற எண்ணத்தோடு, அப்போதுதான் அரண்மனை திரும்பியிருந்தான் வாலி. அவன் முகத்தில் இன்னமும் கோபத்தின் மிச்ச சொச்சங்கள் இருந்தன.....

அவனது மனதை மாற்றி, அவனை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் வித்தையறிந்த தாரை, மெல்ல அவனை நெருங்கினாள்..

அந்த நேரம்...
கர்ண கடூரமாய் சுக்ரீவனின் முழக்கம் வாசல்தாண்டி, உள்ளே எதிரொலித்தது..
"இது சரியில்லை..." என்பதாய்த் தாரை உடனே உணர்ந்தாள்......

அவளுக்கே உண்டான எதிர்காலத்தைப் பற்றியதான எச்சரிக்கை உணர்வு, "ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது" என்பதை சூசகமாக அவளுக்குத் தெரிவித்தது......

கோபம் கொப்பளிக்க, குதித்துக் கொண்டு எழுந்தான் வாலி......

சட்டென்று அவனை வெளியே புறப்படாதவாறு, தடுத்து நிறுத்தினாள் தாரை........
தனது இதமான வார்த்தைகளால் அவனை மெல்ல ஆஸ்வாசப்படுத்த ஆரம்பித்தாள்......

## பகுதி –24

"நாதா! நான் சொல்றத கொஞ்சம் கேளுங்கோ! எனக்கென்னமோ சுக்ரீவன் விஷயத்துல ரொம்ப சந்தேகமாவே இருக்கு. இப்போதான் ஒங்களோட சண்டை போட்டுட்டு, தாக்குப்பிடிக்க முடியாம ஓடிப்போனான்...... திரும்பவும் வந்து நின்னு தைரியமா, அவன் குரல் கொடுக்கறான்னு சொன்னா, அவனுக்கு பெரிய பலமுள்ளவா யாரோ சகாயத்துக்கு இருக்கான்னு தோணறது.......நீங்க கொஞ்சம் நிதானமா காரியத்துல இறங்குங்கோ.."

தாரை வாலியிடம் தனது அச்சத்தை மெதுவாகக் கோடிகாட்டினாள்......

இடி இடிப்பது போலச் சிரித்தான் வாலி......

"தாரா, இந்த வாலியோட பொண்டாட்டியா இப்டி பேசறது? ஒனக்கென்ன ஆச்சு தாரா? என் பலம் தெரியாதவளா நீ?
அன்னிக்குப் பாற்கடல கடையறதுக்கு அசுராளும் தேவாளும் முடியாம தெணறினப்போ, நான் ஒருத்தனே அனாயாசமா அந்தக் காரியத்த கச்சிதமா முடிச்சத நீ மறந்துட்டயா?
மூணு லோகத்துலேயும், என்ன எதிர்த்துப் போராடற பலம் யாருக்கு இருக்கு?..
அப்படியே போராட ஒருத்தர் வந்தாலும், அவா பலத்துல பாதி எனக்கு வந்துடுமே..... அப்பறமா, அவாளால என்ன எப்டி சமாளிக்க முடியும்?..
இந்த விஷயம் அந்த சுக்ரீவனுக்கும் நன்னா தெரியுமே..
இருந்தும், என்கிட்ட மோத வரான்னா, அவனுக்கு எவ்ளோ திமிர் இருக்கணும்?..
அவன் கொட்டத்தை இன்னிக்கு ஒரேயடியா அடக்கிட்டு வந்துடறேன்......
நீ கவலப் படாம இரு.."

வாலியின் பதிலில், தாரை சமாதானம் ஆகவில்லை......

"ஆனால் ப்ரபு, எனக்கு சில ரகசிய சேதி எல்லாம் கெடச்சுருக்கு. இப்போ சுக்ரீவனுக்கு "இராமன்" னு பேர் கொண்டவனோட, ஒரு புது ஸ்நேஹம் கெடச்சுருக்காம்.அந்த இராமனும் சுக்ரீவன்கிட்ட, ஒங்கள கொன்னுட்டு, சுக்ரீவன கிஷ்கிந்தையோட ராஜாவா ஆக்கறேன்னு வாக்கு கொடுத்துருக்கானாம்..
அதான்... எனக்கு ரொம்பவும் பயமா இருக்கு..."

இப்போது, அப்பட்டமாகவே, தனது கவலையைக் கொட்டினாள்
தாரை...... கண்களில் நீர்துளிர்க்கச் சிரித்தான் வாலி......

"அடி அசடே!.. நீ யாரப் பத்திப் பேசறேன்னு தெரிஞ்சுதான் பேசறயா?..
ஒன்ன ரொம்ப புத்திசாலின்னு இத்தனநாளா நெனச்சுண்டிருந்தனே..
கடைசியில, யார்யார் பேச்சயோ கேக்கற சராசரி பொண்ணுதானா நீ?
நீ சொல்ற அந்த இராமன் தர்மத்தோட மறு உருவம்னு மொதல்ல தெரிஞ்சுக்கோ.......அனாவசியமா அவன் என்ன கொல்லவே மாட்டான்!..

அதோட, எனக்கும் அவனுக்கும் எந்த முன் விரோதமும் இல்ல.....
அப்படியிருக்கச்சே, அவன் ஏன் என்ன அழிக்க நெனக்கப் போறான்?..

நீயே யோசிச்சுப் பாரு.. போயும் போயும் ஒரு அற்பக் குரங்கான சுக்ரீவனோடவா அவன் ஸ்நேகம் வெச்சுப்பான்? இவன நம்பியா அவன் இருக்கான்?

இராமன் தன்னோட கோதண்டத்துல நாண் ஏத்தி சப்தம் செஞ்சா, மூணு லோகமும் அந்த ஓசைக்கு நடுங்குமே! அவன் எப்பேர்ப்பட்ட பலசாலி!
எத்தன அசுரவதம் பண்ணியிருப்பான்!.. அவனோட கோதண்டம் அவனுக்கு சஹாயமா இருக்கச்சே, அவன் ஏன், கேவலம் இந்த சுக்ரீவனோட சஹாயத்த எதிர்பாக்கப் போறான்?..

அதுவுமில்லாம, அண்ணன்தம்பி சண்டையில எல்லாம் அவன் தலையிடவே மாட்டான்! அதர்மமா ஒருத்தன அழிக்கறதுக்கும் அவன் என்னிக்குமே தொண போக மாட்டான். இப்டி நீ அறியாம பேசறது எவ்ளோ பெரிய பாவம் தெரியுமா?..
ஒரு கருணைக்கடலுக்கு நீ களங்கம் கற்பிக்கறது கொஞ்சமும் நியாயமில்ல தாரா..
தனக்கு உரிமையான ராஜ்யத்தக்கூட தன்னோட தம்பிக்கு சந்தோஷமா விட்டுக் கொடுத்தவன் அவன்.......
தனக்குக் கொடுத்த இராஜ்யத்த ஏத்துக்காம, அத அண்ணனோட ராஜ்யம்னு சொல்லிண்டு, அதுக்கு ஒரு சேவகனா வேல செய்யறவன் அவனோட தம்பி!
இப்டி ஒருத்தருக்கொருத்தர் சகோதரபாசத்தோடு விட்டுக்கொடுக்கற குடும்பம் அவனோடது!..

ஆனா.. இதுவோ...வெட்டி மடியற குடும்பம்......இதுக்குள்ள நொழஞ்சு, தன்னத்தானே கேவலப் படுத்திக்க அவன் முன்வரவே மாட்டான்!..
நீ தேவ இல்லாம கவலப் படறத விட்டுட்டு, வேலயப் பாரு......
நான் அந்த சுக்ரீவன மொத்தமா முடிச்சுட்டு, கொஞ்ச நாழியில திரும்பி வரேன்.."
தீர்மானமாகக் கூறிய வாலியிடம் "இனிப் பேசி ப்ரயோஜனமில்லை" என்பதைத் தாரை உணர்ந்து கொண்டாள்.....

இதற்குள், சண்டையிட அழைத்து மறுபடியும் ஆரவாரம் செய்கின்ற சுக்ரீவனின் குரல், வாலியின் செவிகளில் வந்து மோதியது......

"இதோ...ஒனக்குக் காலனா வந்தேன்டா..."
எதிர் முழக்கம் செய்து வேகமாகக் கிளம்பிய வாலியின் காலை, வாசற்படி பதம் பார்த்தது.....

## பகுதி –25

ஒரு சிறு சந்தேகம் வாலியின் மனதில் தோன்றியது.....

"கெளம்பறச்சே இப்டி அபசகுனமா இருக்கே.......
ஒரு வேள...தாரை சொல்ற மாதிரி, நான் கொஞ்சம் நிதானிக்கணுமோ?.."

ஆனால் அந்த சந்தேகம், வந்த வேகத்திலேயே மறைந்தது......

"சே...... சே இதெல்லாம் என்ன பைத்தியக்காரத்தனம்! எனக்கு என்னோட பலத்தில நம்பிக்கை இருக்கு..யாரா இருந்தாலும், நான் ஒரு கை பாப்பேன். அது இராமனாவே இருந்தாகூட என்ன?.."

எதிலும் வெற்றி கண்டு இறுமாந்திருந்த வாலி, தன் விதியின் முன் தோற்றுத்தான் போனான்! கோபம் கொப்பளிக்க அரண்மனை வாசலை வந்தடைந்தான். அங்கே, சுக்ரீவன் புதிய பலத்தோடு சண்டைக்கு வந்திருப்பதைப் பார்த்ததும், வாலிக்குச் சற்று வியப்பாக இருந்தது..

ஏறக்குறைய எமலோகலத்தை எட்டிப் பாத்தவன், இப்போ இவ்ளோ சீக்ரமா திரும்பி வந்துருக்கானே! எப்டி இந்த தைரியம் இவனுக்கு வந்தது?..
ஒருகால்... தாரை சொன்ன மாதிரி அவனுக்கு, இராமன் சஹாயம் பண்றானோ?.."

சுற்றுமுற்றும் பார்த்தான்......
சண்டைக்குத் தயாராக நிற்கின்ற இவர்கள் இருவரையும் தவிர, அந்தப் பிரதேசமே ஆள்அரவம் இல்லாமல் இருந்தது!..

தொடைகளைத் தட்டிக்கொண்டு, ஆரவாரம் செய்கின்ற சுக்ரீவனைப் பார்த்ததுமே, வாலியின் சினம் சிகரத்தைத் தொட்டது. அதிக நம்பிக்கையோடு வந்திருந்ததால், இந்த முறை சுக்ரீவனுடைய பலம் கூடிப்போயிருந்தது..

"வாக்குக் கொடுத்தபடியே இராமன் வாலியைச் சாய்த்துவிடுவான்!" என்ற நம்பிக்கை உறுதியாக இருந்ததால், இப்போது அவன் வாலியை மிகவும் ஏளனத்தோடு எதிர்கொண்டான்.....

எப்பொழுதும் தன்னை ஒரு வித அச்சத்தோடு பார்க்கின்ற சுக்ரீவன், இன்று தன்னை ஒருவித ஏளனம் தோற்றப் பார்ப்பதை வாலியால் உணரமுடிந்தது......

"அவ்ளோ கொழுப்பாடா ஒனக்கு?..யார் கொடுத்த தைரியம்டா இது?"

கறுவிக்கொண்டே, கையில் வேரோடு பிடுங்கிய ஒரு மரத்தினால் சுக்ரீவனை பலம்கொண்டமட்டும் தாக்கினான்.

பதிலுக்கு சுக்ரீவன், தன் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிந்த ஒரு மலையைப் பெயர்த்தெடுத்து அவன் மீது வீசினான்.......

இப்படிக் காணுகின்ற மரங்களையும், மலைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக வீசி எறிந்து, இருவரும் மோதிக்கொண்டதில், அந்தப் பிரதேசமே, மலைகளையும், மரங்களையும் இழந்து ஒரு பெரிய பள்ளத்தாக்காக மாறியிருந்தது. விவேகம் இழந்திருந்த இருவருக்குமே வேகம் அதிகமிருந்ததது..

அதனால், கை சளைக்காமல், சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது. மெய் தளராமல், யுத்தம் நீண்டு கொண்டிருந்தது. இருவருமே குருதிக் குளியலால் சிவந்திருந்தார்கள். தக்க தருணத்திற்காக, பொறுமையாகக் காத்திருந்தான் இராமன்.....

சுழன்றுசுழன்று சண்டை போட்டுக் கொண்டிருந்ததனால், இலக்கை குறிவைப்பதில் கஷ்டம் இருந்தது. அப்பொழுதுதான்...மற்ற உபகரணங்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, நேரடியாகக் கைகலப்பில் இறங்கினான் வாலி......

"தரையில் அடித்து இவனைக் கொன்று விடுவதே சரி!" என்ற எண்ணத்தில், சட்டென்றுத் தாவிய வாலி, சுக்ரீவனைத் தனது இருகைகளாலும் லாவகமாக அசையமுடியாதபடி இறுக்கி, தனது தலைக்கு மேலே அனாயாசமாகத் தூக்கிப்பிடித்தான்....

அந்தக் கோலம்... அவனது பரந்த மார்பு, இராம பாணத்துக்கு அழைப்பு விடுவதைப் போலவே இருந்தது.....ஒருகணமும் தாமதிக்கவில்லை இராமன்!..

எந்த வாலியை நெருங்குவதற்கு, யமன் இத்தனைக் காலமும் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தானோ, அந்த யமனையே, தனது பாணத்தில் அமரவைத்து, வாலியின் பரந்த மார்ப்பை நோக்கி, காற்றினும் கடியதாய் ப்ரயோகித்தான் இரகுவீரன்.......

## பகுதி –26

வஜ்ராயுதம் கொண்டு அடித்தாலும், தகர்க்கவியலாத வலிமை மிகுந்த வாலியின் மார்பில், இராமனின் அம்பு, ஒரு பழுத்த கதலியின் கனியில் ஊசியொன்று எளிதாக நுழைவது போல, வெகு அனாயாசமாக நுழைந்தது.....

அது அவ்வாறு நுழைந்த அளவில், சுக்ரீவனை உயர்த்திப் பிடித்திருந்த வாலியின் கரங்கள் தன்னடையே நெகிழ்ந்தன. சூறாவளியாய் வீசுகின்ற பெருங்காற்றில் பெயர்த்துக்கொண்டு வீழுகின்ற நெடுமரமாய், இராமனின் அம்பு தைத்த அளவில், வாலி நிலைகுலைந்து விழுந்தான்......

அவனது சரீரம், இடிவிழுந்து மலையொன்று சாய்ந்ததுபோலக் காட்சியளித்தது...

வலி தாங்க இயலாதவனாய் வாலி எழுந்தும் விழுந்தும், புரண்டும் உருண்டும் துடிதுடித்தான்....
"என் மார்பில் புதைந்திருப்பது திருமாலின் சக்கரமா இல்லை திகம்பரனின் திரிசூலமா?" என்ற ஐயம் அந்த நேரத்தில் அவனுள் தோன்றியது......

"என்னை எதிர்க்க இந்தப் புவியில் ஒருவனா?..

யாருக்கு அவ்வளவு தைரியம் வந்தது?..."
என்று பலவாறாக எண்ணியவன், தனது கரங்களால் தனது மார்பைத் துளைத்தது என்ன வஸ்து என்று தடவிப் பார்த்தான்.

இறுதியில், தனது மார்பை ஊடுருவி இருப்பது "ஒரு அம்புதான்" என்பதைக் கண்டுகொண்ட போது, அந்த நிலையிலும் அவனால் வியக்காமல் இருக்கமுடியவில்லை!

"வஜ்ரம் போன்ற என்தேகத்துள் நுழையக்கூடிய அம்பொன்று இந்த ப்ரபஞ்சத்தில் யாரிடம் இருந்தது?..

அதை செலுத்தியவன்தான் யார்?.."
என்ற கேள்வி, இப்போது அம்பைக் காட்டிலும் அவன் மனதை அதிகம் குடைந்தது. அந்த அம்பை உருவி, அதில் பொறிக்கப்பட்டுள்ள பெயரைப் பார்த்தே தீரவேண்டும் என்ற எண்ணம் அவனை அந்நேரம் ஆட்டிப்படைத்தது. தனது இரு கால்கள், கரங்கள் எல்லாவற்றின் உதவியோடும், அந்த அம்பை, பெருமுயற்சிக்குப் பிறகு, ஒருவாறு தனது மார்பினின்றும் உருவி எடுத்தான்.....

அவனது அந்த அதிதீரச் செயலைக் கண்டு, இராமலக்ஷ்மணர்கள், "இப்படியொரு வீரனா?.." என்று வியப்பின் எல்லைக்கே சென்றனர்!..

ஒரு பெரிய மலையிலிருந்து வேகத்தோடு வீழுகின்ற அருவியாய், அம்பை உருவிய வாலியின் மார்பிலிருந்து குருதி கொப்பளித்துப் பெருகியது.......

"தான் ஆடாவிட்டாலும் தன் சதைஆடும்" என்ற வாக்கு பொய்யில்லை என்பதாய், இத்தனைக் காலமும் வன்மம் பாராட்டிக் கொண்டிருந்த சுக்ரீவனும், வாலியின் நிலைகண்டு, கதறி அழலானான்.

மார்பினின்று உருவிய அம்பை, தனது கரங்களில் எடுத்த வாலி, அதில் பொறிக்கப்பட்டுள்ளப் பெயரை உற்று நோக்கினான்.....

ஈரெழுத்துத் திருநாமம் அதில் மின்னியது!..

"என் கண்கள்தான் என்னை ஏமாற்றுகிறதோ?.." என்று வாலியின் மனம் ஒரு கணம் எண்ணியது.....

வேதனையால் அனிச்சைசெயலாய் வழிகின்ற விழிநீரை சுண்டி எறிந்து விட்டு, மீண்டும் அந்தப் பெயரை உற்று நோக்கினான்..

அம்பு துளைத்த வேதனை வாலிக்கு இப்போது அதிகம் தெரியவில்லை!..

அவன் யாரை "இவன் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடமாட்டான்!" என்று உறுதியாக நம்பியிருந்தானோ, அந்த அன்பின் உரு செய்த செய்கையால் தோன்றிய வேதனை அவனை அதிகம் பீடித்தது! அதனால் உண்டான வலி, அவனது நெஞ்சை சல்லடையாய்த் துளைத்தது. அதுவே, அவனை வாய்விட்டு அரற்றவும் வைத்தது.

## பகுதி –27

"தர்மமே உருவா வந்தவன் இராமன்"னு பலபேர் சொல்லிக் கேட்டுருக்கேன்.....
எத வெச்சு அவாள்ளாம் அப்டி சொன்னானு தெரியலயே.....

"பித்ரு வாக்ய பரிபாலனம் செய்யறேன்"னு நாட்ட விட்டு காட்டுக்கு வந்த, அந்த ஒரு காரணத்த வெச்சு அப்டி பேர்வாங்கினானா?

இவனப் போய், தர்மத்த ரக்ஷணம் பண்ண வந்தவன்னு எல்லாரும் கொண்டாடறாளே....
இதுதான் இவன் தர்ம ரக்ஷணம் செய்யற அழகா?.."

அந்த நிலையிலும், அடக்கமுடியாமல் அட்டகாசமாய் சிரித்தான் வாலி......

"நன்னா இருக்கு..... இந்த தர்மாத்மாவோட அழகு!..
இவனப் பெத்தவா பேர கெடுக்கறமாதிரி வந்து வாச்சுருக்கானே.....

இவனா, பரதனோட அண்ணா?.. அவன் எங்க! இவன் எங்க!......

சந்திரனுக்கு இருக்கறதுகூட ஒரு சின்ன களங்கம்தான்.....
ஆனா, சூரிய குலம் முழுசுக்கும், இந்த இராமன்தான் பெரிய களங்கம்!
இவனயா நான் ரொம்ப ஒசத்தியா நெனச்சுண்டிருந்தேன்?.."
ஏளனமாய்த் தலையில் அடித்துக் கொண்டான் வாலி...

தாரையின் நினைவு வரவும், வாய்விட்டு அரற்றினான்......

"தாரா... நீ சொன்ன பேச்ச நான் கேட்டிருக்கணும்...
இராமன்னு ஒத்தன் சுக்ரீவனுக்கு சகாயமா இருக்கான். அவன் ஒன்ன அழிக்கறதுக்கே இங்க வந்துருக்கான்னு சொன்னயே......

நான் கேட்டனா?..
இராமனயா தப்பாப் பேசறேன்னு ஒன்கிட்டயே வாதம் செஞ்சனே.......
நான் எப்பேர்ப்பட்ட அறிவிலி!.. நீதான் எப்பேர்ப்பட்ட அறிவாளி!.."

கழிவிரக்கம் மேலிட, கண்ணீர் சிந்திய வாலியின் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு ஈட்டியாக இராமனைப் பதம் பார்த்த வேளையில்......

கோதண்டபாணியாகக் கோசலை மைந்தனான இராமன், வாலியின் முன் வந்து நின்றான்.அவனைப் பார்த்த வாலியின் கண்களில் அனல் பறந்தது. வார்த்தைகளில் தணல் நிறைந்தது...

"வா...தசரதன் மகனே! இப்பவாவது நேர வரணும்னு தோணித்தே அதுவே சந்தோஷம்!..

மனசாட்சியோட, ரொம்ப நல்ல காரியம் செஞ்சுருக்கயே..... அதோட பலன் என்ன ஆச்சுன்னு பாக்க வந்துருக்க போல இருக்கு......

குலம், கல்வினு எல்லாம் பெருமையா இருந்தும் என்ன ப்ரயோஜனம்? கடைசியில நீ நடந்துண்ட விதம் பெருமையா இல்லயே! மறஞ்சு நின்னு என்மேல அம்ப செலுத்தியிருக்க...... இந்த மாதிரி யுத்தம் செய்ய யார் ஒனக்குச் சொல்லிக் கொடுத்தா? இது எந்த மனுதர்ம சாஸ்திரத்தில சொல்லி இருக்கு?

ஒருவேள, ஒன்ன மாதிரி உயர்குடி பிறப்பு, இந்த மாதிரியான காரியம் செஞ்சா தப்பில்லனு நெனச்சயோ? ந்யாயம், தர்மம் எல்லாம் கீழ்குடி பிறப்புக்குத்தானா?..

ஒனக்கும் எனக்கும் ஒரு பகையும் இல்லாம இருக்கச்சே, காரணம் இல்லாம என்ன கொல்றது தப்புன்னு ஒன் மனசாட்சி ஒனக்குச் சொல்லலயா? ஒன்னோட சீதைய இராவணன் தூக்கிண்டு போனதுக்கு, அவன்கிட்ட யுத்தம் பண்ணாம, ஒரு வானரமான என்கிட்ட வந்து ஒன் வீரத்த காட்டியிருக்கயே! இல்ல.. இல்ல... வீரம்லாம் இல்ல..ஆயுதம் ஏந்தாம நின்னுண்டு இருந்த என்மேல, மறஞ்சு நின்னு அம்பு செலுத்தியிருக்க..... இதுல வீரம் எங்கேந்து வந்தது?..

நீ தல நிமிர்ந்து நிக்கறத பாத்தா எனக்கு ஆச்சர்யமாதான் இருக்கு......
கீழ நான் விழுந்து கிடக்கறதனால, பெரிய ஆண்சிங்கம் போல இங்க வந்த நின்னுட்டயோ? என்கிட்ட சொல்லியிருந்தா நானே அந்த இராவணன் கிட்டேந்து ஒன்னோட சீதைய க்ஷணத்தில மீட்டுண்டுவந்து கொடுத்துருப்பேனே! போயும் போயும் இந்த சுக்ரீவனோட சஹாயத்தப் பெரிசா நெனச்ச ஒன்ன என்ன சொல்றது?..

சிங்கம் மாதிரி நான் இருக்கச்சே, ஒரு முயலப் போய் தொண தேடினயே...

ஒரு வேள ஒன்னோட சீதைய பிரிஞ்சதுனால, ஒன்னோட ஆராயற புத்தி, ஒன்னவிட்டுப் பிரிஞ்சுடுத்தோ?.."

ஊழிக்காலத்தின் ஆக்ரோஷமாய், வார்த்தைகளை உமிழ்ந்தான் வாலி.........

## பகுதி –28

வாலியின் பழிப்பை எல்லாம் செவிமடுத்த ஸ்ரீராமன் இப்போது வாய்திறந்தான்.....

"சொல்லி முடிச்சுட்டயா வாலி? இன்னும் வேற ஏதாது பாக்கி வெச்சுருக்கயா?.."

அதீத சினத்தினால், இராமனின் கேள்விக்குப் பதில்கூற விருப்பமில்லாதவனாய், வாலி மௌனம் சாதித்தான். இராமன் தொடர்ந்தான்.......

"ஒனக்கு என்மேல எவ்ளோ கோபம் இருக்குன்னு எனக்கு நன்னாவே புரியறது வாலி........நீ ஒன்தரப்பிலேந்து பேசின!.. இப்போ நான் சொல்றத எல்லாம் கேட்டுண்டு, என்னோட கேள்விக்கெல்லாம் பதில் சொல்லு.......
ஒன்னோட தம்பிய விசாரணயே இல்லாம தண்டிச்சயே..அது ஒனக்கு சரின்னு படறதா?..

ஒனக்காக மாசக் கணக்கில குகைவாசல்ல அன்னஆகாரம் இல்லாம காத்துண்டு இருந்தவன் அவன்!.. ஒன்னோட ராஜ்யத்த தனக்கு வேணாம்னு நிராகரிச்சவன் அவன்!.

ஒன்னோட மந்திரிகளும் மத்தவாளும் "ராஜ்யத்த ஏத்துக்கணும்"னு வற்புறுத்தச்சேகூட, "மாட்டேன்"னு பிடிவாதமா இருந்தவன் அவன்!..

அங்கதன ராஜாவா ஆக்கிக்கோங்கோன்னு சொல்லி ஒதுங்கிண்டவன் அவன்!

கடைசியா ஒன்னோட பத்னி தாரையோட வற்புறுத்தலுக்கு அப்புறமாதான், அரைமனசோட ராஜ்யபாரத்த ஏத்துண்டவன் அவன்! இதெல்லாம் எனக்குத் தெரியாதுன்னு சொல்லாதே.....

சொல்லவந்த தாரைய நீ உதாசீனம் பண்ணினே! சொல்ல வந்த ஒன்னோட சகோதரன, ஓடஓட விரட்டின!..
ஒன்னோட எந்த மந்திரிமாரெல்லாம் அன்னிக்குச் சுக்ரீவன வற்புறுத்தினாளோ, அவாள்ளாம் ஒன்னோட கோபத்தயும் ஆத்திரத்தையும் பாத்து ஒன்கிட்ட வாயே திறக்கல!..
எத்தனவாட்டி ஒன்தம்பி ஒன்கால்ல விழுந்து கெஞ்சியிருப்பான்?...கொஞ்சமாவது மனசு இரங்கினயா?..அவன இந்த ஒலகத்தோட மூலைமுடுக்கெல்லாம் ஓடஓட விரட்டின.....
ஒதுங்க எடமில்லாம தவிச்சவன், ஒனக்கிருந்த சாபத்தால, அந்த ரிஷ்யமுக பர்வதத்தில வந்து தங்கினான்......எத்தன இராத்திரி, எத்தன பகல், எத்தன வெயில், எத்தன மழை எல்லாம் அந்த மலைக்குகையோட இருட்டுலயே அவன் கழிச்சிருப்பான்!..ஒருநாளா, ரெண்டு நாளா?... வருஷக்கணக்கா எவ்ளோ துன்பம் அனுபவிச்சிருக்கான். அவனோட பத்னி ருமைய அபகரிச்சுண்டு, அவனத் தனியாக்கினயே.....

நீ மட்டும் பெண்டாட்டி பிள்ளைன்னு சகல வசதியோடயும் ராஜவாழ்க்க வாழ்ந்தயே! ஒரு நாளாவது, ஒன்தம்பிக்கு நீ செஞ்ச துரோகத்த நெனச்சுப் பாத்தயா?..

ஒரு ராஜாவா இருக்கறவன், ப்ரஜைகள் சொல்றத எல்லாம் காது கொடுத்துக்கேட்டு, அதுக்கேத்த பரிஹாரம் பண்ணனும்.......
ஆனா நீ?..
ஒன்னோட ப்ரஜைகள்ல ஒத்தனான ஒன்தம்பி சொல்றத காதுகொடுத்துக் கேக்காமயே, அவனுக்குப் பாதகம் பண்ணின! நீ இன்னிக்கு என்கிட்ட நியாயம் கேக்கறயா?.......ஒன்ன நான் தாக்கினது தப்புன்னு பேசற......

சுக்ரீவன் என்ன வந்து சரணடைஞ்சு, என்கிட்ட ஒதவி கேட்டான். என்னோட தர்மம், யார் என்ன சரணடைஞ்சாலும், அவாள காப்பாத்தறதுதான். அதுவும் சுக்ரீவனோட பத்னிய நீ அபகரிச்சத என்னால தாங்கிக்கவே முடியல......

என்னோட பத்னி சீதய அபகரிச்சது இராவணன்.. அவன் என்னோட சகோதரன் இல்ல!
ஆனா நீ?...
சுக்ரீவனோட சொந்த சகோதரன்!
ஒன் தம்பியோட பத்னிய, மகளா "பா"விக்க வேண்டிய நீ, மனைவிய அனுபவிக்கற மாதிரி அவள அனுபவிச்ச!..

இது ஒன் சகோதரனுக்கு நீ செஞ்ச துரோகம்னு ஒனக்குத் தெரியாதா?..

நானும் ராஜபரம்பரையில வந்தவன்தான். எங்க அநியாயம் நடந்தாலும் அதத் தட்டிக் கேக்கற கடமை எனக்கிருக்கு. அதுவும் ஒரு கஷ்டத்தச் சொல்லிண்டு ஒருத்தர்வந்து ஒதவி கேக்கச்சே, அதுக்குப் பரிஹாரம் தேடறது எங்க குலதர்மம்! நானும் அதத்தான் செஞ்சேன்!
நெறி தவறாம நீ நடந்திருந்தா, ஒன் வழியில நான் வந்திருக்கமாட்டேன்..
நீயோ... செய்யக் கூடாத துரோகத்த ஒன் தம்பிக்கு செஞ்சுருக்க..
ஒன்னக் கொல்றது பாவமா எனக்குத் தோணல.."

இராமன் பேச்சை அப்படியே ஏற்கமுடியாத வாலி, மறுதலிக்க ஆரம்பித்தான்......

## பகுதி –29

"ஹே தசரத குமாரா! ஒன்தரப்பு வாதத்த எல்லாம் சொல்லி ஒன்னோட செய்கைய நியாயப்படுத்தணும்னு பாக்கறயோ?..

ஒன்ன மாதிரி மனித குலத்துக்கு இருக்கற நெறிமுற எல்லாம் விலங்குஜாதிய சேந்த எங்களுக்குக் கெடையாதுன்னு ஒனக்குத் தெரியாதா?.......
எப்படி வேணாலும் இருந்துக்கலாங்கறா மாதிரிதான் அந்த ப்ரம்மனே எங்களப் படைச்சிருக்கான்!..ஒங்களுக்கு இருக்கற நியமநிஷ்டை எல்லாம் எங்களக்

கட்டுப்படுத்தாது.....அப்படி இருக்கச்சே, நான் செஞ்சது தப்புன்னு சொல்லி, என்ன நீ தண்டிச்சது எந்த விதத்தில ந்யாயம்?........
நரனா, வானரனான்னு பாகுபாடுகூட பாக்காம ஒரு காரியத்த செஞ்சுட்டு வாதம் வேற பண்றயே........ஒன் மனசாட்சி உறுத்தல?.."

அடுக்கடுக்காய் கேள்விக்கணைகளைத் தொடுத்த வாலியை, இராமன் பரிதாபம் மேலிடப் பார்த்தான்........

"விலங்குன்னு சொல்லிண்டு, நீ செஞ்ச அக்ரமமான காரியத்த ந்யாயப்படுத்தாத வாலி.........மத்த விலங்குகளப் போல நீ ஒன்னும் சாதாரண விலங்கா இல்லையே......மூணு வேள தவறாம சந்த்யாவந்தனம் பண்றவன் நீ..
தெனமும் சூரிய நமஸ்காரம் பண்றவன் நீ.......ஓடிஓடிப்போய் நித்யமும் மஹாதேவனுக்குப் பாதபூஜ பண்ற நல்ல சிவபக்தன் நீ!

இப்படிப்பட்ட நீ, ஒன்னயா ஒரு சாதாரண விலங்கா நெனைக்கச் சொல்ற?.......
நீ ஒன்னும் க்ரமமும், அக்ரமமும் தெரியாதவன் இல்லயே........
மத்த வானரங்களப் போல ஞானமில்லாதவனா நீ?.."

இராமன் கூறியதிலிருந்த ந்யாயம் வாலியை உறுத்த, சற்று நேரம் மௌனம் சாதித்தான். ஆனாலும் முழுவதும் சமாதானம் அடையாதவனாய் மீண்டும் தொடர்ந்தான்.......

"சரி இராமா.. நீ சொல்றதுபோல நான் தவறு செஞ்சவனாவே இருந்துட்டுப் போறேன். அதுக்காக, என்ன மறஞ்சு நின்னு தாக்கிருக்கயே.. அதுக்கு என்ன சமாதானம் சொல்லப்போற?.."

வாலியின் கேள்விக்கு இராமன் என்ன சமாதானம் தரப்போகிறானோ என்ற தவிப்பு சுக்ரீவன் உட்பட அனைவருக்குமே இருந்தது!

"ஒன்னு தெரியுமா வாலி?.. உருவத்தாலயும் சரி...உள்ளத்தாலயும் சரி...ஒன் நடவடிக்கையாலயும் சரி.. நீ ஒரு விலங்குதான்கறதுல சந்தேகமே இல்ல!..

*விலங்குகள யாரும் நேருக்கு நேர் நின்னு தாக்கறது வழக்கம் இல்ல......
மறஞ்சு இருந்துதான் தாக்குவா..அதனால, நான் மறஞ்சிருந்து ஒன் மேல அம்பு எய்ததல ஒரு தப்பும் இல்ல*
ரெண்டாவது, நீ ஒன்ன யார் நேர நின்னு தாக்கினாலும் அவா பலத்துல பாதிபலம் ஒன்ன சேரணும்னு ஒரு வரம் தேவர்கள் கிட்ட வாங்கியிருக்க..

அத்தையும் மீறி என்னால ஒன்ன ரொம்ப சுலபமா அழிக்க முடியும்..ஆனா, அப்டி நான் செஞ்சுட்டா, அந்த தேவர்களோட வாக்கு பொய்யாயிடும்.. அத நான் விரும்பல..

மூணாவது நீ என்னப் பாத்ததும்,ஒருவேள என்கிட்ட சரண் அடைஞ்சா என்ன செய்யறதுன்னு ஒரு யோஜனையும் எனக்கிருந்தது......சரணடைஞ்சவாளக் காப்பாத்தறது என்னோட தர்மம்..
ஒன்னோட தப்புக்கு, நீ மனசு வருந்தி, என்கிட்ட சரணடைஞ்சா பரவாயில்ல......

இப்போ ஒன்னோட தப்ப ந்யாயப்படுத்தறா மாதிரி, பேசறயே.. அப்படிப் பேசினா, என்னால ஒன்ன மன்னிக்க முடியுமா?.

நாலாவது ஒரு வேள ஒன்னோட வீம்பால, ஒன்னோட வானரப்படை எல்லாத்தயும் தெரட்டிண்டு வந்து, என்னோட யுத்தம் பண்ணவும் நீ முயற்சி செய்யலாம்..

வேறவழியில்லாம ஒன்படை அத்தனையையும் நான் நிர்மூலம் செஞ்சுருப்பேன்.....

ஆனா... நீ செஞ்ச தப்புக்கு, அநியாயமா அந்த அப்பாவி வானரங்கள் உயிர் இழக்கறதுல எனக்கு விருப்பம் இல்ல..இப்ப சொல்லு.. நான் ஒன்ன மறஞ்சு நின்னு தாக்கினதுல தப்பு இருக்கா?..

ஒன்னே ஒன்னு ஞாபகம் வெச்சுக்கோ வாலி..உயிர் போற க்ஷணத்துலயும் கூட நீ செஞ்ச மஹாபாதகத்துக்கெல்லாம் வருந்தலைனா, ஒன்ன அந்த தெய்வம் மன்னிக்கவே மன்னிக்காது..அதனால இப்ப கெடச்சு இருக்கற இந்த கடைசி சந்தர்ப்பத்தையும் விட்டுடாதே.."

ஒரு வானரத்தின் குற்றச்சாட்டுகளையும் செவிமடுத்து விடையளித்த விண்ணவர்கோனின் மாண்பு, வாலியோடு சேர்த்து சுற்றியிருந்த அனைவரையும் ப்ரமிக்க வைத்தது! தரையில் வீழ்ந்து கிடந்த வாலியின் கண்களிலிருந்து, இப்போது இராமனின் பேச்சினால் தாரைதாரையாக நீர் பெருக்கெடுத்தது.....

## பகுதி –30

சான்றோர்களிடம் பல நூற்பொருட்களைக் கேட்டறிந்து ஞானத்தை வளர்த்துக்கொண்டிருந்தாலும், அகம்பாவத்தாலும், ஆத்திரத்தாலும் பல பாதகங்களைச் செய்து, தனது உடன் பிறந்தவனுக்கே அநீதி இழைத்திருந்ததை, வாலி இப்போது உணரத் தொடங்கியிருந்தான்.........

"இறக்கும் தருவாயிலாவது, நீ உனது தகாதசெயல்களுக்காக வருந்துவாய்!" என இராமன் கூறியதும், இப்போது அவனைச் சிந்திக்க வைத்தது....

"வாஸ்தவம்தானே இராமன் சொல்றது!.. இதோ இந்தக்கூட்ட விட்டு என்னோட உயிர் புறப்படத் தயாரா இருக்கு.....

ஆராஞ்சு பாக்காம என்தம்பிக்கு நெறய பாதகம் செஞ்சுருக்கேன்கறது, இந்த இராமன் எடுத்துச் சொன்னப்பறம்தான் தெரியறது. மன்னிக்கக் கூடிய தவற நான்

செய்யல. தண்டிக்கக் கூடிய பெரிய தவறெல்லாம்தான் நான் செஞ்சுருக்கேன். அதனாலதான் தெய்வமே நேரிலவந்து என்ன தண்டிச்சுருக்கு!..

நான் செஞ்சது மஹா பாவம் ஆனாலும், இரக்கமே வடிவான இந்த இராமன் கையால மரணம் வரணும்கறது, என்னோட பூர்வ ஜன்ம சுக்ருதமாத்தான் இருக்கணும்.."

மனம் தெளிந்த வாலி, இராமனை வணங்குவதற்காக எழுந்து நிற்க முயற்சித்தான்..
ஆனால் அவனால் இயலவில்லை! இரண்டு கரங்களையும் குவித்தவனின் விழிகள் தொடர்ந்து நீரைப் பெருக்கியவண்ணம் இருந்தது...........

"இராமா!..இரவி குல சூரியனே! ஒன்ன வாய்க்கு வந்தபடி எல்லாம் கோபத்துல பேசிட்டேன்.........

அன்னிக்கும் ஆத்திரம் கண்ண மறச்சதுனால தப்பு பண்ணேன்! இன்னிக்கும் ஆத்திரம் கண்ண மறச்சதுனாலதான் தப்பு பண்ணேன்! தர்மாத்மாவான ஒன்கிட்டப்போய் குத்தம் கண்டுபிடிக்கற அளவுக்கு நான் போயிட்டேன்!

ஆனாலும் இந்த நாயவிடக் கீழானவனையும் மதிச்சு, நான் கேட்ட கேள்வி ஒவ்வொன்னுக்கும், நீ தகுதியான பதில சொன்னே! அதுக்கே ஒன்ன நான் நமஸ்காரம் பண்ணனும்.."

வாலி தன்னை உணர ஆரம்பித்துவிட்டான் என்பதை முதலில் புரிந்து கொண்டவன், அவனது சகோதரனான சுக்ரீவன்தான்!

சாக்ஷாத் பரப்ரம்மமே நேரில் வந்து நிற்கும்போதும், தனது தமயன் அவனிடம் அபசாரப்படுவது அவனுக்கு மிகவும் ஆதங்கமாகவே இருந்தது!

இப்பொழுது வாலியின் பேச்சைக் கேட்டவன், கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.......

"இராமா... நான் செஞ்சதெல்லாம் தப்புதான்னு இப்போ புரிஞ்சுடுத்து..

மாபாதகத்த செஞ்ச எனக்கு, நிச்சயம் நரகம்தான் கெடைக்கும்..
ஆனா நீ சாக்ஷாத் அந்த பரமாத்ம ஸ்வரூபம்னு நான் ஒணர்ந்துட்டேன்..
அதனால, நீதான் எனக்கு நற்கதி தரணும்..
ஒன்ன விட்டா என்னோட பாவக்கணக்க கழிச்சு கொடுக்கறதுக்கு எனக்கு வேற யாரு இருக்கா?..
நீ சொன்னமாதிரி விவேகத்தோட நடந்துக்காம, நான் என்னோட பிறப்புக்கு ஏத்தமாதிரி, ஒரு விலங்காதான் நடந்துருக்கேன்.......
ஆனாலும் ஒன்னோட தயையினால என்ன மன்னிச்சு என்னோட ஆத்மாவ நீதான் ரக்ஷணம் பண்ணனும்..

ஒன்னச் சரணடஞ்சவாள, நீ கைவிட மாட்டேங்கறது தெரிஞ்சதுனாலதான், இத்தனத் தவறுக்கப்புறமும், தைரியமா ஒன்கிட்ட கேக்கறேன்.....
என்தம்பி சுக்ரீவன், ஒன்ன சரணடஞ்சதுனால, கிஷ்கிந்தையத்தான் அடையப்போறான்!..
ஆனா, ஒன்னச் சரணடஞ்ச நான், மேலான ஒன் ராஜ்யமான அந்தப் பரமபதத்தையே அடையப்போறேன். வாஸ்தவத்துல நான்தான் ரொம்ப பாக்யசாலி. எனக்கு இப்போ மனசு பளிங்குமாதிரி தெளிவாயிடுத்து இராமா! இந்த ஜீவன் கரையேறதுக்கு நீதான் வழிபண்ணனும்..."

வாலியின் ப்ரார்த்தனையில் இராமன் நெகிழ்ந்தான்.....

"வாலி.. எப்போ ஒன்னோட தப்ப நீ ஒணர்ந்திட்டயோ, அப்பவே அதெல்லாம் கழிஞ்சுபோச்சுன்னு வெச்சுக்கோ. ஒனக்கு நிச்சயமா பரமபதம் கெடச்சாச்சுன்னே நம்பு!"

இராமனின் இந்த உறுதியான வார்த்தைகள், வாலியை நெகிழ வைத்தன. சற்று தன்னைச் சுதாரித்துக் கொண்டவன் மீண்டும் தொடர்ந்தான்..

"இராமா... எனக்கு ஒன்கிட்ட இன்னும் சில ப்ரார்த்தனையெல்லாம் இருக்கு.. அதையும் நீதான் நெறவேத்திக் கொடுக்கணும்.."

இராமன் உட்பட அனைவரது செவிகளும் வாலியின் வார்த்தைகளைக் கேட்கத் தயாராயின.......

## பகுதி –31

வாலியின் வேண்டுதல் என்னவாக இருக்கப்போகிறது என்பதே அனைவர் மனதிலும் இப்போது ஓடிக்கொண்டிருந்தது...

வாலியின் கண்களில் பெருகிக்கொண்டிருந்த கண்ணீர், சற்று நேரமாய் நின்றிருந்தது..அது, இப்போது மீண்டும் வழிய ஆரம்பித்தது..

"ஐயனே ரகுராமா! இத்தனக் காலமா என்னால சுக்ரீவன் பல சொல்ல முடியாத கஷ்டங்கள அனுபவிச்சிருக்கான்..
ஆனா அதுக்கெல்லாம் இன்னிக்கு நான் வருந்தறதுனால, அவன் பட்ட கஷ்டம்லாம் இல்லேன்னு ஆயிடாது.......

என்ன மாதிரி ஒரு ஒடன்பிறந்தான் கெடச்சது அவனோட துர்பாக்யம்தான்னு சொல்லணும்......நீ சொன்னப்பறம்தான், அவன் மாசக்கணக்கா குக வாசல்ல அன்ன ஆகாரம் இல்லாம எனக்காகக் காத்திருந்தது தெரிஞ்சது.
அவன் என்னோட சிம்மாசனத்து மேல கொஞ்சமும் ஆச இல்லாம இருந்தான்னும் புரிஞ்சுது.......

ஆனா இது எதயும் ஆராயாம, ஒரு அரசனாவும் சரி..அண்ணனாவும் சரி.. நான் அவனுக்குக் கொடுத்த தண்டன ரொம்ப அதிகம்! அவன்கிட்ட மன்னிப்பு கேக்கற தகுதி கூட எனக்கில்ல.
இத்தன கஷ்டம் கொடுத்த என்ன, ஒன் சஹாயத்தோட அவன் வதம் பண்ணதுல எந்தத் தப்பும் இல்ல! இந்த தண்டன எனக்கு ஞாயமா கெடைக்க வேண்டிய ஒன்னுதான்!..என்னிக்கு இருந்தாலும் இந்த உயிர் போய்தானே ஆகணும்! அது ஒன்னோட கையால போறது என்னோட கொடுப்பினதான்னு சொல்லணும்..

ஆனா, என்னோட மரணத்துக்குச் சுக்ரீவன்தான் காரணம்னு அவன ஒன்னோட ப்ரதாவெல்லாம், நாளைக்குக் கேவலமா பேசறதுக்கு வாய்ப்பு இருக்கு..
அவாள்ளாம் ஒன்ன மாதிரி அண்ணாவா, என்ன நெனச்சுண்டிருப்பா!..

சுக்ரீவன்தான் ஒன் தம்பிகள் மாதிரி இருந்தானே தவிர, நான் ஒன்ன மாதிரி அண்ணாவா அவனுக்கு இல்ல!..அதுதான் ஸத்யம்! அதனால, சுக்ரீவன ஒன்தம்பிகள் மட்டமா பேசிடாம நீதான் பாத்துக்கணும்.."

நீயும் சுக்ரீவன ஒன்னோட சொந்த சகோதரனா "பா"விக்கணும்னு ப்ரார்த்திச்சுக்கறேன். ஒன் தம்பி இலக்ஷ்மணன நடத்தற மாதிரி அவனயும் நடத்தணும்னு ஒன்ன வேண்டி கேட்டுக்கறேன்..

அப்பறம்... இதோ நிக்கறானே அனுமான், அவனுக்கு ஒன்னோட வில்லுக்கு இருக்கற சக்தி அத்தனையும் இருக்கு!..

அதனால, இந்த சுக்ரீவனையும், அனுமானையும் துணையா வெச்சுண்டு, நீ சீதயத் தேடிக் கண்டுபிடி!..நிச்சயமா அவள மீட்டுடலாம்! என்கிட்ட நீ முன்னாடியே சொல்லியிருந்தா, அந்த இராவணன இழுத்துண்டு வந்து, ஒனக்கு மண்டியிட வெச்சுருப்பேன்.. ஆனா எனக்கு அந்த அதிர்ஷ்டம் இல்ல! அதப்பத்தி இனிமே பேசியும் ப்ரயோஜனமில்ல!..."

தன் உள்ளக்கிடக்கையை ஒருவாறு இராமனிடம் கூறியவன் இப்போது சுக்ரீவனை அருகே அழைத்தான்..

ஒரே ரத்தம், பல காலங்களுக்குப் பிறகு, அங்கே ஒன்றிணைந்தது..

"தம்பீ....." தன் சக்திக்கு மீறி பெருங்குடலெடுத்து அழுது அவனைத் தனது இரண்டு கைகளாலும் கட்டிப்பிடித்தான் வாலி..

"தம்பீ..என்னோட மரணத்துக்கு நீ எள்ளளவும் வருந்தாத! இந்த முடிவு எனக்கு ந்யாயமா கெடைக்க வேண்டியதுதான்! ஒன்னோட பங்கு இதுல எதுவும் இல்ல..அதனால நீ இத நெனச்சு நெனச்சு ஒன்ன வருத்திக்காத! அப்பறம், நான் ஒனக்கு ஒரேயொரு அறிவுர சொல்ல ஆசப்படறேன். இதோ நிக்கறானே இராமன். இவன் சாக்ஷாத் அந்தத் திருமாலோட அம்சம்தான்! இவனோட சஹாயம் ஒனக்குக்

கெடச்சுருக்கறதே பெரிய பாக்யம்தான்! அவனோட தொணையாலதான் ஒனக்கு இன்னிக்குப் பெரிய நன்மை நடந்துருக்கு!..இத எந்தக் காலத்துலயும் மறந்துடாத!.. எப்பவும் அவனோட மனசு கோணாம நடந்துக்கப் பாரு. ஆட்சியும் அந்தஸ்தும் வந்தப்பறம், அவன மறந்து போயிடாதே!.."

கண்களில் ஆறாய் நீர்பெருக, துக்கம் தொண்டையை அடைக்க சுக்ரீவன் இப்போது வாய்திறந்தான்..
"அண்ணா... என்ன மன்னிச்சுடுங்கோண்ணா... நான் அறிவில்லாம பெரிய தப்பு பண்ணிட்டேன்.. உணர்ச்சிவசப்பட்டு, ஒங்கள கொல்ற அளவுக்குப் போயிருக்கேன்...நான் பெரிய பாவத்த பண்ணிட்டேண்ணா.."

கதறியவனின் கரங்களை ஆறுதலாகப் பிடித்துக்கொண்டவன் இராமனை அருகே அழைத்து, அவன் கரங்களில் சுக்ரீவனை ஒப்படைத்தான்..

"ஹே இராமா.. என்னோட தம்பியையும் அவனோட படை மொத்தத்தையும், ஒன்கிட்ட ஒப்படைக்கிறேன்.. இனிமே நீதான் அவனுக்கு எந்தக் கஷ்டமும் வராம பாத்துக்கணும்.."
சொல்லிக்கொண்டே இருகரங்களையும், தனது சிரசின் மேல்வைத்து இராமனை வணங்கினான்..
மறுபடியும் சுக்ரீவன்பக்கம் திரும்பினான்... "தம்பீ..என்னோட மகன் அங்கதன இங்க சீக்கிரமா அழச்சுண்டு வா!..அவன்கிட்ட நான் பேசவேண்டியது கொஞ்சம் இருக்கு.."

அவன் கட்டளையை ஏற்ற சுக்ரீவன், அங்கதனை அழைத்துவர உடனே கிளம்பினான்...

## பகுதி –32

இத்தனை நாளுமில்லாத அதிசயமாய், தனது சிற்றப்பனான சுக்ரீவன் நேரில் வந்து,"ஒன்ன ஒன்னோட தந்தை அவசரமா கூப்படறார்" என்று கூறியது, அங்கதனுக்கு வித்யாசமாக இருந்தது..ஏதோ சரியில்லை என்றுபட்டது. இருந்தாலும், எதையும் வெளியில் காட்டிக்கொள்ளாமல், அவசரஅவசரமாய் சிற்றப்பனைப் பின்தொடர்ந்தான்..

சம்பவ இடத்தை நெருங்குவதற்கு முன்னமே, அங்கு கூடியிருந்த கூட்டம், அவனது சந்தேகத்தை மேலும் அதிகரித்தது. இதயம் படபடக்க ஓட்டமாக ஓடிவந்தவன் கண்ட காட்சி, அவனது இரத்தத்தை அப்படியே உறைய வைப்பதாக இருந்தது.......

அங்கே அவனது ஆருயிர்த் தந்தை, அனாதையாய்த் தரையில் படுத்துக் கிடந்ததைக் கண்டதும் அவனது மனம் பதைபதைத்தது. உடல் குப்பென்று வியர்த்தது. மலர்ப் படுக்கையிலேயே தந்தையைப் பார்த்துப் பழகியவனுக்கு, மண்படுக்கையில் தந்தை கிடந்தது, கண்களில் குருதியையே வரவழைத்தது......

"என் ஐயனே!..." என்று கதறிக்கொண்டு அவனை நெருங்கினான். மகனைக் கண்டதும், வாலியின் கண்களிலிருந்தும் நீர் அருவியெனப் பெருகியது...

தந்தையின் மீது விழுந்து புரண்டு கதறினான் தனயன். அவன் மார்பில் அம்பு துளைத்திருப்பதையும், அதிலிருந்து குருதி கொப்பளித்து வந்து கொண்டிருப்பதையும் கண்டான். நம்ப முடியாதவனாய், கேள்விக் கணைகளைத் தொடுத்தான்.......

"ஐயனே...உமக்கு யார் இந்தப் பெரிய பாதகத்தச் செஞ்சா?..
உம்ம நெருங்கற தைரியத்த எமனுக்கு யார் கொடுத்தா?..
உம்ம எதிர்க்கற சக்தி படைச்ச ஒத்தனும் இந்த ப்ரபஞ்சத்தில இருக்கானா என்ன?..
உம்ம இந்த நெலமைக்கு ஆளாக்கினவன் தான் யாரு?.."

கதறிய தனயனைத் தனது கரங்களினால் வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தான் வாலி........

"மகனே அங்கதா!.. இந்த பூமியில வந்தவா எல்லாரும் ஒருநாள் போய்தான் ஆகணும்கறது தெய்வத்தோட ஸங்கல்பம்.. அத நாம யாருமே மீற முடியாது.......
அதனால நீ வருத்தப்படாத!..

ஒன்னோட தந்தை ரொம்ப புண்யம் பண்ணியிருக்கேன்.. நான் செஞ்ச சிவபூஜ வீணே போகல! எனக்கு இதோ நிக்கறானே இராமன்.... இவன் கையால நல்லது நடந்துருக்கு. ஸாக்ஷாத் திருமாலோட அவதாரம் இவன்! நான் ஒங்கச் சித்தப்பாவுக்குச் செஞ்ச பல த்ரோகத்துக்கும் ஏத்த தண்டனைய இன்னிக்கு இவன் எனக்குக் தந்துருக்கான். ஆனா, அதுக்காக எனக்கு அவன் மேல துளியும் வருத்தமோ, கோவமோ இல்ல! இவன் மூலமா என் முடிவு கெடச்சதுனால, எனக்கு பரமபத வாஸமே காத்துண்டு இருக்கு!........

நானாவது ஒனக்கு இந்த ஜென்மத்துக்கு மட்டுந்தான் தந்தை! ஆனா இவன்.. இந்த லோகத்துக்கே தந்தை! நம்ம எல்லாருக்குமே, என்னிக்கும் தந்தை!..

ஒரு தந்தையானவன், தன்னோட குழந்தைகளுக்கு எந்தத் தீங்கயாவது செய்வானா? எனக்கு நேர்ந்த இந்த மரணமானது விதிவசம்தான்கறத நீ புரிஞ்சுக்கோ.....
இந்த இராமன் சுத்தமான தர்மாத்மா! இவன நீ கெட்டியா பிடிச்சுண்டா, ஒன் வாழ்க்க என்னிக்குமே நன்னாயிருக்கும்.....
எப்பவுமே, தந்தையோட பேச்சக் கேட்டு நடக்கற நல்ல மகன் நீ! அதனால இப்போ நான் சொல்றதயும் கவனமா கேட்டுக்கோ. இந்த இராமனை என்னிக்கும் நீ அண்டி இரு..அதுதான் ஒனக்கு ஜன்மாந்திரத்துக்கும் நல்லது!..
அவனுக்கு என்ன சஹாயம் எப்போ தேவப்பட்டாலும், ஒன் உயிரப் பணயம் வெச்சாவது பண்ணு!
நாளைக்கே அவன் யுத்தம் பண்ண போனான்னா, நீயும் கூடப்போய் யுத்தப் பண்ணு..

அவனுக்கு எந்த ஒத்தாசத் தேவப்பட்டாலும், அவன் கேக்கறதுக்கு முன்னாடி, அவனோட முகக்குறிப்பப் பாத்துப் பண்ணு......
இனிமே ஒன்னோட தந்தை அவன்தான்! ஒன்ன அவன்கிட்ட ஒப்படைச்சுட்டுப் போறதுனால, ஒன்னப் பத்தின விசாரமில்லாம நான் கௌம்பிப் போறேன்.."

மகனைத் தேற்றியவன், இராமன் பக்கம் திரும்பினான்......

"இராமா... இதோ என்னோட பிள்ள அங்கதன்.. இவன் இனிமே ஒன்னோட பொறுப்பு... இவன உன் ஏவலுக்கு வெச்சுக்கோ.....
இவனும் பராக்ரமசாலிதான்!.. எதிரிகள் கூட்டத்த சுலபமா பந்தாடக் கூடியவன்.. இவன் ஒனக்குச் சஹாயமா இருப்பான்கறதுல எனக்குச் சந்தேகமே இல்ல.."

அங்கதனின் கைகளை எடுத்து, இராமனின் கைகளில் வைத்தவன், சற்றே ஆயாஸத்துடன் கண்களை மூடினான். தந்தையால் ஒப்படைக்கப்பட்ட அங்கதன், இராமனை இப்பொழுதுதான் ஆழ நோக்கினான். தந்தை ஸத்யத்தையே உரைத்திருக்கிறார் என்பதை ஒரு க்ஷணத்தில் அவன் உணர்ந்து கொண்டான்......

"இவன் அந்தத் திருமாலே!" என்று கொஞ்சமும் ஐயமின்றி உணர்ந்தவன், சிரம்தாழ்த்தி, இருகரங்களையும் இராமனை நோக்கிக் குவித்தான்......

அங்கதனைக் கண்ட இராமனுக்குத் தசரதனை இழந்து, தான் தவித்தது சற்றென்று நினைவில் வந்து போனது. ஆதரத்தோடு அங்கதனை அணைத்துக் கொண்டவன், "அங்கதா..இனி நீ என்னோட பொறுப்பு...நான் உன்ன நிச்சயம் பாதுகாப்பேன்.. நீயும் எனக்குப் பாதுகாப்பா இரு...அதுக்குதவியா, இதோ என்னோட உடைவாள ஒன்கிட்டத் தரேன்..வெச்சுக்கோ..."

யாரைத் தான் வீழ்த்தினானோ, அவனது மகனிடமே தன்னைப் பாதுகாக்கும்படி கூறியதோடல்லாமல், கொஞ்சமும் தயக்கமின்றி, தனது உடைவாளையும் தந்த இராமனின் செய்கையை மூவுலகமும் ஆரவாரித்துக் கொண்டாடியது..
இந்தச் செயலைக் கண்டு நெகிழ்ந்து போன வாலியின் கண்கள், கண்ணீரைப் பெருக்கின.
நன்றியால் இருகைகளையும் குவித்து இராமனை வணங்கியவனின் முகத்தில், தம்பியையும், தனயனையும் இராமனிடம் ஒப்படைத்துவிட்ட த்ருப்தி அப்பட்டமாய்த் தெரிந்தது........

## பகுதி –33

மனதில் ஏற்பட்ட சந்தோஷமும் த்ருப்தியும், முகத்திலும் வெளிப்பட, வாலி வானுலகம் கிளம்ப ஆயத்தமானான்......
எந்த இராம பாணத்தால் தனக்கு சத்கதி கிடைக்க உள்ளதோ, அந்த இராமபாணத்தைக் கடைசி முறையாகத் தனது கரங்களினால் தீண்டிச் சிலிர்த்தான் வாலி........
மெல்ல அவனது கைப்பிடித் தளர்ந்தது. அவ்வளவிலே இராம பாணம் அதிவேகமாய் உயர எழுந்து பயணித்து, தூய கடல் நீர் ஆடி, மீண்டும் இராமனின்

அம்பறாத்தூணியை வந்தடைந்தது. வாலியின் ஆவியோ, இராமனால் அளிக்கப்பட்ட நல்லுலகத்தை அடைந்து மகிழ்ந்தது......

இத்தனை நேரமாய் வாலியின் மனைவியான தாரையைப் பற்றி எண்ணாமலேயே இருந்தவர்களுக்கு இப்போதுதான் அவள்மேல் சிந்தை வந்தது........

"இது என்ன?..போற நேரத்துல தம்பிக்கும் தனயனுக்கும் இராமன்கிட்ட ப்ரார்த்தன பண்ணவன், தன்னோட தாரத்துக்காக ஒரு வார்த்தக்கூட கேக்காமயே பயணப்பட்டுட்டானே! தாரை மேல எவ்ளோ ப்ரியம் வெச்சுருந்தான். எப்டி மறந்தான் அவள? அவகிட்ட கடைசியா ஒரு வார்த்த சொல்லிக்கணும்னுகூட ஏன் அவனுக்குத் தோணவே இல்ல?.."

அனைவர் மனத்தையும் குடைந்து எடுத்தது இந்தக் கேள்வி.....அந்த நேரம் செய்தியறிந்து கதறிக் கொண்டு வந்த தாரை, வாலியின் உயிரற்ற உடல் மீது, தானும் ஒரு உயிரற்ற சடலம்போல வந்து விழுந்தாள்.......
தாங்கொணாதத் துயருடன் அவள் அழுத அழுகை, அங்கு இருந்தவர் அத்தனைப் பேரையும் கரைத்தது.......

வெள்ளமாய் கண்களில் நீர் பெருக, அவளது விரிந்து அவிழ்ந்த கூந்தல் மார்பிலே அலைஅலையாகப் புரள, எதிரே இருந்த மலைகள் உருக, அங்கிருந்த மண்ணும் மரமும் உருக, மணவாளன் மார்பின் மீது விழுந்து அழுதாள்.....

ஓடிவந்து அவளைத் தேற்றினான் அங்கதன்........

ஆனாலும் அவள் அழுகை ஓரளவிற்கு அடங்கியதே தவிர, அவளது அரற்றல் அடங்கவே இல்லை!..

"ஹே நாதா!..என்ன இங்க விட்டுட்டு நீ மட்டும் வைகுந்தம் போயிட்டயோ?..
ஒன்ன விட்டு க்ஷணம் கூட இருக்க மாட்டேன் தாரான்னு எத்தன வாட்டி நீ சொல்லியிருப்ப!.. அதெல்லாம் பொய்யாயிடுத்தா?..

ஐயோ நாதா.. மலர் படுக்கையில படுக்கற நீ, இந்த மண் படுக்கையில படுத்திருக்கறத பாத்தும் என்னோட உயிர் போகலயே...அப்போ..
நான் ஒன்மேல வெச்சிருந்த ஆசையும் நெஜமில்லையோ!

அந்த தேவாளுக்கெல்லாம் அமுதம் கெடைக்கறதுக்கு ஒதவிப் பண்ண நீயும், அன்னிக்கே அதுல ஒரு துளி வாங்கி சாப்டிருக்கக் கூடாதா?.....
இப்போ நீயில்லாம என்னத் தனிமரமா ஆக்கிட்டயே.... ஒன்னோட தாரை கண்ணுலேந்து ஜலம் வந்தா நீ பாத்துண்டுதான் இருப்பயோ?.."

தலையிலும், மார்பிலும் அடித்துக்கொண்டு அழுதாள் தாரை.....

பிறகு மீண்டும், ஏதோ நினைவுக்கு வந்தவளாய், வாலியின் உயிரற்ற உடலைப் பார்த்துப் பேசலானாள்..

"நீ ரெண்டாவது தடவயா, சுக்ரீவனோட சண்டைக்குக் கௌம்பச்சவே நான் தடுத்தேனே... ஒன் தம்பிக்கு இராமன்னு ஒத்தனோட சகாயம் கெடச்சுருக்கு.. அந்த இராமன் சாக்ஷாத் திருமாலோட அம்சமாம்..
நீ அதனால அவன்கிட்ட ஜாக்ரதையா இருன்னு சொன்னேனே... நீ கேட்டயா?..

இராமன் நீதி தவறாதவன்! தர்மாத்மா! அவன் என் விஷயத்துல எல்லாம் தேவையில்லாமத் தலையிடமாட்டான்னு என்ன அடக்கிட்டுக் கௌம்பினயே.....

இப்போ பாத்தயா, அந்த தர்மாத்மா செஞ்ச காரியத்த!..இவனையா நீ நீதிமான்னு கொண்டாடினே?.."

இறந்து கிடந்த கணவனின் மார்பை வெறிகொண்டவள் போல் உலுக்கினாள் தாரை....அவளை ஆதரவாக இத்தனை நேரமும் அணைத்துக் கொண்டிருந்த அங்கதனைப் பார்த்து மீண்டும் புலம்பலானாள்..

"அங்கதா.. என் மகனே... நமக்கு நேர்ந்த கதியப் பாத்தயா?.. ஒன் தந்தை உயிரோட இருந்தவரைக்கும் ஒளிஞ்சுண்டிருந்த ஒன்னோட சித்தப்பா சுக்ரீவன்தான் இனிமே இந்த நாட்டுக்கு ராஜா! நம்ப நெலமை இனிமே என்ன ஆகப் போறதோ?..
இந்த இராஜ்யத்த ஒன்னோட சித்தப்பா நேர்மையான முறையில சம்பாதிக்கல.....
அதனால அவனோட இராஜ்யத்தில எந்த நேர்மையும் நீதியும் இருக்கப் போறதும் இல்ல. நமக்கு இனிமே இங்க இருக்க எடமும் இல்ல.நாம அனாதரவா ஆயிட்டோம்டா மகனே!.."

பிள்ளையைக் கட்டிக் கொண்டு அழுதாள் தாரை.......
தானும் தனது கணவனும் எந்தத் தவறுமே இழைக்காதது போல, புலம்பித் தீர்த்த தாரைக்கு நேரடியாகப் பதில் கூறாமல், அவள் முன்னிலையில் சுக்ரீவனையும், அங்கதனையும் வைத்துக்கொண்டு, இராமன் பேச ஆரம்பித்தான்....

## பகுதி –34

"அங்கதா... ஒன்னோட அன்னை, நான் நீதி தவறிட்டேன்னு குற்றச்சாட்டை வைக்கறா.....ஆனா, அது சரியா இல்லையான்னு நாம ஆராயறதுக்கு முன்னாடி, நீ நடந்த விஷயத்த எல்லாம் கொஞ்சம் நிதானமா ஞாபகப்படுத்திப் பாரு.......
ஒன்னோட தந்தை, ஒன் சித்தப்பாவ கிஷ்கிந்தைய விட்டுத் துரத்தச்ச, நீ விவரம் தெரியாத சின்னப்பையனா இருந்திருக்கலாம்.....

ஆனா...இப்போ நீ வாலிப வயசுல இருக்கற விவரம் தெரிஞ்ச யுவனா இருக்க!
பொதுவா, செத்துப் போனவாள விமரிசிக்கறது நல்ல செய்கை இல்லைனாலும், இப்போ அதுக்கு அவசியம் ஏற்பட்டிருக்கு! ஒன் சித்தப்பாவத் தப்பாப் புரிஞ்சுண்டு

நாட்ட விட்டுத் துரத்தினதோட ஒன்னோட தந்தை நின்னிருந்தா, ஓரளவுக்கு ஏத்துக்கலாம்.....ஆனா...ஒன்னோட தந்தை.........சொல்லவே கஷ்டமா இருக்கு!...

ஒன்னோட சித்தி ருமையப் பலவந்தப்படுத்தி, தனக்கு அடிமை ஆக்கி, புருஷன் பெண்டாட்டியப் பிரிச்சுருக்கார்...சகோதரனோட மனைவியப் பெத்த மகளா பாக்க வேண்டியவர், ஒறவு முறையயே மாத்திட்டார்...இவ்ளோ தூரம் இன்னிக்குப் பேசற ஒன்னோட அன்னை, அன்னிக்கு என்ன பண்ணியிருக்கணும்?......

தன்னோட புருஷனுக்கு நியாயம், தர்மம் இதெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கணுமா, இல்லையா?.....எந்தக் கோபத்திலயும், ஆத்திரத்திலயும் மொதல்ல இருக்கற வேகம், கடைசி வரைக்கும் நெலைக்கறதில்ல..

இத்தன வருஷங்களில, இந்த விஷயமா, ஒன்னோட தந்தைக்கிட்ட பேசறதுக்கு, ஒன்னோட அன்னைக்கு வாய்ப்பில்லாமயே போயிடுத்தா என்ன?........
ஒன்னோட அன்னை மேல, ஒன் தந்தை ப்ரியம் நெறய வெச்சுருந்தார்னு தெரியறது.......

அப்படி இருக்கச்சே, சரியான சந்தர்ப்பம் பாத்து, "நீங்க பண்றது நியாயம் இல்ல"னு வாலிக்கு ஏன் ஒன்னோட அன்னை எடுத்துச் சொல்லல?.......

ஒரு பொண்ணுக்கு இழைக்கப்பட்டிருக்கற அநீதி ஒங்க அன்னைக்கு ஏன் தெரியல?........
ஒரு ஒடன்பிறந்தவனுக்குக் கொடுத்த தண்டனை சரியில்லனு சொல்ல ஏன் ஒன் அன்னைக்கு நா எழல?.......

இத்தனைக்கும், ஒன் அன்னையோட வற்புறுத்தல்னாலதானே, ஒன் சித்தப்பா அன்னிக்கு சிம்மாசனமே ஏறினார்!.......
அத வாலிகிட்ட சொல்றதுக்கு ஒன்னோட அன்னைக்கு, அந்த சந்தர்ப்பத்தில வேணா முடியாம போயிருக்கலாம்.....

அதுக்கப்பறம்... எத்தன காலம் கடந்து போச்சு...எது ஒன்னோட அன்னைய வாயத் தெறக்கவிடாம பண்ணித்து?....சுயநலம்... வெறும் சுயநலம்!........

"நான் வாழ்ந்தா போறும்"னு ஒன் அன்னை நெனச்சுட்டா!..
அதுனால வந்த விபரீதம்தான் இதெல்லாம்........

தன் புருஷனையும், தன்னோட தனயனையும், நேர்வழியில கூட்டிண்டு போக வேண்டிய கடமை, ஒவ்வொரு பொண்ணுக்கும் இருக்கு... அத உதாசீனப்படுத்திட்டு, ஒன்னோட அன்னை தன்வழியில வாழ்க்கைய நடத்தியிருக்கா!...
சுக்ரீவன் திரும்ப வந்துட்டா, தன் புருஷனோட சிம்மாசனத்துக்கு, ஒருவேளப் போட்டியாயிட்டா என்ன பண்றதுங்கற யோசனை, அவள நீதியிலிருந்து விலக வெச்சுருக்கு!

தன்னோட சுகம்தான் பெரிசுன்னு நெனச்சதனால, தன்னோட புருஷனோட தகாத செயல் எதையுமே அவ பொருட்படுத்தல....... பட்டமஹிஷியா இருக்கறதுல அவ்ளோ ஆச!

அதனாலதான், ஒன்னோட தந்தை, ருமையப் பலவந்தப்படுத்தினதக்கூட, அவ பாராட்டல..இப்போ நீ சொல்லு.. விவரம் அறிஞ்சவன்தானே நீ?..
ஒன்னோட சித்திக்கு நேர்ந்த கொடுமை, ஒன்னோட அன்னைக்கு நேர்ந்தா, அவ அதத் தாங்குவாளா?..ஒரு மகனா நீதான் அதப் பொறுத்துப் போவயா?..

நாளைக்கே சுக்ரீவன் இராஜாவானப்பறம், ஒன்னோட தந்தை ருமைக்குப் பண்ண பாவத்த, தாரைகிட்ட சுக்ரீவன் பண்ணாக்க, அத ஒன்னோட அன்னையால தாங்கிக்க முடியுமா?.."

இராமபாணமாய், இராமனது பேச்சு இருந்தது.......
தாரை தனது இரு செவிகளையும் பொத்திக் கொண்டாள்......

இராமன் கடைசியாகக் கேட்ட கேள்வியில், அவள் உடல் அச்சத்தில், புயலில் அகப்பட்ட பூந்தளிராய் நடுங்கியது...... கண்களிலிருந்து தாரைதாரையாக நீர் வழிந்தது...வேதனை தாங்காமல், மார்பை இறுகப் பிடித்துக் கொண்டாள்......
அங்கதனுக்கு அவனது அன்னையின் நிலையை இராமன் காட்டிக்கொடுத்தான்.

"அங்கதா... வாய்வார்த்தயா நான் சொன்னதக் கேட்டே ஒன்னோட அன்னை இவ்ளோ பதட்டமடையறாளே... அப்போ, அன்னிக்கு அந்த அப்பாவி ருமையோட நெலமை எப்டி இருந்திருக்கும்!
ஒன்னப் பெத்தவாளோட மனசாட்சி, அன்னிக்கு எங்க போச்சு?..
இதுக்கெல்லாம் சரியான பதில ஒன்னோட அன்னையச் சொல்லச் சொல்லு..

இதுக்கப்பறமும் நான் நீதி தவறினதா ஒன் அன்னை நெனச்சா, எனக்கு என்ன தண்டனயக் கொடுத்தாலும், நான் அத ஆனந்தமா அனுபவிக்கறேன்.."

பெருமழை ஒன்று அடித்து ஓய்ந்தது போல இராமன் பேசி முடித்தான்.......

## பகுதி –35

இராமனின் பேச்சில் இருந்த நியாயம் அங்கதனின் உள்ளத்தை உலுக்கியது.....
தனது பெற்றோர்களின் தவறுகள் அவன் இதயத்தை உறுத்தியது.......

ஓடிச் சென்று தன் சிற்றப்பனான சுக்ரீவனின் கால்களில் விழுந்தவன், தனது பெற்றோர்களின் பாவத்தைத் தனது கண்ணீரினால் கழுவினான்...நெகிழ்ந்து போன சுக்ரீவன், அங்கதனை வாரி அணைத்தான். தனது மகனின் செய்கை, தாரையினுள்ளும் ஒரு பெரிய மாற்றத்தை விளைவித்தது......

மிகவும் தாமதமாகத் தனது கணவனது தவற்றையும், தன் தவற்றையும் உணர்ந்தவள், இராமனை நோக்கி இருகரம் குவித்து வணங்கினாள்......

"வாய்ச்சொற்கள் என்ன பயனுமில" என்பதாய், அவள் கண்களிலிருந்து பெருகி வழிந்து கொண்டிருந்த அவளது கண்ணீரே, அவளின் மனஓட்டத்தை இராமனுக்கும் சுக்ரீவனுக்கும் விளக்கியது......

சுக்ரீவனை அருகே அழைத்தான் ஸ்ரீராமன்......

"சுக்ரீவா.. இந்த லோகத்துல தப்பு செய்யாதவா யாருமே கெடையாது.. எப்போ ஒருத்தர் தன்னோட தப்புக்காக வருந்தறாளோ, அப்போ அவாள மன்னிக்கறதுதான் பெருந்தன்மை......

ஒன்கிட்ட அந்தப் பெருந்தன்மை இருக்கும்னு நான் நம்பறேன்.."

இராமன் கூறிய நல்லுரையை நயந்த சுக்ரீவன், இராமனின் பாதங்களில் விழுந்து வணங்கினான்.....

"ஹே இராமா... ஒன் பேர்ல ஆணை... இனிமே என்னோட அண்ணிதான் எனக்கு அன்னை!..

இதோ இந்த அங்கதன், என் வயித்தில பொறக்காத பிள்ள.....

இவா ரெண்டு பேரும் என்னிக்கும் கண்கலங்கும்படியா என்னோட சொல்லாலோ, செய்கையாலோ நான் நடக்கவே மாட்டேன்......

இது நான் ஒனக்கு செஞ்சு தர ஸத்யம் இராமா!..என்ன நம்பு.."

இந்த வார்த்தைகளைக் கேட்ட

....இராமனின் முகத்தில் திருப்தி நிலவியது......

....தாரையின் முகத்தில் நிம்மதி படர்ந்தது.......

....அங்கதன் முகத்தில் ஆனந்தமே தெரிந்தது!..

சுற்றி நின்றிருந்த அனைவருமே, சுக்ரீவனின் இந்தப் பேச்சை ஆரவாரம் செய்து, பெருமகிழ்வோடு வரவேற்றனர்......

மொத்தத்தில்...

வாலி வதத்தை தவறு என்ற கண்ணோட்டத்தில் இத்தனை நேரமும் எண்ணிக் கொண்டிருந்தவர்கள் அத்தனைப்பேர் நெஞ்சங்களிலும் ஒரு நல்ல தெளிவு பிறந்தது!..

தர்மாத்மா இராமனின் தடத்தில் தவறு என்றுமே நேருவதில்லை என்பதை,
அன்றிருந்தவர் அத்தனைப்பேரும் உணர்ந்தனர்..

இன்றிருப்பவரும், இராம கடாக்ஷம் உள்ளவராயின் உணருவர்..

உணர மறுப்பவர்க்கு, அந்த இராமனே ஒருநாள் புரிதலைத் தரக்கூடும்......

அதுவரையில், சக்ரவர்த்தித் திருமகனோடு, நாமும் பொறுமையாகக் காத்திருப்போம்...

# நிறைந்தது.

ஊக்கம் அளித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்